கல்கி

KALKI 4.2.90 ரூ. 2.50



வீட்டுவசதி சாதனங்களால் வேலைப்பளு குறைந்ததா?



புதிய
விஸ்ப்பர்
ட்ரை-வீவ்
உறையுடன்
கூடியது.

மற்றொரு
நாப்கின்

ட்ரை-வீவ் பிளாட்டிங் பேப்பர் சோதனை :
1. ஒரு மேஜைக் கரண்டி அளவு நீர் மையை விஸ்ப்பர் மீதும், ஒரு மேஜைக் கரண்டி அளவை வேறு ஏதாவது நாப்கின் மீதும் விடவும்.
2. இரண்டின் மீதும் பிளாட்டிங் பேப்பரை வைக்கவும்.
3. விஸ்ப்பர் மீது வைக்கப்பட்ட தாள் மிக சுத்தமாகவும் மிக உலர்ந்ததாகவும் தோன்றும்.

வேறு எந்த நாப்கினேயும்விட மிக சுத்தமாகவும் மிக உலர்ந்ததாகவும் வைத்துக் கொள்கிறது

ஏனெனில், விஸ்ப்பரில் மட்டுமே 'ட்ரை-வீவ்' என்ற ஒப்பற்ற உறை உள்ளது. இந்த உறை, உங்களிடமிருந்து ஈரத்தை, நாப்கினின் உள்அடுக்கிற்குள் இழுத்துக் கொள்கிறது. ஆகவே அதன் மேற்புறம், எப்போதும் உலர்ந்ததாக இருக்கும், இப்போதுதான் நீங்கள் நாப்கினை மாற்றியது போலத்தோன்றும்.

விஸ்ப்பர், உங்கள் உள்ளாடைக்குள் கச்சிதமாகப் பொருந்திக் கொள்கிறது. நழுவாது, நகராது, காரணம், அதில், அதிக-விரிவான ஒட்டும்பட்டி உள்ளது. அது, நாப்கினை வசதியாக உரிய இடத்தில் வைத்துக் கொள்கிறது.

விஸ்ப்பர் பற்றி ஏதாவது விளக்கம் தேவையா ?
எங்களிடம் ஒரு விசேஷ மிஸ் விஸ்ப்பர் ஸர்விஸ் உள்ளது. இது, விஸ்ப்பர் பற்றியோ பெண்ணின் சுகாதாரம் பற்றியோ உங்கள் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு விளக்கம் தரத் தயாராக உள்ளது.



தொடர்பு கொள்ளவும் இம் முகவரிக்கு:
Ms. Whisper® Service, P.O. Box No. 6276, Bombay 400 011.

பாதுகாப்பின் மிக சுத்தமான மிக உலர்ந்ததான உணர்விற்கு - விஸ்ப்பர்.

CLARION/B/PG/53/203 TAM

மெரீனா மீட்டிங்



ராஜீவ் தலைக்கு மேல் பறந்த செருப்பு!

"தலைவர் ராஜீவ் வாழ்க, புரட்சித் தலைவி வாழ்க" என்று கோஷம் போட்டுக் கொண்டு ஜுரவேகத்தில், கூட்டம் மேடையை நோக்கி முன்னேறியது. மிகக் குறைவான எண்ணிக்கையில் மேடையைச் சுற்றி நின்ற போலீஸ்காரர்களால் கூட்டத்தினரின் வேகத்தைத் தடுக்க முடியவில்லை. 'மைல்ட்' தடியடி நடத்தி, ராஜீவையும், ஜெ.வையும் மேடைக்கு அனுப்பி வைத்தனர்.

மக்கள் அனைவரும் ஆர்வத்துடன் மேடையை நோக்கிக் கையாட்டிக் கொண்டிருக்கும் போதுதான் 'அது' நடந்தது. மேடையின் இடதுபுறத்தில் சுமார் இருபது அடி தூரத்திலிருந்து, ராஜீவ், ஜெ.வை நோக்கிப் பறந்து வந்தது ஒரு செருப்பு! நல்லவேளையாக அவர்கள் தலைக்கு மேலே பறந்து சென்று மேடையின் கடைசியில் விழுந்தது. நிமிடத்துக்குள் செருப்பை வீசிய ஆள் மாட்டிக் கொண்டான். அவனை துவம்சம் செய்து விட்டார்கள் தொண்டர்கள். சரியான பாதுகாப்புத் தராத போலீஸாருக்குச் செமை டோஸ் கொடுத்தார்கள் காங்கிரஸ் தொண்டர்கள்.

ஜெயலலிதா கருநீலப் பச்சை நிறத்தில் மெலிதான ஜரிகையுடன் கூடிய சேலையில் காட்சியளித்தார். மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு பேசுவது போல் பேசினார். அடிக்கடி இடைவெளி தேவைப்பட்டது.

"ஹைதராபாத்துக்கு என் சொந்த வேலையாகச் சென்றேன். தமிழக போலீஸார் அங்கு வந்து என்னை வேவு பார்த்தது மட்டுமல்லாமல், நான் சந்திக்காத ஒரு நபரை (சோபன் பாபு!) சந்தித்ததாக வேறு செய்தியை விதைத்து விட்டார்கள்; இதுதான் தேசிய முன்னணி அரசில் தனி நபருக்குக் கிடைக்கக்கூடிய சுதந்திரமா?" என்று கேள்வி கேட்டார் ஜெ. "எதற்கெடுத்தாலும் டெல்லி மீது பாய்ந்து கொண்டிருந்த திருவாரூர் கருணாநிதி திருவாளர் தேசியம் பிள்ளை ஆகி விட்டார்" என்று ஜெ. குறிப்பிட்ட போது கூட்டத்தில் சிரிப்பு அலை!

ராஜீவ் பேச வந்தார். அவர் ஜெயலலிதா என்று குறிப்பிட்டபோதெல்லாம் கூட்டம் கைதட்டி உற்சாகத்தை வெளிப்படுத்தியது. அடிக்கடி எழும்பிய விஸில் சப்தம் எம்.ஜி.ஆரின் 'ரத்தங்கள்' வந்திருப்பதை உணர்த்தியது. சிதம்பரத்தின் மொழிபெயர்ப்பு சவ சவ.

மேடையில் மூப்பனார் இல்லாதது பளிச்சென்று தெரிந்த விஷயம். மேடைக்குப் பின்புறம், திண்டிவனம் ராமமூர்த்தி, முன்னாள் அமைச்சர் அருணாசலம், எஸ்.கே.டி. ராமச்சந்திரன் போன்ற மூப்பனாரின் ஆதரவாளர்கள், வேர்க்கடலை சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

இரண்டு மணி நேரத்துக்குள் முடிந்து விட்டது கூட்டம். "ஒரு லட்சம் மக்கள் இருப்பார்கள்" என்றார் ஸ்பெஷல் பிராஞ்ச் போலீஸ் ஒருவர். "எவ்வளவு இருந்தால் என்ன...? டி.வி.யில் காட்ட மாட்டானே" என்று முணுமுணுத்தார் காங்கிரஸ் ஆதரவுப் பத்திரிகையாளர்.



— **இல்லப்பா**

படங்கள்: **ராஜன்**

கிரன் பேடி: சமூக விரோதிகளின் சிம்ம சொப்பனம்!

''இந்தியாவின் முதல் பெண் போலீஸ் அதிகாரி கிரன்பேடி. புது தில்லியிலே வக்கீல்கள் கிளர்ச்சி பூகம்பமாய் வெடித்த போது ''பூலான் தேவி'', 'ஜெனரல் டையர்' என்றெல்லாம் பெயர் வாங்கிக் கொண்டவர்! தில்லியின் சாலை விதிகளை மீறி நிறுத்தப்பட்டிருந்த எல்லா வண்டிகளையும் கிரேன் உதவியுடன் அலாக்காக அள்ளிப் போகச் செய்து சிம்ம சொப்பனமாக விளங்கி, 'கிரேன்' பேடி என்ற பட்டப் பெயர் சூட்டப் பெற்றவர்! கிரன்பேடி இன்று பணிபுரிவது போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் துணை இயக்குனராக. ''இன்னர் வீல்'' ஏற்பாடு செய்திருந்த மகளிர் மாநாட்டில் கலந்து கொள்ள சென்னை வந்திருந்த போது ''கல்கி''க்காக அவர் அளித்த சிறப்புப் பேட்டி.

கேள்வி: வக்கீல்கள் கிளர்ச்சியின் எதிரொலியாகத்தான் நீங்கள் இலாகா மாற்றம் பெற்றீர்களா?

பதில்: பதவியில்தான் மாற்றமே தவிர பணியின் நோக்கிலே மாற்றமில்லையே. காவல் துறையின் நோக்கம் சமூகத்தின் சீர்கேடுகளைக் களைந்து சராசரி மனிதனுக்குப் பாதுகாப்பான வாழ்வைத் தருவதுதான். அந்த அடிப்படை நோக்கில் மாற்றமில்லை; ஆனால் அன்று சாதாரண மனிதர்களின் அன்றாட வாழ்விலே நேரடியாகப் பங்கு கொள்ள முடிந்தது. இப்போதோ திரை மறைவில் இருந்து கொண்டு செய்யும் வேலை. என்றாலும் இறுதியில் பயன்பெறுவது அந்தச் சாதாரண மனிதன்தான்... எனக்கு அப்போது ஒன்பது வயது இருக்கும்... பக்கத்து வீட்டுக்காரர் கதறக் கதறத் தன் மனைவியை அடிப்பதைப் பார்த்தேன். அப்போதே முடிவெடுத்து விட்டேன். காவல் துறையில் சேர்ந்து சமூக அநீதிகளைத் தட்டிக் கேட்க வேண்டும் என்று. எந்த இலாகாவில் எந்தப் பதவியில் இருந்தாலும் அதைச் செய்ய முடிகிறதே. அதுவே, போதும்.

கே: உங்கள் மதிப்பீட்டில் இந்தியாவில் போதைப் பழக்கம் எந்த நிலையில் இருக்கிறது?

ப: கட்டுப்பாட்டிற்குள்தான் இருக்கிறது. இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், தமிழ் நாட்டின் சில பகுதிகள் வடகிழக்கு இந்தியாவின் சில பகுதிகள் — இந்த இடங்கள்தான் பிரச்னைக்குரியவை.

கே: சிங்கப்பூர் போன்ற இடங்களில் கையில் போதைப் பொருளுடன் பிடிபட்டாலே மரண தண்டனை என்பது போன்ற கடுமையான சட்டங்கள் உள்ளனவே. இங்கே எப்படி...?

ப: 1989 மே முதல் இது சம்பந்தமான சட்டம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட எடைக்கு மேல் போதைப் பொருளுடன் பிடிபட்டவர்கள், இரண்டாவது முறையாகக் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டவர்கள்; போன்றவர்களுக்குத் தண்டனை கடுமையாக்கப்பட்டிருக்கிறது. அது மரண தண்டனையாகவும் கூடும். குறிப்பாக அரசாங்கப் பணி, கிராமங்களில் 'பட்வாரி'கள் போன்ற பொறுப்பான பதவியில் இருப்பவர்கள் இந்தக் குற்றங்களுக்குத் துணை போனால் அவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என்று இச் சட்டம் சொல்கிறது. உத்தரப் பிரதேசத்தில் பல இடங்களில் இதை நிறைவேற்றியுமிருக்கிறோம்.

கே: கஞ்சா பயிராகும் போது — அது போதைப் பொருளாக மாற்றப்பட்டுக் கடத்தப்படும் போது — அந்தப் பழக்கத்துக்கு அடிமையானவர்களால் பயன்படுத்தப்படும் போது — எந்தக் கட்டத்தில் நடவடிக்கை தீவிரமாக்கப்பட வேண்டும்?

ப: நச்சுச் செடியை வேருடன் களைய வேண்டும். கஞ்சா பயிராகும் பல மலைப் பிரதேசங்களுக்குப் பலவிதமான இன்னல்களையும், எதிர்ப்புகளையும் சமாளித்துச் சென்று பயிரை எரித்து அழிக்கிறோம். எங்கள் பிரிவு நாடு தழுவிய நிலையில் செயல்படுவதால் மாநிலத்துக்கு மாநிலம் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தியிருக்கிறோம். பயன்படுத்துபவர்களின் பிரச்னையைச் சமாளிப்பதில் சமூகத்தின் பங்கும் அவசியம். பள்ளியிலும் சரி வீட்டிலும் சரி, இப் பழக்கம் முளை விடும்போதே பெற்றோர்களோ, ஆசிரியர்களோ விழிப்புணர்வுடன் கண்டுபிடித்து விட்டால் பாதிப் பிரச்னை தீர்ந்து போகிறது. ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை அளிக்கத் துவங்கினால் நல்வழிப்படுத்துவதும் எளிது.

கே: கஞ்சாப் பயிரை எரித்து அழிப்பதா



கக் கூறுகிறீர்கள். அந்தச் சாம்பலே அடுத்த விளைச்சலுக்கு (!) உரமாகி விடுகிறதாமே?

ப: ஆம். அதுவும் பிரச்னைதான். அதற்காகத்தான் ஒருமுறை எரித்து அழித்த இடங்களை இயன்ற அளவுக்குத் தொடர்ந்து கண்காணிப்பில் வைத்திருக்கிறோம்.

கே: இளைய தலைமுறையினரை இந்தப் பழக்கம் பிடித்து ஆட்கொள்வதற்கு என்ன காரணம்?

ப: பொழுதை இன்பமாகக் கழிக்கலாம் என்ற தவறான எண்ணம் சிலருக்கு. பழக்க தோஷத்தின் பாதிப்பு சிலருக்கு. இதில் என்னதான் இருக்கிறது பார்ப்போமே என்கிற விளையாட்டுப்போக்கான ஆர்வம் சிலருக்கு. இப்போது டீ.வி., வீடியோ போன்ற பொழுதுபோக்குச் சாதனங்கள் பெருகி விட்டதால், இளைஞர்கள் வெளியே சென்று உடல் அயர விளையாடுவதையே அடியோடு விட்டு விட்டார்கள். உடற்பயிற்சியும், விளையாட்டும் இளமையின் சக்தியை நல்ல வழியில் செலவிடச் செய்யும் இன்றியமையாத அம்சங்கள். இந்த அம்சங்கள் குறைவதால் சக்தி தவறான திசையில் திரும்பி, தீய பழக்கங்கள் வருகின்றன. ...நல்லவேளையாக மேலை நாடுகளைப் போல இந்தியாவில் குடும்ப உணர்வும், பாசப்பிணைப்பும் நசிந்து விடவில்லை. அதனால்தான் நம் நாட்டைப் பொறுத்தவரை போதைப் பழக்கப் பிரச்னை இன்னும் கட்டுக்குள் இருக்கிறது.

கே: இந்தக் கொடிய பழக்கத்துக்கு ஆளானவர்களுக்குச் சிகிச்சையளித்து நல்வழிப்படுத்தும் முகாம்களும் — காவல் துறையின் பணிக்கு அப்பாற்பட்டதாய் — ஆரம்பித்திருக்கிறீர்கள் போலிருக்கிறது.

ப: (கண்களில் பெருமிதம் கலந்த புன்னகை ஒன்று எட்டிப் பார்க்கிறது) ம். குற்றத்தைக் கண்டுபிடித்துத் தண்டனை மட்டும் அளித்தால் போதுமா? அக் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறு வாழ்வும் அளிக்க வேண்டாமா? அந்த எண்ணத்துடன் ''நவஜோதி'' என்ற பெயரில் டில்லி காவல் நிலையம் ஒன்றிலேயே ஆரம்பிக்கப்பட்ட சிகிச்சை முகாம், இன்று பல மனநல மருத்துவர்கள், சமூக சேவகர்கள், காவல் துறையினர், உதவியுடன் **Delhi Police Foundation** என்ற பெயரில் ஆறு கிளைகளாகப் பரவியிருக்கிறது. காவல் துறைக்காகப் பயிற்சி பெறுபவர்கள் இங்கு வந்து நேரடி அனுபவமும் பெறுகிறார்கள்.

கே: இந்தச் சிகிச்சைகளால் எதிர்பார்க்கும் பலன் கிட்டுகிறதா?

ப: ஏன் இல்லை? ஹோமியோபதி, யோகப் பயிற்சி, மத போதனை, மனத்திண்மை பெறுவதற்கான அறிவுரைகள், சிகிச்சை முடிந்து வீடு திரும்பிய பின்பும் தொடர்ந்து கண்காணிப்பு என்று பல முனைகளிலே தீவிரம் காட்டுவதால் கண்டிப்பாகப் பலன் இருக்கத்தான் செய்கிறது. மற்ற மாநிலக் காவல் துறையினரும் இம் முறையிலே ஆர்வம் காட்டியுள்ளனர்.

கே: டீ.வி., பத்திரிகைகள் போன்ற மக்கள் தொடர்பு சாதனங்கள் இப் பிரச்னையை எவ்விதத்தில் அணுக வேண்டும்?

ப: இங்கே முக்கியமான கருத்து ஒன்று கூற விரும்புகிறேன். ''இத்தனை லட்ச ரூபாய் மதிப்புள்ள இத்தனை கிலோ ஹெராயின் பிடிபட்டது'' என்று செய்தியைப் போடுகிறார்கள். படிக்கும் ஒருவருக்கு, 'ஆகா, ஹெராயின் கடத்தினால் நாமும் லட்சாதிபதியாகி விடலாம் போலிருக்கிறதே' என்ற எண்ணம் கூட ஏற்படலாம். அதற்குப் பதிலாக ''இத்தனை பேரின் வாழ்வைப் பலி கொண்டிருக்கக் கூடிய ஹெராயின் பிடிபட்டது'' என்று போட்டால் செய்தியே ஓர் எச்சரிக்கையாக அமையும் அல்லவா?

— நிர்மலா சக்கரவர்த்தி

படம்: யோகா

இ டம், லாஸ் ஏஞ்சலஸ் நகரப்
போலீஸ் நிலையம். தேதி, 23.3.1977.
போலீஸ் நிலைய அதிகாரியின் பெயர்.
ஜான் ஃனின். அவர் முன்னிலையில், தன்
மீது சுமத்தப் பட்டிருந்த குற்றச் சாட்டை
மறுத்து வாக்கு மூலம் அளித்துக் கொண்
டிருந்தான் ஜெரி ரோட்ரிகஸ்.
குற்றச்சாட்டு: அவன் மணக்கவிருந்த
கார்லா என்கிற பெண்ணை ஒரு நாற்
காலியைக் கொண்டு முரட்டுத்தனமாகத்
தாக்கியது. சட்டத்தின் வாசகங்களில் —
'ஃபர்ஸ்ட் டிகிரி அஸால்ட்.'
பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலத்திலிருந்து
சுருக்கம்:
''அவளுடைய படுக்கையறைக்குள் நான்
நுழைந்தபோது, கட்டிலில் படுத்திருந்த
கார்லா தவித்துக் கொண்டிருந்தாள். கண்
ணுக்குத் தெரியாத ஒன்று அவளை அழுத்
திக் கொண்டிருந்தது. வெறுமையாகியிருந்த
அவள் தோள்களில் விரல்களின் அழுத்தம்
தெரிந்தது. ஆனால் விரல்கள் தென்பட
வில்லை. பார்த்துக் கொண்டிருக்கும்போதே
அந்தப் பள்ளங்கள் மறைந்தன. திரும்பவும்
தோன்றின. உடனே மறைந்தன.
''தாளமுடியாத சுமையை உதறித்
தள்ளும் முயற்சியில் அவள் போராடிக்
கொண்டிருப்பதைக் கண்டேன். கூச்சலும்
அழுகையும் அவளிடமிருந்து வெளிப்
பட்டன. இப்படி முரட்டுத்தனமாக அவளைப்
பலவந்திப்பது யார்? புரியவில்லை.
''அவளைக் காப்பாற்ற வேண்டும் என்கிற
வேகம் சூழ்ந்தது. ஒரு நாற்காலியை எடுத்து
அதன் மீது தாக்கினேன். கடவுளறிய இது
தான் உண்மை. அவள் உணர்ந்து போராடிய,
என் கண்களுக்குப் புலப்படாத ஏதோ
வொன்றைத்தான் தாக்கினேன். அவளை
யல்ல. இது சத்தியமான வார்த்தை....''

கடந்த சில மாதங்களாகவே கார்லா
வுக்கு அந்தக் கொடுமை நடைபெற்று
வந்தது. அநேகமாக ஒவ்வொரு நாளும்.
ஏன்? எப்படி? — புரியவில்லை. தொடங்கிய
முதல் நாளே அது ஒரு பயங்கரமான
அனுபவமாகத்தான் இருந்தது.
அன்று சற்று நேரம் கடந்துதான் வீடு
திரும்பினாள் கார்லா. கதவைத் திறந்து
உள்ளே நுழைந்ததுமே முகத்தில் பளார்
என்று ஓர் அறை. அடுத்து அவள் திருப்பப்
பட்டாள். கழுத்தில் ஒரு கை பதிந்தது. அது
அவளைத் தள்ளிக் கொண்டு போயிற்று.
படுக்கையறையில் நுழைந்ததும் கட்டிலின்
மீது தள்ளியது. விழுந்த நொடியில் ஒரு
தலையணை அவள் முகத்தில் அழுத்தப்பட,
அதன் பின்.....
அடுத்த நாளும் அதற்கடுத்த நாளும் இது
நீடித்தது. படுக்கையறையில், குளியலறை
யில்.... அவளை இவ்வாறு துன்புறுத்துவது
யார்?
உருவமில்லாமல், சாட்சியமில்லாமல்
இத்தகைய வொரு நிகழ்ச்சி சாத்தியமா?
ஏன் சாட்சியம் இல்லை? விரல்களின்
அழுத்தத்தால் கன்னிச் சிவந்து போன
அங்கங்கள். நகங்களின் கீறலால் ரணமாகி
ரத்தம் கசிந்த காயங்கள். இதற்குமேல் என்ன
வேண்டும்?
உள் மனம் ஆர்ப்பரித்தது, ''ஓடு. ஓடு.
உடனே மருத்துவரிடம் ஓடு.

மருத்துவ மனையில், மனத்தத்துவப்
பிரிவில் பரிசோதனைகள் நடைபெற்றன.
டாக்டர் ஸ்னீடர்மான் கூறினார்.
''உன் காயங்கள் உண்மையானவை
தான். ஒப்புக் கொள்கிறேன். ஆனால் மற்ற
விஷயங்கள்.... அவை பிரமை. வெறும்
பிரமை. உன்னுடைய உள் மனத்தில் பதிந்து
கிடக்கும் சில பிரச்னைகளின் வெளிப்பாடு
அது. அந்தப் பிரச்னைகளைக் கண்டறிய
உன் இளமைக் கால நிகழ்ச்சிகளைப்
பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்....''
அவள் என்ன சொல்லியும் அவர்
கேட்கத் தயாரில்லை. ஆவியுலக சமாசாரம்
என்பதை ஒப்புக் கொள்ள மறுத்து விட்
டார்:
சோர்ந்து போனாள் கார்லா.
அந்தக் கொடுமை தொடர்ந்தது.

ஓர் அமானுஷ்ய அனுபவம்



சிண்டி அவள் சிநேகிதி. கார்லாவை வெளியே அழைத்துப்போக ஒரு நாள் அவள் வீட்டுக்கு வந்தபோது கண்முன்னே நடைபெற்ற நிகழ்ச்சிகள் திகைக்கவைத்தன. அமானுஷத்தின் அட்டகாசங்கள் பற்றி கார்லா ஏற்கெனவே கூறியிருந்தவை உண்மை தான் என்று உணர்ந்து கொண் டாள். துயரம் மிகுந்தது. கார்லாவை அணைத்துக் கொண்டாள். சொன்னாள்.

"ஏதாவது வழி கண்டுபிடிக்க வேண்டும். இதிலிருந்து நீ விடுபட வேண்டும்."

"அப்போ..... அந்தத் துயரத்திலும் கார்லாவுக்கு மகிழ்ச்சி தோன்றியது. "நீ அதை நம்புகிறாய். நான் சொன்னதை நம்பு கிறாய்...." அழுகையின் மத்தியில் சிரிப்பும் வெளிப்பட்டது.

சிண்டி சொன்னாள்.

"அமானுஷம் பற்றி விவரங்கள் சேகரிப் போம். அடுத்த நடவடிக்கை பற்றி அப்புறம் முடிவு செய்வோம். வா, என்னுடன் புறப் படு."

புத்தகக்கடையில்தான் அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது.

க்ராஃப்ட், மெஹரன் என்று இருவர். பாரா சைக்காலஜியில் ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருந்தவர்கள். அவர் களுடன் ஏற்பட்ட சந்திப்பு கார்லாவின் வாழ்க்கையில் ஒரு நம்பிக்கையைக் கொண்டு வந்தது. அவர்களுடன் பேசி முடித்த போது இழந்திருந்த மனோதிடம் திரும்ப வந்தது.

மறு நாள் அவ்விருவரும் அவள் வீட்டுக்கு வந்து காத்திருந்தார்கள். கார்லாவை அந்த ஆவி அலங்கோலம் செய்ய முற்பட்ட போது அதனைப் புகைப்படம் எடுத் தார்கள். ஆராய்ச்சி சாலை சென்று பிரதி

யெடுத்துப் பார்த்த போது அவர்களுக்கு உற்சாகம்.

உண்மை தெரிந்து விட்டது. அடுத்தது, அந்த ஆவியைத் தனிமைப் படுத்த வேண்டும். அதற்கு என்ன செய்யலாம்?

யோசித்தார்கள்.

ஒரு வழி புலப்பட்டது..

ஹீலியம் திரவத்தை அந்த ஆவியின் மீது பீய்ச்சியடிப்பது. தொட்டிகளில் உள்ள ஹீலியம் இவ்வாறு வெளியே பீய்ச்சப் பட்டவுடன், அதன் இயல்புக்கேற்றபடி பனிக்கட்டியாக உறைந்து விடும். அப்படி உறைந்த பனிக்கட்டியினுள்ளே அந்த ஆவி மாட்டிக் கொண்டு விடும்.

இந்த முறையில் வெற்றி நிச்சயம் என்று முடிவு செய்தார்கள்.

எதிர் பார்த்தபடியே அந்த முயற்சி வெற்றியளித்தது.

சின்னஞ்சிறு குன்றாக உறைந்து நின்ற பனிக்கட்டியின் உள்ளே — அதன் கர்ப்பத்தில் அந்த ஆவி.... பச்சை நிற ஒளியாக அது முதலில் தெரிந்தது. பின்னர் நிறம் மாறிச் சிவந்தது. தொடர்ந்து நீலம்..... மஞ்சள்..... ஊதா என்று கண்களைப் பளிரிட்ட வண்ண ஜாலம்.

வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அந்தப் பனிக்குன்று வெடித்துத் தூள் தூளாகிச் சிதற, உள்ளே மாட்டிக் கொண்டிருந்த ஆவி பெரும் ஆரவாரக் கூச்சலுடன் வெளியேறியது....

இனி அந்த ஊரில் வசிப்பது நல்லதல்ல என்று முடிவு செய்து வெளியேறினாள் கார்லா. டெக்ஸாஸில் ஒரு புதிய வாழ்க்கையைத் தொடங்கினாள்.

அவளுடைய அனுபவங்களைப் பற்றிக் கேள்விப்பட்ட ஃப்ராங்க் டெஃபெலிட்டா அவளை நேரில் சந்தித்துப் பல முறை பேசினார். பின்னர் அந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்துப் புத்தகமாக எழுதினார். அந்த நூல் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து அவள் வாழ்க்கை அனுபவத்தைத் திரைப் படமாகவும் தயாரித்து வெளியிட்டார்.

படத்தின் பெயர்: தி என்டிடி.

— சி. ஆர். கே.

"நம்ம வீட்டு நாய் பெண் நாய்ங்கிறதுனால, அதோட நாலு கால்களுக்கும் கொலுசு மாட்டி விடறது. அவ்வளவா நல்லாயில்லே...!"

— பிரபாஸ்கரன்.





• கள்ளிவளவன்

அடிமேல் அடி!

காங்கிரஸ் பிரமுகர் கள்ளிவளவனைச் சமீபத்தில் சந்தித்தபோது ஒரே அதிர்ச்சி! பாராளுமன்றத் தேர்தலுக்கு இரு தினங்களுக்கு முன் சென்னை தி.மு.க அலுவலகம் அருகே காரில் வந்து கொண்டிருந்த அவரும் வேறு இரு காங்கிரஸ் பிரமுகர்களும் குண்டர்களால் தாக்கப்பட்டது நினைவிருக்கும்.... அந்தத் தாக்குதலில் சுப்ரமண்யம் என்பவர் இறந்தே போனார்.

கள்ளிவளவனுக்கு இடது கண்ணில் பலத்த அடி! அது காரணமாக அவருடைய இடது கண் இன்னமும் சுருங்கியே கிடக்கிறது!

கள்ளிவளவன் சொன்னார்: "டாக்டர் அகர்வாலிடம் தான் வைத்தியம் பார்த்துக் கொண்டேன். 'முக்கிய நரம்பு பாதிக்கப் பட்டிருப்பதால் இடது கண் பார்வை போய் விட்டது; நிவர்த்தி செய்ய முடியாது' என்று கூறி விட்டார்."


கண்ணை இழந்த வேதனை ஒருபுறம் இருக்க; நான்கு வருடங்களுக்கு முன் ஈழத் தமிழர் விக்னேஸ்வர ராஜாவுக்காக நெடுமாறன் ஆலோசனைப்படி கள்ளிவளவன் போட்ட ஜாமீன் கையெழுத்து, இப்போது அவரைச் சிக்கலில் மாட்டி வைத்திருக்கிறது! 1984 இல் மீனம்பாக்கம் விமான நிலைய குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட விக்னேஸ்வர ராஜா, கள்ளிவளவன் தயவால் ஜாமீனில் வெளியேறி லண்டனுக்குப் பறந்து விட்டாராம்! சம்மன் மேல் சம்மன் அனுப்பியும் பலனில்லாமல், நீதிமன்றம் இப்போது கள்ளிவளவனைக் கேள்வி கேட்கிறது. தம்முடைய வீட்டிற்கே ஆபத்து வந்துவிடும் போல் இருக்கிறது என்கிறார் கள்ளிவளவன்!

— கௌசல்யா

படம்: ராஜன்

யூ எல் ஐ பி

குறைந்த முதலீட்டில் கூடுதல் பயன்கள்



யூனிட் இணைந்த இன்சூரன்ஸ் திட்டம் வழங்கும்

- **வருமான வரி விலக்கு**
  வருமான வரிச்சட்டம் பிரிவு 80Cயின் கீழ் வருமான வரி விலக்கு.
- **உயர்ந்த வருவாய்**
  ஒவ்வொரு வருடமும் உயர்ந்து கொண்டிருக்கும் டிவிடெண்ட். இவ்வருட டிவிடெண்ட் 13.75% முன் எப்போதும் கண்டிராத அதிகபட்ச அளவு நீங்கள் 10 வருடக் காலத்தில் செலுத்தும் ரூ. 60,000,* ரூ. 1,13,155.97 ஆக உயருகிறது. 15 வருடக் காலத்தில் செலுத்தும் ரூ. 60,000,* ரூ. 1,57,299.74 ஆக உயருகிறது.
- **ஆயுள் காப்பீடு**
  மருத்துவச் சோதனை ஏதுமின்றி, ரூ. 60,000 வரை ஆயுள் காப்பீடு.
- **விபத்து காப்பீடு**
  ஆயுள் காப்பீடு தவிர, எல்லா அங்கத்தினருக்கும் ரூ. 15,000 வரை விபத்துக் காப்பீடு.
- **முதிர்வு போனஸ்**
  10 வருடத் திட்டத்தில் 5% மற்றும் 15 வருடத் திட்டத்தில் 7.5% முதிர்வு போனஸ் இலக்குத் தொகையில் வழங்கப்படுகிறது.

வயது தகுதி : 10 வருட திட்டத்திற்கு 18 முதல் 55 வரை.
15 வருடத் திட்டத்திற்கு 18 முதல் 50 வரை.

இலக்குத் தொகை : ரூ. 3,000 முதல் ரூ. 60,000 வரை.

* முதிர்வு போனஸ் உட்பட்டது. திட்டத்தில் சேரும்போது வயது 25 என எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

UTI.1303.89 TM C

UNIT TRUST OF INDIA
(A Public Sector Financial Institution) H.O. Bombay 400 020.

Regional Office: 45, Second Line Beach, Madras 600 001. Ph: 587433, 580938.

Our Chief Representatives in Tamil Nadu ☐ COIMBATORE • **A Dhanabal,** Ph: 34776 ☐ KANYAKUMARI • **Subash Chandra Bose,** Nagercoil, Ph: 4449 ☐ MADURAI • **M Ramamoorthi,** Ph: 36661, 43179 ☐ NILGIRIS • **M Madhavan Nambiar,** Coonoor, Ph: 6253, 7037 ☐ NORTH ARCOT • **P Narayanan,** Vellore, Ph: 21575 ☐ PERIYAR • **K Jyothi Ramalingham,** Erode, Ph: 71785, 74785 ☐ SALEM/DHARMAPURI • **N K Inkarsal,** Salem, Ph: 66414, 51520 ☐ SOUTH ARCOT • **S Balakrishnan,** Cuddalore, Ph: 377, 46 ☐ THANJAVUR • **K Muthusamy,** Ph: 20374 ☐ TRICHY • **M Ramalingam,** Ph: 41282.

வீட்டுவசதி சாதனங்களால்

சூர்யா நீலகண்டன்:

வீட்டு வேலைக்கு வந்து கொண்டிருந்த பெண்களெல்லாம் ஃபாக்டரி வேலை, கம்பெனி வேலை என்று போய் விடுகிறார்கள். வீட்டு வேலைகளைப் பொறுமையாய் செய்ய ஆள் கிடைக்கறது கஷ்டம். அதனால் வசதி இருந்தா வாஷிங் மிஷின், வாக்குவம் க்ளீனர் மாதிரி உபகரணங்களை வாங்கிப் போட்டுக்கறது ரொம்பச் சௌகரியமாத்தானிருக்கு. வாஷிங் மிஷின் துணிகளை நன்றாகவே துவைக்கிறது. ஆனால் ரொம்ப அழுக்கான துணிகளுக்கு நாம் கையால் கூடுதல் சோப் போட்டு பிரஷ் செய்யணும். ஷர்ட் பட்டன்களையும் பிளவுஸ் கொக்கிகளையும் பொருத்திவிட்டுத்தான் மிஷினில் துவைக்கணும். எலாஸ்டிக் வைத்த உள்ளாடைகளை மிஷினில் துவைக்கக் கூடாது. இவ்வளவு கண்டிஷன்! ஆனால், பெரிய பெரிய பெட்ஷீட்களைக் கூட வீட்டிலேயே துவைச்சுடலாம். சலவை செலவு மிச்சம். சுத்தமும் கூட. துவைத்துக் காய வைக்கும் மாடலாய் இருந்தால் ஃபிளாட் வாசிகளுக்கு ரொம்ப வசதி.

வாக்குவம் க்ளீனர் கார்பெட்களைச் சுத்தம் செய்யவும், இப்போது ஃபாஷனாக இருக்கும் உரை கழற்ற முடியாத குஷன் சோஃபாக்களைச் சுத்தம் செய்யவும் ரொம்ப உதவிகரமாய் இருக்கு. ஆனால் அதை இயக்குவது கொஞ்சம் சிரமமாக உள்ளது.

என்னைக் கேட்டால் வாஷிங் மிஷனும், வாக்குவம் க்ளீனரும் சற்று யோசித்து வாங்கலாம். ஆனால் ஃப்ரிட்ஜ், மிக்ஸி, கிரைண்டர் — இவை இல்லாமல் குடும்பம் நடத்துவது ஒரு நடுத்தரவர்க்கக் குடும்பத் தலைவிக்கு ரொம்பக் கஷ்டம். இவையெல்லாம் நேரத்தை மிச்சப்படுத்தி சிரமத்தைக் குறைக்கும், வாழ்வை எளிமையாக்கும் சாதனங்கள். வேலைக்குப் போகும் பெண்களுக்கு இவை அடிப்படைத் தேவைகள்.

ஒட்டுமொத்தமாகப் பெண்களுக்கு வேலைப் பளு குறைந்ததா என்று கேட்கிறீர்கள்... அது அவரவர் அணுகுமுறையையும் மனப்பான்மையையும் பொறுத்ததுதான். எல்லா மிஷின்களையும் வாங்கிப் போட்டுக் கொண்டு, அவற்றை இயக்கி, பராமரித்து, தவணைகளை ஒழுங்காகக் கட்டி, ரிப்பேரானால் கவனித்து... குடும்பத் தலைவிதான் எல்லாவற்றையும் செய்கிறாள். மேலும், மிஷின்தான் இருக்கிறதே, என்று சில கூடுதல் காரியங்களையும் இழுத்துப் போட்டுக் கொள்வாள். மிஷின்களை நாடாமலே வேலைப் பளுவைக் குறைத்துக் கொண்டுள்ளார் என் உறவுக்காரப் பெண் ஒருவர் — அவர் வீட்டில் முறை வைத்துக் கொண்டு கணவரும் குழந்தைகளும் வீட்டு வேலைகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள். வாழ்க்கை எளிமையாகவும் சுலபமாகவும் இருக்கிறது!

எஸ். கஸ்தூரி:

நான் விறகடுப்பையும் பார்த்தவ, காஸ் அடுப்பையும் பார்த்தவ... இன்னிக்கு இருக்கிற வசதிகள் சொர்க்கம்! என் பிள்ளைகள் படித்த காலத்தில் பத்து மணிக்குப் பள்ளிக்கூடம். அப்படியும் அவங்களை ரெடி பண்ணி அனுப்பறதுக்குள்ள திணறிடும். அதுவும் பெண்களுக்குச் சுடுநீர் வைத்துத் தலைக்குக் குளிப்பாட்டி, காய வைப்பது என்றால் அன்னைக்கு அதிகம் டென்ஷன். இப்போ சுவிட்சைத் தட்டினால் வெந்நீர் கிடைக்குது; இன்னொரு சுவிச்சைத் தட்டினால் ஹேர் டிரையர் தலையைக் காய வைச்சுடுது!



• சூர்யா: ''வேலைக்காரி வரா விட்டாலும் கவலையில்லை.''



• கஸ்தூரி: ''இன்றைய வசதிகள் சொர்க்கம்!''

வேலைப்பளு குறைந்ததா?





• நிஷா: "சோம்பேறிகளாகி விட்டோம்..."

என் வயசுல என்னால உட்கார்ந்து இட்லிக்கும் தோசைக்கும் அறைக்க முடியாது. கிரைண்டர்ல அரைச்சு மாவை ஃப்ரிட்ஜிலே வைச்சுக்கறோம். எவ்வளவு சௌகரியமாய் இருக்கு! எப்பேற்பட்ட சமையலானாலும் ஒரு மணி நேரத்துல முடிஞ்சுடுது. காஸ் அடுப்புலேர்ந்து அத்தனை வீட்டு வசதி சாதனங்களுக்கும் நன்றி சொல்லணும் நாம்!

நிஷா கன்னா:

நம்ம தலைமுறையே ரொம்ப ரொம்ப சோம்பேறியா ஆயிட்டுது! மிஷின்கள் இல்லாமல் ஒரு நாள் கூட நம்மால் இருக்க முடியலியே! நமக்கு உடம்பு வந்தால்கூட இரண்டு நாள் பொறுத்துப் பார்த்துட்டுப் பிறகு டாக்டர்கிட்டே போவோம். ஆனால் மிக்ஸி ரிப்பேர் ஆயிடுச்சோ, உடனே தூக்கிக்கிட்டு மெக்கானிக்கிட்ட ஓடுவோம்... இப்ப வர வேலைக்காரங்களும் சமையல்காரங்களும் வாஷிங் மிஷினும், மிக்ஸியும் இருக்கா'ன்னு கேட்டுக்கிட்டுத் தான் வேலைக்கே சேர்றாங்க! அதோட வீ.ஸி.ஆர். வேற இருக்கணும்னு எதிர்பார்க்கறாங்க... கஷ்டமோ நஷ்டமோ நாமும் எல்லாத்தையும் வாங்கிப் போட்டுடறோம். சினிமா பார்க்கிறோம். அரட்டை, தூக்கம்னு பொழுது போயிடுது. சாப்பிட்ட சாப்பாடு கூட ஜெரிக்கறதில்லை. நம்ம குழந்தைகள் நமக்கு மேல இருக்காங்க. விவரம் தெரிஞ்ச நாள் முதலா ஐஸ் தண்ணியே குடிச்சுப் பழகிக்கறாங்க. வெயிலில் போய் விட்டு வந்து, ஐஸ் தண்ணியைக் குடிச்சு, உடம்புக்கு வரது... டாக்டருக்கு, மருந்துக்கு என்று செலவு. மொத்தத்துல நவீன இயந்திரங்கள்னால நம்முடைய வேலை செய்யும் திறன் குறைஞ்சுடுது... அடுத்த தலைமுறை இன்னும் மோசமா இருக்கும் பாருங்களேன்!

வஸந்தி செல்வராஜ்:

வீட்டு வசதி சாதனங்களால் நிச்சயமா வேலைப் பளு குறைஞ்சிருக்கு. அதனால் சோம்பேறிகளா ஆயிட்டோம்னு சொல்லிட முடியாது. உடலுழைப்புங்கிற முறையிலே வீட்டு வேலைகளைச் செய்தால் மனச் சோர்வுதான் உண்டாகும். அரை மணி நேரத்துல சமையலை முடிச்சுட்டு ஒரு 'வாக்' போய் வந்தால் உடம்புக்கும் 'எக்சர்சைஸ்'; மனசுக்கும் ஆரோக்கியமாய் இருக்கு. குழந்தைகளுக்கு அதிக நேரம் ஒதுக்கி, கூட இருந்து கவனிக்க முடியுது. எவ்வளவோ உபயோகமான மற்ற விஷயங்களையும் செய்யலாம். சிலர் அம்மி, கல்லுரல் அளவுக்கு மிக்ஸி நன்றாக அறைக்காது, சமையல் ருசி மாறி விடும் என்கிறார்கள். அப்படி நாக்கைத் தீட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் என்ன? மேலும் ருசி என்பதும் ஒரு பழக்கம்தான். பழகினால் சரியாகி விடும். ஆவின் பாலுக்கு நாம் பழகி விடவில்லையா?

யதுகிரி ஸ்ரீதர்:

பதினேழாயிரத்து ஐந்நூறு ரூபாயில் பாத்திரம் துலக்கும் மிஷின் (dish washer) கூட



• யதுகிரி: "கிரைண்டரும் மிக்ஸியும் வரப்பிரசாதம் தான்!"

வரப்போகிறது என்கிறார்கள்! அயல் நாட்டினரைப் பார்த்து நாம் சில மிஷின்களை ஆசைப்பட்டு வாங்கிடறோம். நான் ஒரு ஃபாரின் வாக்குவம் க்ளீனர் வாங்கி உபயோகிக்காமலே வைச்சிருக்கேன்! அதை விடத் துடைப்பத்தால் தட்டுவதே சௌகரியமாய்த் தோன்றுகிறது! இந்தியச் சூழலுக்கு ஏற்றபடி இந்த இயந்திரங்களைக் கொஞ்சம் மாற்றி அமைத்தால் இன்னும் பயனளிக்குமோன்னு தோணுது. ஆனால் கிரைண்டரும் மிக்ஸியும் வரப்பிரசாதம்தான். வேலைக்கு ஆள் இருக்கும் போது மிஷின்களின் தேவையை நாம் உணர்வதேயில்லை. யார் உதவியையும் எதிர்பாராமல் சுதந்திரமா நம்ம காரியங்களை நாமே செய்து முடிக்க முடிவதுதான் பெரிய அனுகூலம்.

"இது வாஷிங் மிஷின் யுகம்!"

இருபது ஆண்டுகளுக்கும் மேலாகத் தவணை முறையில் வீட்டு வசதி சாதனங்கள் விற்பனை செய்து வரும் விவேக் அண்ட் கம்பெனி அதிபர் ஸ்ரீநிவாசாவுடன் ஒரு மினி பேட்டி:

கே: வீட்டு வசதி சாதனங்களுள் மிக அதிகமாக விற்பனையாகிறவை எவை?

ப: முதலில் மிக்ஸி, பிறகு பிரஷர் குக்கர் இவைதான்.

கே: தவணை முறையில் கிடைப்பதால் வீட்டு வசதி சாதனங்களின் விற்பனை இவ்வளவு அமோகமாக இருக்கிறது என்று சொல்லலாமா?

ப: அமோக விற்பனைக்குக் காரணம், சில வருடங்களுக்கு முன் ஆடம்பரங்களாகக் கருதப்பட்ட பொருட்கள் இன்று அத்தியாவசியமாகிவிட்டமைதான். இன்றைக்கு எத்தனை ஃபிளாட்டுகளில் அம்மியோ கல்லுரலோ இருக்கிறது? அவற்றை வைத்துக் கொள்ள இடவசதி கூடக் கிடையாது... கையால் மிளகாய்த் தூள் இடித்தால் கட்டடம் அதிரும். கீழ் வீட்டு, பக்கத்து வீட்டுக்காரர்கள் சண்டைக்கு வருவார்கள்... எங்கள் நிறுவனத்தில் விற்கப்படும் வீட்டு வசதி சாதனங்களுள் நாற்பது நாற்பத்தைந்து சதவிகிதம் பொருட்கள் தவணையில் போகின்றன: ஆனால் ஒட்டுமொத்தமான மார்க்கெட்டை எடுத்துக் கொண்டால் தவணை முறை வியாபாரம் இருபத்தைந்து முதல் முப்பது சதவிகிதம்தான்.



* ஸ்ரீநிவாசா

கே: தவணை முறையில் பொருள்கள் கிடைப்பதால் எல்லாவற்றையும் வாங்க ஆசைப்பட்டு நடுத்தரவர்க்கத்தினர் திண்டாடுகிறார்களே?

ப: இது உண்மையல்ல. எங்கள் நிறுவனத்திலேயே தவணை செலுத்தத் தவறுவோர், காலந்தவறிச் செலுத்துவோர் எண்ணிக்கை மிகக் குறைவு. தவணை முறையினால் ஆசை வளர்ந்து விட்டது என்று சொல்ல முடியாது. தேவை இருப்பதால் தான் வாங்குகிறார்கள்.

கே: எந்தச் சாதனத்தைப் பற்றியாவது 'ஏன்தான் வாங்கினேனோ' என்று உங்கள் வாடிக்கையாளர்கள் அலுத்துக் கொண்டதுண்டா?


ப: இல்லை. சில சமயங்களில் குக்கர் போன்றவற்றை அளவில் சிறியதாகவோ பெரியதாகவோ வாங்கி விட்டதற்காக வருத்தப்பட்டதுண்டு.

கே: குக்கரும், மிக்ஸியும் அத்தியாவசியத் தேவைகளாகி விட்டன என்கிறீர்கள்... இவை தவிர வேறு எந்த நவீன சாதனம் இப்போது பிரபலமாக உள்ளது?

ப: 1990கள் வாஷிங் மிஷின் யுகமாக இருக்கும் என்பது உறுதி. இப்போதே பல நடுத்தரவர்க்கக் குடும்பங்களில் இதை வாங்கி விட்டார்கள்.

கே: மேற்கத்திய நாடுகளில் இல்லாத வியர்வையும் அழுக்கும், தூசியும், எண்ணெய்ப் பிசுக்கும், மஞ்சள் கறையும் நம் நாட்டில் துணிகளில் படிகிறது. ஒரு மேற்கத்திப் பாணி இயந்திரம் எப்படி இதற்குச் சரிப்படும்?

ப: தொழில் நுட்பத்தை இந்தியாவுக்கு ஏற்றபடி மாற்றுவது ஒன்றும் பெரிய விஷயமில்லை. அயல் நாட்டு மிக்ஸிகளை விட அதிகம் உழைக்கவல்லவை நமது மிக்ஸிகள். மோட்டாரில் அதிக சக்தி. அதே போல் வாக்குவம் க்ளீனரிலும் பெருக்கி மொழுகும் மாடல் கூடிய சீக்கிரம் வரப் போகிறது. இதுவரை வாஷிங் மிஷின் பற்றி எந்தப் புகாரும் இல்லை. ஒவ்வொரு புதிய மாடலி



ஸ்ரீ கிருஷ்ணா டைல்ஸ் நிர்வாக இயக்குனர் ஸ்ரீ A. R. ராஜ கோபாலன் அவர்களின் பேத்தியும், ஹிந்துஸ்தான் மோட் டார்ஸ் ஸ்ரீ A. சங்கரநாராயணன் அவர்களின் புதல்வியுமான சௌபாக்கியவதி அருணாவுக்கும், திரு. V. S. ராஜன் அவர் களின் புதல்வன் ஸ்ரீ முராரிக்கும் 22.1.90 திங்களன்று சென்னை EMELEM கல்யாண மண்டபத்தில் திருமணம் வெகு விமரிசையாக நடந்தது. திருமண வைபவத்துக்கும் அதை யொட்டி நடந்த சங்கீத கலாநிதி ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் இன்னிசைக் கச்சேரிக்கும் ஏராளமான உறவினர் களும், நண்பர்களும், பிரமுகர்களும் வந்திருந்தார்கள்.

வாழ்க மணமக்கள்!

லும் நுணுக்கமான மாற்றங்கள் செய்து முன்னதைக் காட்டிலும் அதிக உபயோகமானதாக அமைத்து வருகிறார்கள் தயாரிப்பாளர்கள்.

கே: வாக்குவம் க்ளீனரைக் கையாள்வது கஷ்டமாக இருக்கிறது என்கிறார்களே?

ப: ஆரம்பத்தில் எல்லா கருவிகள் பற்றியும் இப்படிப் புகார் வரும். மிக்ஸி பற்றிக் கூட கழுவுவதற்குக் கஷ்டமாயிருக்கிறது, விதவிதமான பிளேடுகளால் குழப்பமுண்டாகிறது என்றெல்லாம் ஆரம்பத்தில் புகார் சொன்னார்கள். இப்போது கேட்டால் 'உயிர்நாடியே மிக்ஸிதான்' என்பார்கள். இப்போது குடிசை வீடுகளில் கூட டி.வி.யுடன் காஸ் அடுப்பும், குக்கரும் வைத்திருக்கிறார்கள். சீக்கிரமே மிக்ஸி இந்த வீடுகளில் இடம் பிடித்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கே: ஸோடா தயாரிக்கக் கூட மிஷின் வந்துள்ளதே? இதை யார் வாங்குவார்கள்?

ப: இந்தக் கருவி சமீபத்தில்தான் அறிமுகமாகியுள்ளது. உயர்மட்ட வகுப்பினர்தான் இப்போதைக்கு இதை வாங்குகிறார்கள். ஆனால் இன்னும் ஒரு வருடத்துக்குள் உயர் மத்தியதர வகுப்பினரிடையே இது பிரபலமாகி விடும். ஏனென்றால் ஒவ்வொரு ஆண்டும் 'ஸாஃப்ட் ட்ரிங்க்ஸ்' விற்பனை பதினைந்து முதல் இருபது சதவிகிதம் வரை அதிகரித்துக் கொண்டிருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. இப்போதே ஒரு தரமான ஸாஃப்ட் ட்ரிங்கின் விலை மூன்று ரூபாய். போகப் போக விலை ஏறலாம். குழந்தைகள் கேட்டால் பெரியோர்களுக்கு மறுக்க மனம் வருமா? வீட்டிலேயே தயாரித்தால் மூன்றில் ஒரு பங்கு செலவு தான் ஆகும். அதனால் சோடா மேக்கரை வாங்கி வீட்டிலேயே செய்ய ஆரம்பித்து விடுவார்கள்.

கே: இப்படி ஒவ்வொன்றையும் வீட்டிலேயே செய்ய ஆரம்பித்தால் குடும்பத் தலைவிக்கு வேலை அதிகமாகிறதே?

ப: அவளே எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்று அவசியமில்லை. முக்கால் வாசி சாதனங்களை எளிதாக இயக்க முடியும். பத்துப் பன்னிரண்டு வயதுக் குழந்தைகளுக்குக் கூட அவற்றை ஜாக்கிரதையாகக் கையாளக் கற்றுத் தரலாம்.

— சீதா ரவி

அட்டையில்: **சுனிதா**

வண்ணப்படமும் புகைப்படங்களும்: **யோகா**

அட்டைப்படம் உதவி: **விவேக் அண்ட் கம்பெனி**

சுப்புடு விழா:

நாற்பது வருஷ நண்பர்கள்




விழாவின் மாபெரும் சஸ்பென்ஸ், ''செம்மங்குடி என்ன பேசப் போகிறார்?'' என்பதுதான். அதனால் அவரைக் கடைசியாகப் பேசச் செய்தார்கள் விழா நிர்வாகிகள்: கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ் + ஸ்ரீராம் குரூப்.

செம்மங்குடி சொன்னார்:

''பல வருஷங்களுக்கு முன்பு, ஒரு சங்கீத விமரிசகர், ஒரு வித்வானைக் காரசாரமாய் விமர்சித்து விட, வித்வான் விமர்சகரிடம், ''என் பாட்டுல குறை சொல்லுகிறீரே, உங்களுக்குப் பாடத் தெரியுமா?'' என்று கேட்டார், கோபமாய். அதற்கு விமரிசகர், ''நீங்கள் கூடத்தான் சில சமயம் சாப்பிடும் போது, உப்பு குறைவு, காரம் அதிகம் என்று சொல்லுகிறீர்கள். ''அப்படின்னா நீங்களே சமையுங்கள்'' என்று உம் மனைவி சொன்னால் எப்படி இருக்குமோ, அப்படி இருக்கிறது நீங்கள் பேசுவது'' என்று பதிலளித்தார். சங்கீத வித்வானைப் போலவே விமரிசகரும் கலைஞர். அதுவும் சுப்புடு சங்கீத ஞானமுள்ள விமரிசகர். எனக்கும் சுப்புடுவுக்கும் நாற்பது வருஷப் பழக்கம். அவர் எழுத்து சக்தி வாய்ந்த எழுத்து. சங்கீதம் பற்றி ஒன்றுமே தெரியாதவரைக் கூட படிக்கத் தூண்டும் விமர்சனம் அவருடையது.''

— மௌஷ்மி.

படம்: யோகா



வட மாநிலங்களில் தோல்வி
நன்றி அறிவிப்புக் கூட்டம்
முதலமைச்சர் ஆகும் முயற்சி தோல்வி
வலிக்குத் தமிழக மக்கள் கொடுத்த ஒத்தடம் ரொம்ப இதமா இருக்கு!
மூக்கு உடைஞ்சாலும் வெற்றி நமக்குத்தான்!
ராஜீவ்
ஜெயலலிதா
ஆட்சி கவிழ்ப்பு முயற்சி
வி.பி.சிங்
போபர்ஸ் ஊழல் குற்றவாளிகள்
லேபிளைக் கவனிங்க!
மத்திய அரசின் உளவுப்படை வேலையாக் கூட இருக்கலாம்!
இங்க மட்டுமா? தமிழ்நாடு பூராவும்தான் இருக்கு!
கருணாநிதி
வாழப்பாடி
(போராளிக்கு)
ராமேஸ்வரம் கடற்கரையில் ஆயுதக்குவியல்
கண் தெரியாத- வங்க யானையை ஆராய்ஞ்ச கதை- யாவுல்ல இருக்கு!



கல்கி

1990 பிப்ரவரி 4
மலர் 48 இதழ் 27
சுக்ல தை 22



முன்னுரிமை போதாது; முதலுரிமை வேண்டும்!

ஒரு நாட்டின் செல்வங்களிலெல்லாம் மிகப் பெரிய செல்வம், அதன் மக்கட் செல்வம்தான் என்பதைப் புரிந்து கொண்டு பேசியிருக்கிறார் பிரதமர். நடப்பு ஆண்டை, சர்வதேசப் படிப்பறிவு ஆண்டாக ஐ. நா. சபை அறிவித்திருப்பதையொட்டி, புது தில்லியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் பிரதமர் பேசும் போது, நாட்டின் மனிதச் செல்வத்தைச் சிறந்த முறையில் அபிவிருத்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும், இதற்கு உதவும்படியாக ஐந்தாண்டுத் திட்டங்களில் முன்னுரிமைகள் மாற்றியமைக்கப்படும் என்றும் கூறியிருக்கிறார்.

'முன்னுரிமை போதாது, கல்விக்கே முதலுரிமை தரப்பட வேண்டும்' என்று நாம் எடுத்துக்காட்ட விரும்புகிறோம். இதே கூட்டத்தில் பேசிய கல்வி அமைச்சர் எம். ஜி. கே. மேனன் கூறியிருப்பது போல், இன்றைக்கும் எழுத்தறிவற்ற மக்கள் இந்தியாவில் இருப்பதானது மக்களின் அடிப்படைத் தேவைகளைத் தீர்த்து வைப்பதில் நாம் அடைந்துள்ள படுதோல்வியையே உணர்த்துவதாகும். மத்திய, மாநில அரசுகள், மொத்த வருவாயில் கல்விக்கு என்று செலவிடும் சதவீதத்தை, உலகின் வேறு பல முன்னேறி வரும் நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தோமேயானால் நாம் எவ்வளவு பெரிய தவறைச் செய்து வருகிறோம் என்பது புரியும்.

நமது பிரச்னைகள் பலவற்றுக்கும் அடிப்படை அறியாமை. சிறந்த கல்வி வழங்கப்படும் போது, பல பிரச்னைகள் தாமாகவே மறைந்து போகும். உடலைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவும் சுகாதாரம் பேணவும் கற்றுத் தந்தால்; எளிய, ஆனால் சத்துள்ள உணவு உட்கொண்டு, யோகாசனம் மூலம் உடல், மன ஆரோக்கியங்களைப் பேணச் செய்தால் நோய் நொடிகள் வெகுவாகக் குறைந்து போகும். சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பது, மரம் வளர்ப்பது, சாலை விதிகளை மீறாமல் இருப்பது போன்றவற்றை அறிந்த சிறுவர்கள், வளர்ந்த பிறகும் கட்டுப்பாடுடன் விளங்குவார்கள். பண்பாடு என்ன என்பதைப் புரிந்து கொண்டால், மனிதாபிமானத்தை உணர்ந்தால், ஜாதி—மத—இன வேற்றுமைகள் மறையும்; ஒருமைப்பாடு ஓங்கும். கல்வி மூலம் தன்னம்பிக்கை பெற்றால், அதுவும் சுயவேலை வாய்ப்புக்கு உதவும் கல்வியாக அமைந்து விட்டால், உடல் உழைப்பில் அவமானம் இல்லை என்பது போதிக்கப்பட்டால் இலவசத் திட்டங்கள் மக்களிடம் செல்லுபடியாகாது. செய்யும் தொழிலே தெய்வம் என்பது தாரக மந்திரமானால், உற்பத்தியாகும் பொருளின் தரம் உயரும்; சர்வதேசச் சந்தையில் நம் பொருள்களுக்கு மதிப்பு அதிகரிக்கும். இவையெல்லாவற்றையும் விட முக்கியமாக, குடும்பக் கட்டுப்பாடு பற்றிய நல்லறிவு வளர்ந்து ஜனத் தொகைப் பெருக்கம் ஓரளவில் நிற்கும். கல்வியுடன் இறையுணர்வும் தேசப்பற்றும் இணைய, நல்லொழுக்கம் நல்வாழ்வாக மலரும்; லஞ்ச ஊழல் நலியும்.

இந்த நன்மைகளையெல்லாம் பெற, இப்போதுள்ள மெக்காலே பாணி பழங் காலக் கல்வித் திட்டம் உதவாது. நவீன விஞ்ஞான யுகத்துக்கு ஏற்ப, நாட்டின் திட்டமிட்ட வளர்ச்சிக்கு உதவும்படியாகக் கல்வித் திட்டம் மாற்றி அமைக்கப்பட வேண்டும். இதைச் செய்தால் மற்றும் ஒரு பெரிய அனுகூலம் உண்டு. அதாவது மேலே விவரித்த பல பிரச்னைகளுக்கு இன்று அரசு செலவழித்து வரும் கோடிக்கணக்கான பணம் கணிசமாக மிச்சமாக, அதனை நாட்டின் தொழில் வளர்ச்சிக்குத் திருப்பி விடலாம். அப்போது வேலை வாய்ப்புப் பெருக, வாழ்க்கைத் தரம் உயர, ஏழைமையை ஒழிப்பது எளிதாகும். எதற்கு முன்னுரிமை தரப்பட்டிருக்க வேண்டுமோ அதற்குத் தராததால்தான் நம் பிரச்னைகளும் தீராமல் தலைவலி தருகின்றன.

'சொல்வது எளிது, சாத்தியமா? பணம் எங்கே இருக்கிறது?' என்று தட்டிக் கழிக்கக் கூடாது. பிரதமரே மேற்படி நிகழ்ச்சியில் ஒரு குரல் அழுதிருக்கிறார்! பல்வேறு காரியங்களுக்குப் பரவலாக நிதி ஒதுக்கி எதையும் ஒழுங்காகச் செய்ய முடியாமல் போவதை விட, முக்கியமான ஒரு பணிக்கு நிறைய நிதி ஒதுக்கி, முழு கவனத்தைச் செலுத்தி அதை நிறைவாகச் செய்து முடிப்பதே சிறந்தது. இம் முறையில், செலவாகும் பணம் விரயமாகாமல் கண்காணிப்பதும் எளிது. கல்வித் துறையில் கணிசமான வெற்றி பெற்ற பிறகு அடுத்ததாக இன்னொன்றில் கவனம் செலுத்தலாம்.

நிதி ஒதுக்கீடுடன் சில யுக்திகளும் உதவும். உதாரணமாக, சில மேல்நாடுகளில் பல்கலைக்கழகம் மூடப்படுவதே இல்லை! இருபத்தி நாலு மணி நேரமும் இயங்குகிறது! தொழிற்சாலை போல் ஷிப்ட் முறையில் மாணவர்கள் படிக்கிறார்கள்! எனவே, இருக்கிற கட்டடங்களில் இருக்கிற உபகரணங்களைப் பயன்படுத்தி, மும்மடங்கு மாணவர் படிக்க வாய்ப்புள்ளது! தேவை, தேசப்பற்றும் தியாக மனப்பான்மையும் அதில் பெருமித உணர்வும் கொண்ட ஆசிரியர்களை ஊக்குவிக்கக்கூடிய அரசியல் தலைமையே.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

வட்டமேஜை

சொல்வது ஒன்று; செய்வது வேறு!

பொங்கல் நன்னாளில், ரூபாய் முன்னூறும் அதற்குக் கீழும் மாத வருவாய் உள்ளவர்களுக்கு இலவச் வேட்டி — சேலை வழங்கப்படும், எனத் தமிழக முதல்வர் கருணாநிதி அறிவித்தார். ஆனால் நடந்தது என்ன? ரூபாய் இருநூறு மாத வருமானம் உள்ள ஒரு பெண்மணி, தாராபுரத்தில் உள்ள ஒரு ரேஷன் கடையில் வரிசையில் நிற்க, கடைக்காரர் கூறியது தூக்கிவாரிப் போட்டது! அதாவது, வருமானம் ரூ 201க்கு மேலும் ரூ 300க்கு உள்ளேயும் இருப்பவர்களுக்கு மட்டும்தான் வேட்டி — சேலை தருவார்களாம்! இதைக் கேட்டு, அங்கு வந்திருந்த பாதி பொதுமக்கள், "என்ன கொடுமை இது" என முணகியவாறு திரும்பிச் சென்றது பார்க்கப் பரிதாபமாக இருந்தது. இவர்கள் கூற்றுப்படி ரூ 201க்கு மேல் வருமானம் படைத்தவர்கள் மட்டும்தான் ஏழைகளோ!? இதுதான் "சொன்னதைச் செய்வோம் செய்வதைச் சொல்வோம்," என்ற வாக்கியத்திற்கு அர்த்தமோ?!

தாராபுரம், சூரியநிலா.

* "கவிதைக்குள் ஒரு கவிதை" பகுதியில் பட்டுக்கோட்டையாரின் பாட்டுக் கவிதையை அற்புதமாக வார்த்தைப் பூ தொடுத்து விளக்கமளித்திருந்தார் திருப்பரங்குன்றம் வாசகர், டி. கே. எஸ். பாராட்டுக்கள்!

கடலூர், க. குற்றால நாதன்.

* பாரதிபாலன் எழுதிய 'முதுமை' உள்ளத்தைத் தொட்ட கதை. ஒவ்வொரு மகனும் கதைநாயகன் வேணுவைப் போல் இருந்தால் முதுமை ஒரு சுமையே அல்ல என்று எண்ணத் தூண்டுமே! கதைக்கு மருதுவின் ஓவியம் மிகவும் சிறப்பூட்டியது.

சென்னை — 45, ஜப்பார் காதர்.

* வேலையில்லாத இளைஞர்கள் படும் உணர்ச்சி பூர்வமான வேதனையை அப்படியே பிரதிபலித்ததோடு, இளைஞர்களின் வேதனையறியா அப்பாக்களுக்கு ஒரு படிப்பினையாக அமைந்திருந்தது, 'விவேகானந்த்'தின் 'மாற்றங்கள்' சிறுகதை.

வலங்கை, எஸ். ரமேஷ்.

* 'அடுத்த நூற்றாண்டு' அசர வைத்த தொடர்! வேகமாக வளர்ந்து வரும் விஞ்ஞான அற்புதங்களை நினைத்துப் பிரமிக்கிறேன். இடை இடையே வேடிக்கையும் விளையாட்டுமாக, சுஜாதா அட்டகாசம் புரிந்திருந்தார்.

வடுகவிருட்சியூர், ஆர். அமுதா.

* 'எக்ஸ்பர்ட் ஸிஸ்டம்' பற்றிய அருமையான விளக்கத்துடன் அடுத்த நூற்றாண்டு தொடரை முடித்திருக்கிறார் சுஜாதா. ஒரு சூப்பர்சானிக் தொடர் அதே சூப்பர்சானிக் வேகத்தில் முடிந்துவிட்டதே! என்று சற்று வருந்தினாலும் அருமைத் தொடரைத் தந்த சுஜாதாவுக்கு நன்றி......! பாராட்டுக்கள்.

திருச்சி — 2, எஸ். நாதன் பாபு.

* 'கல்கி' கலைஞரிடம் கேட்ட கேள்விகள் அதற்கு அவர் தந்த தெளிவான, தீர்க்கமான பதில்கள், இடையிடையே இழையோடிய நகைச்சுவை, இவற்றிற்கெல்லாம் மணிமகுடமாக அட்டை வண்ணப்படம் — அனைத்தும் நெஞ்சை நிறைத்தன.

கல்லிடைக்குறிச்சி, இரா. சண்முகசுந்தரம்.

* "உரிமைகளைப் பெறுவதற்கான விலை இது போன்ற தோல்விகள் தான் என்றால், அந்த விலையைத் தருவதற்கு நாங்கள் எப்போதும் தயாராகவே இருக்கிறோம்" என்ற கலைஞரின் பதிலின் மூலம் அவர் ஒரு முதுபெரும், பக்குவப்பட்ட அரசியல்வாதி மட்டுமல்ல உண்மையிலேயே 'எதையும் தாங்கும் இதயம்' பெற்றிருப்பவர் என்பதை நிரூபிக்கின்றார்.

திருமங்கலம், ப. கருணாநிதி.

* கலைஞரை நிறுவனராகக் கொண்ட 'முரசொலி' முன்பு ராகவானந்தத்தை 'கோமாளி' என்று கேலியுடன் எழுதும். தி.மு.க.வில் அவரைச் சேர்த்துக் கொண்டதற்காகச் சப்பைகட்டு கட்டும் கலைஞர், தமிழக மக்களைக் 'கோமாளிகள்' என்று நினைக்க வேண்டாம்.

வையம்பட்டி, இரா. அல்லி.

* முன்பு எம்.ஜி.ஆருக்கு டி.ஜி.பி. ஆக பி.பி. ரங்கசாமி தேவைப்பட்டார். பிறகு அதே பதவிக்கு அவருக்கு மோகன்தாஸ் தேவைப்பட்டார். இப்போது மு.க.வுக்கு துரை தேவைப்படுகிறார். போலீஸ் அதிகாரிகளை, அரசியல்வாதிகள், பகடைக்காய்களாக மாற்றி விட்டனர். இது ஒரு ஆரோக்கியமான வழிமுறை அல்ல. காவல் துறை என்பது மக்களுக்கான அமைப்பே தவிர, கட்சி இயந்திரத்தை வலுப்படுத்தும் சாதனம் அல்ல.

பொன்மலை, வி. தங்கையன்.

* 21.1.90 கல்கி இதழில் வெளியான பட்டுக்கோட்டை பிரபாகரின் "வல்லமை தாராயோ" என்ற தொடர் நாவலில், கோபி வந்தனாவைத் தேடி அரவிந்த் வீட்டிற்கு ஆட்டோவில் ஏறிச் செல்வதாக உள்ளது. ஆனால், கோபி டாக்ஸியிலிருந்து இறங்குவதாக உள்ளதே!

கோவை — 20, ஆர். ராமச்சந்திரன்.

* நாமக்கல்லுக்கு மிக அருகாமையில் வாழ்ந்து வருகின்ற என் போன்ற "கல்கி" வாசகர்கள் கூட மூக்கின் மீது விரல் வைக்கும்படியாக இருந்தது நாமக்கல்லுக்கு ஒரு விசிட் என்ற கட்டுரை.

உறையூர், உமா கணேஷ்.

* நாமக்கல் ஆஞ்சநேயர், கோயிலின் மேலே விதானம் இல்லாமல் காற்று, மழை, வெயில் எல்லா வற்றையும் தாங்கிக் கொண்டு கம்பீரமாக நிற்பது போல், திருச்சி உறையூர் அருள்மிகு வெக்காளி அம்மனும் விதானம் எதுவும் இன்றிக் கம்பீரமாக நிற்பது தெரியுமா உங்களுக்கு?!

திருச்சி — 16, ஜானகிமைந்தன்.

* அரசியல் பிரச்னையாகட்டும், சமூகப்பிரச்னையாகட்டும், எதனையும் உணர்ச்சிபூர்வமாக அணுகாமல் அறிவுபூர்வமாக ஆராய்ந்து விமர்சிக்கும் வழக்கத்தைக் கொண்டது கல்கி என்பதைத் தலையங்கம் மூலம் மற்றொரு முறை நிரூபித்துவிட்டீர்கள். 'கல்கி'யின் விவேகம் கண்டு பெருமைப்படுகிறேன்!

கும்பகோணம், எஸ். வெங்கடேசன்.

* இந்த வாரத்தலையங்கம் ஒரு பாஸிடிவ் அப்ரோச் என்ற பெருமைமிக்க கிரீடத்தைச் சூட்டிக் கொண்டு பவனிவந்தது.

மதுரை — 20, வே. மாறியாடும் பெருமாள்.



இதயத்தாமரை

வில்லனிடமிருந்து தன்னைத் தற்காத்து, சிறையிலிருந்து திரும்பும் காதலனிடம் ஒப்படைத்துக் கொள்ளும் எச்சரிக்கையில், கண்ணியமிக்க ஒரு காப்டனுக்கு மனைவி போல் நடிப்பதாய்ச் சொல்லி அவரிடம் தாலி வாங்கிக் கொள்கிறார் ரேவதி. தனது முன்கோபத்தால் கொலைக் குற்றத்துக்கு இலக்காகி நாலாண்டு ஜெயில் தண்டனை அனுபவித்து விட்டு வருகிறார் கார்த்திக். தனக்கு வாழ்வு கொடுத்த காப்டனிடம் ரேவதி மனிதாபிமான உணர்வோடு அக்கறை காட்டுவதை காணப் பொறுக்காமல் தவிக்கிறார். ஒரு கட்டத்தில் காப்டனின் பெருந்தன்மை வெளிப்பட, வில்லனிடமிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டி இவர் கொலைகாரராகி, காதலியிடம் தாலி மகிமை பற்றி ஒரு குட்டி லெக்சர் கொடுத்து, அதைக் கட்டியவருக்கே காதலியைச் சொந்தமாக்கி விட்டுத் தான் தியாகியாகிறார்.

சிறையிலிருந்து திரும்பிய பிறகு காதல் உறவில் விழும் நெருடலை கார்த்திக் உணருக்கும் விதம்தான் எத்தனை ஆழம்! ஆசை ஆசையாய்க் காதலியை அழைத்து, அவரே மறந்து போன பிறந்த நாளை அக்கறையாய்க் கொண்டாட மெழுகுவர்த்தி அலங்கார ஜோடனை செய்து, கேக் வெட்டச் செய்து, வாயில் ஊட்டப் போக, காப்டன் நலத்துக்காக விரதமிருக்கும் ரேவதி விலகப் பார்க்கப் பொங்கிப் பொருமுகிறாரே கார்த்திக், அங்கே தூக்கிக் கொண்டு விடுகிறாரே!

ரேவதியின் புதுப் பிரவேசம் — நடிப்பிலும் முதிர்ச்சி தெரிகிறது. காப்டன் ரவியின் மனிதாபிமானத்தில் நெகிழ்ந்து போய் ஒரு புறம் அவர் நலம் பெறப் பிரார்த்தனை, காதல் உரிமை நெருக்கத்தில் தன்னை அடையத் துடிக்கும் கார்த்திக்கின் தவிப்பைத் தணித்து மறுபுறம் அவரைச் சமாளித்துத் தீர வேண்டிய சங்கடம் — இந்தத் தவிப்பு, திணறலில் மனசைத் தொடுகிறார். இருந்தாலும் இ. மு. ரேவதியிடமிருந்த ஏதோ ஒன்று மிஸ்ஸிங்.

கண்ணிய காப்டன் ரவி. அவர் தன் மிலிடரி அனுபவத்தை விவரிக்கும் அனாயாசம், பிஸினஸ் தன்னம்பிக்கைப் பேச்சு, ரேவதியிடம் கல்யாண ஒப்பந்தப் பேச்சு — இந்தத் தரங்களில் ரொம்ப உசரத்துக்குப் போயிட்டார்.

ஏதோ நினைத்துக் கொண்டு ஜனகராஜ் காமெடி டிராக் போட்ட மாதிரி இருக்கிறது. ஆப்செண்ட் மைண்டட் ப்ரொபஸர் வகை.

க்ரூப் டான்ஸ்தான் ஸ்பெஷாலிடி. மொத்தம் ஐந்து வருகிறது. சோக கீதத்துக்குக் கூட ஒரு க்ரூப் டான்ஸ்! அத்தனையும் காமெராவுக்குத் தீனி போடத்தான். படம் முழுக்கக் காமெராவைத் தவிர மற்றதெல்லாமே அமுங்கிப் போகிறது. ஸ்ரீராம் ரொம்ப உசந்த டெக்னிஷியன்தான். அதற்காக அவரை இந்த அளவுக்குச் சர்வாதிகாரி ஆக்கி விட்டு டைரக்டர் அம்பேலாகிப் போயிருக்கணுமா?

பாடல்கள் அநேகமாய் எப்பவோ கேட்ட மாதிரியே இருக்கிறது. பழைய வாசனை.


சில பல புராதன ஜோக்குகளுக்கு நடிப்புக் கைங்கரியம் பண்ணியிருக்கிறார்கள்.

மேட்டுக்குடி வகையறாக்கள் கலை விமரிசனம் பண்ணுவார்களே கண்டி. சராசரிகள் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் இயலாமல் ஒருவித அவஸ்தைக்கு ஆளாகக்கூடும்.

— பி. எஸ். எஸ்.



இன்னிசை பாடும் நேரம்
MIRACLE EYE
SOUND AUTO CONTROL
12 MELODY HOUR STRIKE
Ajanta®
மியூசிகல் கடிகாரங்களிலே இந்தியாவில் முன்னோடிகள்
Ajanta®
QUARTZ
the touch of tomorrow's technology
VANITHA
363.641
3627, 2280, 2457, 2433
0168-212 ATCM
M207
M267
M227
M257
எல்லா பிரபல கடைகளிலும் கிடைக்கிறது
எச்சரிக்கை: எங்கள் தயாரிப்பு அனைத்திலும் 'அஜந்தா' மார்க் உள்ளதா என பார்க்கவும். போலிகளை கண்டு ஏமாறாதீர்.



முன்னேற வழிகாட்டும் பாரதி!

சுய முன்னேற்றத்துக்கு உதவும் நூல்கள் பல. வின்சென்ட் பீல், டேல் கார்னஜி போன்றோரது கட்டுரைகளைப் படிப்பது எனக்கு வழக்கம்.

சமீபத்தில் பாரதியாரின் பாஞ்சாலி சபதத்தைப் படித்தேன். நடுவில் தென்பட்ட ஒரு வரி என்னைத் தூக்கி வாரிப் போட வைத்தது...

சகுனி துரியோதனன் மனசைக் கலைக்க முற்படும் போது, திருதராஷ்டிரன் துரியோதனனைச் சமாதானம் செய்கிறான்:

> "மனக்கவலை வளர்த்திடல்
> வேண்டுவோர் — ஒரு காரணங்
> காணுதல் கஷ்டமோ?"

திரும்பத் திரும்பப் படித்தேன். பெரிய பெரிய "செல்ப் இம்ப்ருவ்மெண்ட்" வல்லுனர்களையெல்லாம் அனாயாசமாய்த் தூக்கியடிப்பது போல அந்த வரிகள் அமைந்திருந்தன; புதுப் புது அர்த்தங்கள் தெரிந்தன!

காரணம் கற்பிப்பதா கஷ்டம்! 'ஒரு காரியம் முடிக்காமலிருக்க; நல் வழியில் செல்லாமலிருக்க,' நடக்குமோ நடக்காதோ என்ற கவலையில் உழல —

எல்லாவற்றுக்கும் புதிய காரணங்களை உண்டாக்கிக் கொண்டே இருக்கலாமே! அதைவிட்டு, என்னதான் செய்ய வேண்டும்? சொல்கிறார் பாரதியார் —

> "வெறும் அவலமொழிகள்
> அளப்பதேன்?.
> தொழில் ஆயிர முண்டவை
> செய்குவீர்!"

அப்புறம் இன்னும் ஊன்றி பாரதியின் பிற கவிதைகளைப் படித்த போது, பல சுயமுன்னேற்றக் கருத்துக்களை ஆங்காங்கே சொல்லியிருக்கிறார் என்பது புரிந்தது.

உ—ம்: "சென்றதினி மீளாது மூடரே"

இப்போதும் ஆங்கில 'செல்ப் இம்ப்ருவ்மெண்ட்' புத்தகங்களைப் படித்து வருகிறேன், இவற்றுக்கெல்லாம் அற்புதமான கவிதை முன்னோடி நம் தமிழ்க் கவிஞர் பாரதியார் என்ற பெருமித உணர்வோடு!

கோயம்புத்தூர், ஈஸ்வர்குமார்.

மணல்வெளி மான்கள் 4

வேசாகப் பசித்தது. அமுதூறுகின்ற பசி.

பக்கத்து வீட்டுத் தாத்தா நீலாம்பர முதலியார் சாவி கொடுக்கும்போதே கிடுக்கிப் பிடி போட்டார்.

''என்ன கௌதமா, சும்மா ரெஸ்டு எடுக்க வந்தியா?''

அவருக்கு வைகாசி பிறந்தால் எண்பது முடியப் போகிறது. சீயக்காய் மெஷினுக்குப் போய் அவரே சீயக்காய் அரைத்து வருவார். கரண்ட் பில் கட்டுவார். கடைகண்ணிக்குப் போய் வருவார்.

என்ன இருந்தாலென்ன அவரது முதுமை எல்லோரையும் பயமுறுத்துகிறது. தெருத் திண்ணையில், ஒரு வெள்ளெழுத்துக் கண்ணாடி மாட்டி, வசமாய் எந்தப் பட்சி சிக்கும் என்று வல்லூறு மாதிரிக் காத்திருப்பார்.

— வேறெதற்குமல்ல — பேச்சுத் துணைக்கு! எல்லோரும் தப்பித்து ஓடுவர். சிலர் முகம் திருப்பி; சிலர் சைக்கிளில்; சிலர் ஓட்ட நடையாக....

அப்படி ஒன்றும் ரம்பமல்ல. சுவாரஸ்யமாகப் பேசுவார். ரங்கூனுக்குப் பிழைக்கப் போய், யுத்த சமயத்தில் கால்நடையாக எல்லையைக் கடந்து வந்து மலேசியாவின் ஈயச் சுரங்கங்களில், ரப்பர் தோட்டத்தில் வேலை செய்து...

கிழவர்களின் இறந்த காலங்களைக் குறித்துக் கேட்க யாருக்குப் பொறுமை இருக்கிறது? கௌதமன் சில சமயம் மனமிரங்குவான்.

இன்றைக்கு மனசில்லை.

குழாயடியில் பெரியம்மா போட்டு வைத்திருந்த ரிஸர்வேஷன் குடத்தில் தண்ணீர் கொட்டிற்று.

''பெரியம்மா இல்லியா தம்பி?''

க்யூ வரிசைக் குடங்களில் அடுத்த குடத்துக்காரம்மா கேட்டாள்.

''இதோ நான் புடிச்சு ஊத்திக்கிறேன் அம்மா.''

அவன் மடமடவென்று சாவியைப் போட்டுக் கதவு திறந்தான்.

பாவடி வீதியில் குழாயடி, எங்கும் போல் குருக்ஷேத்திரம்தான். சாம்ராஜ்ய பாத்யதைப் பெண்களுக்குத்தான். கௌதம்தான் தண்ணீர் பிடிக்கிற ஒரே ஆண்.

சவுந்தரம்மாளுக்கு வந்த வலது கால் வீக்கத்தின் மீது உள்ளூர பலருக்குப் பொறாமை.

''பி.எஸ்.ஸி. படிச்ச புள்ளே. கூச்சப்படாம வந்து தண்ணி எடுத்துக் குடுக்குது பாரேன்! ஆனாலும் சவுந்தரம் யோகக்காரி..!''

அந்தப் பெண்களுக்கு ஏதாவது ஒன்றைப் பார்த்துப் பொறாமைப்பட வேண்டும்!

அவன் உள்ளூரச் சிரித்தான். எட்டு நடை தண்ணீர்க் குடம் சுமந்து, ஐந்து படி ஏறி அண்டா குண்டா, சிமிட்டித் தொட்டி, பாய்லர் என்று நிரப்பினான்.

அதனால் பசித்தது.

இடியாப்பத்தையும் தேங்காய்ப் பாலையும் இன்னும் கொஞ்ச நேரத்திற்கு ஒத்திப் போட்டு, துண்டு எடுத்து முகம் துடைத்தவாறே ஈஸிசேரில் சாய்ந்தான்.

அந்த வீடு நாலு கை தாழ்வாரமுள்ள பெரிய வீடு. அண்ணன் தம்பிகளிடையே பாகம் பிரிந்து கலம் நெல் காய வைக்கும் வாசலின் நடுப்பாதியில் இப்போது குறுக்குச் சுவர்.

''கௌதமா!'' நீலாம்பர முதலியார் சுவரின் அந்தண்டை இருந்து கூப்பிட்டார். அவருடையது தம்பி பாகம். அவர் விற்றுவிட்டுப் பினாங்கு போய் விட்டார். இவர் வாங்கிக் கொண்டு மலேசியாவிலிருந்து வந்திருக்கிறார்.

''என்ன தாத்தா?''

இவனும் இந்தப் புறமிருந்து குரல் கொடுத்தான்.

''போஸ்டுமேன் வந்து உன்னை இன்ஸ்பெக்டர் போலீஸ் ஸ்டேஷனுக்கு வரச் சொல்லி, அனுப்பினதாச் சொன்னாருப்பா!''

''சரி போறேன்.''

''என்ன பண்ணிட்டிருக்கே?''

இன்ஸ்பெக்டர் எதற்கு இப்படி ஆள் மேல் ஆளாகச் சொல்லி அனுப்புகிறார்? என்னமோ மிரட்டல் மாதிரி! நேரடியாக ஆள் அனுப்புகிற வரை போக வேண்டிய அவசியம் புலப்படவில்லை. அவன் சாய்ந்து படுத்தான்.

அதிகாரங்கள் அவனைக் கட்டி இழுக்க முடியாது. அன்பு இழுத்தால் ஓடலாம்.

முதலியார் பதிலுக்குக் காத்திருக்கிற உணர்வு பனிச்சிட்டது.

''படிச்சுக்கிட்டிருக்கேன்'' என்றவாறு சொன்னதை மெய்யாக்க மேஜைக்கு எம்பி ஒரு புத்தகத்தை எடுத்தான்.

''என்ன புஸ்தகம்?''

எரிச்சல் வந்தது.

''பட்டினத்தார்.''

''நல்ல புஸ்தகம்தான் படி படி!'' என்று அவனை மேலே படிக்க விடுகிற உத்தேசமின்றிக் கணீரென்ற குரலில் முதலியார் ஆரம்பித்து விட்டார்.

''பேய் போல் திரிந்து பிணம் போல் கிடந்து, இட்ட பிச்சையெல்லாம் நாய் போல் அருந்தி, நரி போல் உழன்று, நன்மங்கையரைத் தாய் போல் கருதித் தமர் போல் அனைவருக்கும் தாழ்மை சொல்லிச் சேய் போல் இருப்பர் கண்டீர் உண்மை ஞானம் தெளிந்தவரே''

முதலியார் குரலில் நடுக்கமில்லை. கண்டா மணி அடிப்பது போல் சொற்கள் டாண் டாண் என்று வந்தன.

''இது எனக்குத் தேவைதானா?'' என்று ஒரு கேள்வி போட்டு விட்டுக் கௌதம் இடியாப்பத்தை நோக்கி எழுந்தான்.

முதலியார் நிறுத்தி விட்டார்.

மணியோசை அடங்கிய பின்பும் காதில் விழுந்த நாதம் உடம்பில் இன்னும் அதிர்வது போல் பட்டினத்தார் உள்ளே ரீங்கரித்தார்.

''நன்மங்கையரைத் தாய் போல் கருதி தமர் போல் அனைவருக்கும் தாழ்மை சொல்லி....''

பெரியம்மா விவரித்த மாதிரி இடியாப்பம் மோசம் போய் விடவில்லை.

''சார்! சார்!''

வாசற்கதவருகில் ஒரு குரல்.

பிறகு லொட் லொட்டென்று தட்டும் ஒலி. கையல்ல... பின்?

''உள்ள வாங்க.''

நர்நர்ரென்று பூட்ஸ் முறுக்கும் லாட



ஓசையும் தொடர்ந்தன. கையில் லத்தியோடு ஒரு கான்ஸ்டபிள். நிலைச் சுவர் உயரத்திற்கு விறைப்பாக நின்றார்.

''ஐயா இட்டாரச் சொன்னாரு.''

''யாரை?''

''ஒங்க பேருதானே கௌதம்?''

''ஆமாம்.''

''ஒங்களைத்தான்.''

''உக்காருங்க. இடியாப்பம் சாப்பிடுங்களேன்.''

''வேணாம் சார்'' நேரங்கெட்ட நேரமாச்சே. இப்பத்தான் டிபன் பண்றீங்களா?''

''ஆமா... சும்மா ரெண்டு சாப்பிடுங்க.''

''அடேடே... சார் சார்.''

கௌதம் அந்த ஆட்சேபணையைப் பொருட்படுத்தாமல் கையலம்பிவிட்டு ஒரு எவர்சில்வர் தட்டில் நாலு இடியாப்பத்தை வைத்து ஒரு நாற்காலியோடு தூக்கி வந்தான்.

இன்ஸ்பெக்டர் எதற்கு அழைக்கிறார் என்று இவரைக் கேட்க வேண்டாம். தின்று முடித்துக் கையலம்பிக் கதவைப் பூட்டிச் சாவியை முதலியாரிடம் கொடுத்தான் கௌதம்.

வெளியே கான்ஸ்டபிள் வந்த சைக்கிள் வெயிலில் பளபளத்தது.

''நீங்க முன்னே போங்க! நான் வந்துட்டே இருக்கேன்.''

''ஸ்டேஷனுக்கு இல்ல சார்.. ஐயா வீட்டுக்கு. வீடு தெரியுமில்லே? மாதா கோவிலுக்குப் பக்கத்து சந்து! மல்லிகைப் பந்தல் போட்ட முதல் வீடு...''

வீட்டிற்கா?

''சரி வர்றேன்.''

''உக்காருங்களேன். டபிள்ஸ் போயிடலாம்.''

''வேண்டாங்க.''

கான்ஸ்டபிள் சிரித்து விட்டுக் கிளம்பினார்.

கடைத் தெருவில் நுழைந்து சினிமாக் கொட்டகை தாண்டி அந்தச் சந்தில் திரும்பினான். வீட்டு வாசலில் மல்லிகைப் பந்தல்.

கதவு லேசாக ஒந்திரித்திருந்தது.

''சார்...!''

''உள்ளார வாங்க!'' மிரட்டுகிற குரல்.

அவன் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தான்.

பனியன், லுங்கி, டர்க்கி டவல். ரோமக் காடு பனியன் வெள்ளைக்கு மேல் எட்டிப் பார்த்தது. முப்பதை எட்டும் முகம். முன் தள்ளிய மோவாய். இறுகிய உதடுகள் மீது இடைவெளி அதிகம் விட்டு . நிமிர்ந்து நிற்கும் மூக்கு.

கண்களுக்குள் நுழைந்து அந்த இன்ஸ்பெக்டரைச் சந்திப்பது போல் பார்த்துவிட்டு, ''ஐயாம் கௌதம்'' என்றான்.

அவனிடம் அந்தத் தைரியத்தை அவர் எதிர்பார்க்கவில்லை போல் ஒரு முகச் சலனம்.

''உம்... உட்காருங்க'' என்று அவர் நாற்காலியைக் காட்டினார். டேப்பை நிறுத்திவிட்டுக் கேட்டார்:

''க்ராஜுவேட்டா?''

''பி.எஸ்.ஸி.''

''என்ன மேஜர்?''

''கெமிஸ்ட்ரி.''

'ஐ'ஆம் அல்ஃபோன்ஸ் இருதயராஜ்.''

''க்ளாட் டு மீட் யூ!''

— கௌதம் காலதாமதமாகச் சொன்னான்.

''மோட்டார் பம்ப் ரிப்பேர் பண்ணுவீங்களாமே?''

''எஸ்.''

''வேலை கிடைக்கலியா?''

''இதுகூட வேலைதானே?''

''ஐ மீன் எனி கவர்ன்மெண்ட் ஜாப்?''

''இல்லே. அதனால ஒண்ணும் பெரிசா வருத்தமில்லே.''

அவன் சிரிக்க முயற்சி செய்தான். இன்ஸ்பெக்டர் அவனைக் கண்களால் அளந்து கொண்டிருந்தார். சுமுகம் தவிர்த்தான்.

''நீங்க கம்யூனிஸ்டா?''

எதற்கு இந்தக் கேள்வி? அவனுக்குப் புரியவில்லை.

''இல்லை'' என்றான்.

''உங்க சொந்த ஊரு?''

''புல் மேடு.''

''பேரண்ட்ஸ் இருக்காங்களா?''

''அப்பா மட்டும்.''

''என்ன செய்யறார்?''

கௌதமுக்கு இதுதான் லிமிட் என்று தோன்றியது.

''எதுக்குக் கேக்கறீங்க?'' அவன் திருப்பிக் கேட்டான். எவரையும், எங்கும், எப்பொழுதும், என்னவும் விசாரிக்கிற சர்வாதிகாரத்தை இன்ஸ்பெக்டரின் கண்கள் நினைவூட்டின.

கௌதம் மௌனம் சாதித்தான்.

அவன் கேள்விக்குப் பதில் வரட்டுமே!

இன்ஸ்பெக்டர் அனுபவசாலி. நிறையப் பேரைச் சந்திக்கிறவர். புரிந்து கொண்டார்.

''சும்மா தெரிஞ்சுக்கத்தான்.''

''ரிடையர்ட் ஹெட் கான்ஸ்டபிள்.''

''ஐ ஸீ!'' இன்ஸ்பெக்டரின் கண்களில் ஒரு நெருக்கத்தின் ஒளி.

''எந்தக் காலேஜ்ல படிச்சீங்க?''

''ஊரீஸ்.''



''ஹாஸ்டலா?''

''மொதல் வருஷம் மட்டும்!''

கௌதமுக்குச் சும்மா தெரிந்து கொள்வதற்காக இன்ஸ்பெக்டர் இதெல்லாம் கேட்பதாகத் தோன்றவில்லை.

''செகண்ட் இயரும் தேர்ட் இயரும் காட்பாடி எக்ஸ்டென்ஷன்லே ரூம் எடுத்து நாலு பையன்களும் நானுமாத் தங்கிப் படிச்சோம்.''

''ஆக்ஸிலியம் விமன்ஸ் காலேஜ் பக்கத்திலே... இல்லே...?''

தெரிந்ததை உறுதி செய்வதற்காக இவர் கேட்கிறார் என்ற அவன் ஊகம் நிச்சயமாயிற்று.

''என்னை உங்களுக்குத் தெரிஞ்சிருக்கு!'' என்றான் கௌதம்.

''நேரடியா இல்லே... பட் ஐ நோ!'' இன்ஸ்பெக்டர் புன்னகை செய்தார்.

''டென்னிஸ் விளையாடுவீங்க இல்லே...?''

கௌதம் சம்மதமாகச் சிரித்தான்.

''ஸ்டேட் பிளேயர்,'' இன்ஸ்பெக்டரே சொன்னார்.

அவர் தன் மையப் புள்ளியை நெருங்கி வந்து கொண்டிருக்கிறார் என்று கௌதம் உணர்ந்தான்.

''டான் பாஸ்கோ கிரவுண்ட்லே பிராக்டீஸ் பண்ணுவீங்க.''

''நீங்க அங்கே குடியிருந்தீங்களா சார்?''

''இல்லே... பட் ஐ நோ!''

அறிமுகம் புலன் விசாரணை மாதிரி திரும்புவதைக் கௌதமால் பொறுக்க முடியவில்லை.

''ஸோ... வாட் கேன் ஐ டு ஃபார் யூ சார்?'' என்று அமரிக்கையாகத் தன் சுதந்திரத்தை அவருக்கு நினைவூட்டினான்.

''எதுவாவது அவசர வேலையா?'' அவர் மடக்கினார்.

''பூந்துறை ஸ்டேஷன் வரைக்கும் போகணும்.''

''ஐ ஸீ'' இன்ஸ்பெக்டரின் நெற்றிச் சுருங்கிற்று. கண்கள் மீண்டும் அவனைப் பார்த்தன. ஏதோ கேட்க வந்து அவர் தயங்கியவாறே ஒத்திப் போடுவதாகக் கௌதம் நினைத்தான்.

''ஒண்ணுமில்லே. உள்ளார கெணத்திலே மோட்டார் போட்டிருக்காங்க. ஸ்விட்சைப் போட்டால் சவுண்ட் வருது. தண்ணி எடுக்கலே...''

இதுமட்டுமில்லை. இதைச் சொல்லத்தான் அழைத்து விரப்படவில்லை. வேறு ஏதோ உண்டு. அது என்ன?

''பார்க்கலாமா?''

''வாங்க.''

புழக்கடைப் பக்கம் கூட்டிப் போனார்.

உறை வைத்த கிணறு. ஓவர் ஹெட் டாங்க். கீல் பிய்ந்து போன ஜாதிக்காய்ப் பலகைக் கதவு. தள்ளியவுடனே மெயின் ஸ்விட்ச். பக்கத்தில் ஸ்விட்ச் போர்டு.

மோட்டாரைப் போட்டான்.

ருருரும் என்று முனகிக் கொண்டே ஆரம்பித்து ருருருருரும்... ருருருருரும் என்று சக்தியெல்லாம் திரட்டி உறுமிற்று.

கிணற்றை எட்டிப் பார்த்தான். நீர்க்கோலப்பூச்சி குறுக்கும் நெடுக்கும் நெளிந்தது.

''வீட்டுக்காரர் மாசத்துக்கு ஒருதரம் கூட எட்டிப் பார்க்கிறதில்லே. பம்பாயிலே இருக்காரு.'' — இன்ஸ்பெக்டராகச் சொன்னார்.

''டூல் பாக்ஸ் கொண்டு வரல்லே. போய்க் கொண்டு வரட்டுமா?''

''ரயில்வே ஸ்டேஷன் போகணும் னீங்க?''

''சாயங்காலம் நாலு மணிக்கு வரட்டுமா?''

''ஓகே.''

திரும்பி வரும்போதுதான் தெருவைப் பார்த்து மாட்டப்பட்டிருந்த ஒரு போட்டோ கண்ணில் பட்டது. கறுப்பு வெள்ளை. சாதாரண பிரேம் அடித்தது. குடும்ப போட்டோ. நடுவில் பெற்றோர். இடப்புறம் தந்தையின் தோளைப் பிடித்து இன்ஸ்பெக்டர். அம்மாவின் தோளைத் தொட்ட மாதிரி ஒரு சிரித்த முகப் பெண். இவள்... இவள்... பிலோமினா!

பட்டென்று ஒரே இழுப்பில் திரை விலகிய மாதிரி எல்லாம் புரிந்து விட்டது.

இன்ஸ்பெக்டர் அல்ஃபோன்ஸ் இருதயராஜ்தான் ஜாய்—பிலோமினாவின் அண்ணன்.

ஆக, இது மோட்டார் ரிப்பேருமில்லை; அறிமுகமுமில்லை; விசாரணைதான்!

புலன் விசாரணையா? இல்லை, புலன் புலப்படாத விசாரணை.

அவன் போட்டோவைப் பார்ப்பதை அவரும் பார்த்து விட்டார்.

''என் குடும்பம்,'' என்றார்.

''புரியுதே.''

''என் தங்கை ஜாய் பிலோமினா.''

அவர் பார்வையைத் தவிர்த்தவாறு, ''அப்ப நான் நாலு மணிக்கு வர்றேன் சார்!'' என்று விடைபெற்றுக் கொண்டு தெரு முனையில் திரும்பினான்.

ஒரு புல்லட் மோட்டார் சைக்கிள் அவனுக்கு நேரே பிரேக் விழுந்து நின்றது. நிமிர்ந்தான். துளசிங்கம்! — நுணா மரத்து நிலத்தை வாங்கியிருப்பவன்.

''இன்ஸ்பெக்டர் வீட்டிலே இருக்காரா?'' கௌதமைத்தான் அவன் கேட்டான்.

(தொடரும்)

''என்ன அநியாயம் சார் இது... ஒரே ஒரு காப்பி சாப்பிட்டதுக்கு மாவு ஆட்டச் சொல்றீங்களே?''

''சரி, போய்க் கொஞ்சம் சட்னி மட்டும் ஆட்டிக் கொடு!''

— அ. தெய்வசிகாமணி.



முள்ளை வென்ற மலர்

"ஏய்... என்ன நீ. நானும் பார்த்துட்டே இருக்கேன். ரொம்பத்தான் தண்ணி காட்டறியே. என்ன விஷயம்? உன் அப்பன்கிட்டே வரணுமா? சொல்லு. இன்னிக்கே... இப்பவே வர்றேன். நேரிலே வர்றது தர்ம சங்கடம்னா... போன் நம்பர் சொல்லு... பேசறேன்.. ரெண்டிலே ஒண்ணு. அதை விட்டு இப்படி இழுத்தடிச்சுட்டே போனால், சுத்தப்படாது.

— தவறு கூட அவனுக்கு சகஜமாய் வந்தது. அலட்சியமான அவன் தோரணையிலும் மிரட்டல் வார்த்தைகளில் உஷ்ணம் பறந்தது.

யார் இவன்?

யாரோ ஒரு கழுதை.

அப்படித்தான் நினைத்தாள், சௌதாமினி. நினைத்து என்ன செய்ய. அடை மழையில் நனைந்த குயில் குஞ்சு மாதிரி நடுங்கிக் கொண்டிருந்தாள், இப்போது.

இந்த நேரத்தில் இவன் குறுக்கிடுவான் என்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை, அவள்.

தெரிந்திருந்தால் உயிரியல் செய்முறைப் பயிற்சி வகுப்பை 'கட்' அடித்து விட்டு நாலரை மணிக்கே கும்பலோடு கும்பலாய் வீட்டுக்குத் திரும்பி இருப்பாளே.

அவள் இன்று தாமதமாய் வருவாள் என்பது தெரிந்தோ அல்லது யதார்த்தமாகவோ வந்து மடக்கி விட்டான், அவன்.

சர்ச் ரோடு.

போகன் வில்லா மரங்களின் அடைசல்.

பகலில் கூட அந்த வழி இருட்டாய்த்தான் இருக்கும். மழைக் காலம். ஆறரை மணிக்கே இருட்டி விட்ட இந்த நேரத்தில்.. மனித நடமாட்டத்துக்கு அதிக வேலையில்லாத அந்த இடத்தில், இவன்..

'ஹலோ ஜிராக்ஸ் ஸ்ரீதேவி' என்பான்.

'வைஷ்ணவியின் வாரிசு' என்பான்.

'காலையில் இரண்டு நிமிடம் பிந்தினாலும், 'என்னம்மா கண்ணு, லேட். வழியிலே எவன்கிட்டேயாவது எங்கேஜ்மெண்டா' என்று அருவருப்பாய்க் கேள்வி கேட்பான்.

இன்னதுதான் என்றில்லை., வாய்க்கு வந்தது எல்லாம் அவனுக்கு வார்த்தைகள் தான்.

சௌதாமினி, கண்டுகொள்ள மாட்டாள். ஆனாலும் அவன் சைக்கிளோடு சைக்கிளாய் அவள் பின்னிக் கொண்டு வரும் போது ஏற்படும் மரண அவஸ்தையில் அவள் பிஞ்சு உள்ளம் புண்பட்டுப் போகும்.

பள்ளிக்கூடம் வரை வந்து விட்டு, அவள் உள்ளே நுழைந்ததும், 'நாளைக்கு வர்றேன், டார்லிங்' என்று நேராக சைக்கிளைச் செலுத்தி விடுவான்:

கடந்த பத்து நாட்களாக இப்படி ஓர் அனுபவம்!

ஒரு நாள் கூட அவனை அவள் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அவனை யாரென்றே அவளுக்குத் தெரியாது. 'ரெஸ்பான்ஸ்' தரா விட்டால் நாய் மாதிரி ஒதுங்கி விடுவான் என்று நினைத்தாள், சௌதாமினி.

ஆனால், அவன் அந்த ரகம் இல்லை.

ஓயாமல், ஒழியாமல் அவளையே வட்டமடித்தான்.

''என்னம்மா கண்ணு... பதிலைக் காணோம்?''

குழம்பி நின்ற சௌதாமினியின் மௌனத்தைக் கலைத்தான், அவன்.

ஆனால், இன்னும் அவள் அப்படியே தான் நின்றாள்.

''நான் இன்னிக்கு உன்னைச் சும்மா விடப் போவதில்லை.''

'என்ன செய்யப் போகிறாய்' என்று அச்சப்படுகிற மாதிரி நிமிர்ந்தாள், அவள்.

''என்கூட நீ சினிமாவுக்கு வரணும். தியேட்டரில்...'' என்னவோ சொல்ல வந்தான், அவன்.

அதற்குள், சற்றுத் தொலைவில் இரண்டு பேர் வரவே —

''என்றைக்குப் போகலாம் என்பதை

தமிழினியன்

நீயே முடிவு பண்ணி எனக்கு நாளைக்குச் சொல்லணும். மறந்துடாதே. நாளைக்கு.. ஞாபகம்... பை... பை'' என்று கையைக் காட்டிக் கொண்டே பறந்து போனான், அவன்.

வீட்டுக்கு வந்தாள், சௌதாமினி.

ஒரு வயசுப் பெண் வெளியில் கிளம்பினால் வழி வம்பு, வாலிபக் குறும்பு..

சகஜம்தான்.

கேள்விப்பட்டிருக்கிறாள்.

ஆனாலும் இது அதிகம். அத்து மீறிய அயோக்கியத்தனம்.

இதற்கொரு தீர்வு வேண்டும். மீட்சி வேண்டும். யாரிடம் வைக்கலாம் இந்தப் பிரச்னையை.

பெற்றோரிடம்...?

ஆம், அதுதான் சரி.

''ஏன் சௌதா, இத்தனை லேட்?''

''ஜுவாலஜி பிராக்டிகல் கிளாஸ¨ம்மா.''

''என்ன பிராக்டிகலோ — என்ன கிளாசோ, போ. நீ பள்ளிக்கூடத்திலே இருந்து வீட்டுக்கு வர்றதுக்குள்ளே வயிற்றிலே நெருப்பைக் கட்டின மாதிரி இருக்கு.''

''ஏம்மா?'' அம்மாவின் மனசைப் புரிந்து கொண்டே அவள் கேட்டாள்.

''காலம் கெட்டுக் கிடக்குதே. ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆயிடுமோ என்கிற பயம் தான். இதுக்குத்தான் நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். பத்தாவது படிச்சது போதும், மேலே வேண்டாமென்று. கேட்கல்லையே!''

பதில் பேசாமல், அம்மாவையே பார்த்தாள், சௌதாமினி.

''இன்னிக்குக் கூட உன் அப்பாவை ஆபீசிலே கேட்டார்களாம்.''

''என்ன?''

''பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணறதாக இருந்தால் சொல்லுங்கள். நல்ல மாப்பிள்ளை இருக்கிறதென்று, கேட்டிருக்கிறார்கள்.''


''அப்பா என்ன சொன்னார்?''

''எங்களுக்கு ஆசைதான். ஆனால் பொண்ணுக்கு இப்ப இஷ்டமில்லை'ன்னு சொல்லிட்டார். வேறென்ன சொல்ல முடியும்?''

— இப்படி ஒரு சூழலில், சௌதாமினி தன் பிரச்னையை எப்படிச் சொல்ல முடியும்?

சொன்னால் —

'பள்ளிக்கூடம் போனால்தானே அந்த





●● சென்னை நகரில் இருக்கும் ஏராளமான சிலைகளுக்கு, வருடா வருடம், பிறந்த நாளின் போதோ, அல்லது நினைவு நாளின் போதோ மாலைகள் அணிவிக்கப்படுகின்றன. ஒவ்வொரு முறையும் சிலையைச் சுற்றிக் கம்புகளை வைத்து மேடையும், படிக்கட்டுகளும் அமைக்கப்படுகின்றன. வருடா வருடம் இவ்வாறு செய்வது மிகுந்த பணச் செலவு. அதற்குப் பதிலாகச் சிக்கனமான வழி ஒன்றைச் சொல்கிறார் ஐயா சாமி. அதாவது மேடையுடன் கூடிய நிலையான படிக்கட்டுகளைத் தயார் செய்து, தள்ளிக் கொண்டு போகும் வகையில் அதில் சக்கரங்களைப் பொருத்த வேண்டும். எல்லாச் சிலைகளுக்கும் மாலை போட இந்தத் தள்ளு மேடையைப் பயன்படுத்திக் கொள்ளலாம். செலவு மிச்சமாகுமே!

— ஐயா சாமி தாசன்

வம்பெல்லாம் வரும். நாளையிலே இருந்து நீ பள்ளிக்கூடத்துக்கே போக வேண்டாம். காலையிலே அப்பாவை அனுப்பி டி.சி.யை வாங்கி வரச் சொல்லி விடுகிறேன். எந்தத் தடியனும் உன்கிட்டே வாலாட்ட முடியாது.

— ரொம்பச் சுலபமாக பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுவாள், அம்மா.

அப்புறம், அவள் படிப்பு...?

பட்டதாரியாகி உத்தியோகம் வகிக்கும் அவளது எதிர்காலக் கனவுகள்...

வேண்டாம்.

அம்மாவிடம் அந்தச் சிக்கலைச் சொன்னால், அவளுக்குத்தான் ஆபத்து. 'பூமராங்' போலத் திருப்பித் தாக்கிவிடும்.

மறுநாள்.

பள்ளிக்கு வந்ததும், மைதிலியைத் தனியே அழைத்தாள், சௌதாமினி.

''ஏண்டி?''

''யாரோ ஒரு ராஸ்கல்... ஸ்கூலுக்கு வர்ற போதெல்லாம் ரொம்பத் தொல்லை கொடுக்கிறான்.''

''எத்தனை நாளாய்?''

''ரெண்டு வாரமாய்.''

''அப்படியா!'' என்று ஆனந்தப்பட்டாள், அந்த சினேகிதி. ''கன்கிராட்ஸ்!''

''எதுக்கடி வாழ்த்து?''

''உனக்கொரு ராஜகுமாரன் கிடைச்சுட்டான்.''

''மண்ணாங்கட்டி!'' தலையில் அறைந்து கொண்டாள், சௌதாமினி. ''வயிறு எரிந்து பேச வந்தால்... நீ எண்ணெயை ஊத்தறியே. அவன் ஒரு முதல் நம்பர் பொறுக்கி.''

மைதிலி, கண் சிமிட்டினாள்.

''ஆரம்பத்திலே அப்படித்தான் இருப்பான். போகப் போகச் சரியாயிடும் பாரேன். இந்தக் காலத்து 'லவ்வே' இது போலத்தான் ஆரம்பமாகுது.''

''சை... கர்மம்... உன்னிடம் யோசனை கேட்க வந்தேன், பார். என்னை அடிக்கணும்!''

வடிகாலாக்க முடியாத வேதனை வயிற்றைக் குமட்ட, ஏமாற்றத்துடன் திரும்பினாள், சௌதாமினி.

வகுப்பில், சௌதாமினிக்கு நெருக்கமானவள் மைதிலிதான். அவளே, பிரச்னையின் கொடுமையைப் புரிந்து கொள்ளாமல், இப்படி 'ஜோடி' சேர்க்கும் போது வேறு யாரால் உண்மையைப் புரிந்து கொள்ள முடியும்.

''என்னம்மா கண்ணு.. முடிவு பண்ணிட்டியா? என்னிக்கு வர்றே?''

வந்து விட்டான்!

அவன் கண்ணில்படக் கூடாதென்றே கொஞ்சம் முன்னதாக வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தாள், அவள். அப்படியும் சைக்கிளைக் கொண்டு வந்து இடிப்பது போல் நிறுத்தி நின்றான், அவன்.

''என்ன பார்க்கிறாய். நீ அட்வான்சா வீட்டுக்குக் கிளம்புவது இவனுக்கு எப்படித் தெரிந்தது என்று யோசிக்கிறாயா. நான் கில்லாடிடி. உம்... சொல்லு. என்னிக்கு வர்றே?''

''அது... இன்னும் யோசிக்கல்லை.'' தயங்கித் தயங்கிச் சொன்னாள், அவள்.

''குட்... பேசறியே! என் முயற்சியிலே நல்ல முன்னேற்றம்தான், போ. நீ என்னை நோக்கி வர்றே என்பதற்கு இது ஒரு அறிகுறி. ஸோ... நீ யோசிக்காது போனாலும் கவலை இல்லை. நிறைய டயம் தர்றேன். யோசித்து, ஒழுங்காய், உருப்படியாய்ப் பதில் சொல்லு. ஓ.கே.'' திரும்பினான், அவன்.

''ஒரு நிமிஷம்.''

''என்ன?''

''உன் அட்ரஸ் வேணும். நாளையிலே இருந்து ஸ்கூல் லீவு. உன்னைப் பார்க்க முடியாது. சினிமாவுக்குப் போகும் தேதியை முடிவு பண்ணி நாளைக்கே உனக்குக் கடிதம் எழுதிடுவேன். உனக்கு நாளை மறுநாள் கிடைக்கும்.''

அவன் யோசித்தான்.

''என்ன யோசனை?''

''ஒண்ணுமில்லை. கடிதம், அப்பா கையிலே அகப்படுமே என்று பார்க்கிறேன்.''

''அப்பாவுக்கு ரொம்ப பயப்படுவியா?''

''நோ... நோ... அதெல்லாம் இல்லை. சரி... சரி... நாளைக்கு எழுதி போஸ்ட் பண்ணிடுவாய் இல்லையா. நாளை மறு நாள் போஸ்ட்மேனை வழியிலே மடக்கி வாங்கிக் கொள்வேன்.''

முகவரி எழுதிக் கொடுத்தான், அவன்.

மறுநாள். மாலை ஆறு மணி இருக்கும்.

''சார்!''


வேஷ்டிக் கட்டைச் சரி பார்த்தவராய் ஒரு வழுக்கைத் தலை வெளியில் வந்தார்.



ஆயத்தமாகிவிட்டார் ஆனந்தமான நேரத்தை அனுபவித்திட.


அலுவலகத்தில் ஓயாத உழைப்பு, பதற்றம். ஆனால் இப்போதோ அது ஓடி ஒளிந்து விட்டது. குழந்தைகளோடு குழந்தையாய் அளவற்ற சக்தியுடன் விளையாடுகிறார்.

ஊட்டச் சத்துமிக்க ஒரு கோப்பை ஹார்லிக்ஸ் கொடுத்து நாள் முழுவதும் அவருக்கு வேண்டிய வலிமையும் ஆற்றலும் அளிக்கும் உங்களுக்கே நன்றி.



"ஹார்லிக்ஸில், வலிமைக்கும், ஆற்றலுக்கும், நல்ல உடல் ஆரோக்கியத்துக்கும் தேவையான- புரோட்டீன்ஸ், விட்டமின்ஸ், மினரல்ஸ், கார்போஹைட்ரேட்ஸ் —ஆகிய முக்கிய ஊட்டச்சத்துக்கள் அடங்கியுள்ளன.

அதுவே, நாள் முழுவதும் ஆரோக்கியம் தரும் ஹார்லிக்ஸின் மேன்மை."



சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்

HTA 6224TAM

"யார் அம்மா, நீ?"

"பேர், சௌதாமினி சார். பிளஸ் டு படிக்கிறேன். கன்டோன்மெண்டில் வீடு. அப்பாவுக்கு டி.என்.இ.பி.யில் உத்தியோகம். ஆனால் இப்ப எனக்கு நீங்கள் தான் அப்பா. அந்த நம்பிக்கையிலேதான் என் பிரச்னைக்குப் பரிகாரம் தேடி வந்திருக்கிறேன். உங்களால் உதவ முடியுமா, சார்."

"கட்டாயம் செய்யறேன். உள்ளே வந்து சொல்லு. வா... வாம்மா சௌதாமினி."

"இது.. உங்கள் மகன் பிரகாஷோட அட்ரஸ்தானே?", அவன் நேற்று எழுதிக் கொடுத்ததை அவரிடம் நீட்டினாள், சௌதாமினி.

வாங்கிப் பார்த்து விட்டு, "ஆமாம்... என் மகனோட முகவரிதான். அவனுடைய கையெழுத்துத்தான். என்னம்மா விஷயம்?" என்று விழித்தார், அவர். தன் பையனின் வண்டவாளம் முன்னதாகவே அவருக்கும் கொஞ்சம் தெரியும் போல் இருந்தது. அத் தோரணை.

"சார்... அவர்... அவர்..."

அதுவரை பொங்கிக் கொண்டிருந்த ஆற்றாமையும், துயரமும் அணை உடைந்த வெள்ளமாய் வெடிக்க, தேம்பித் தேம்பி அழுதாள், சௌதாமினி. அழுகையினூடே பிரகாஷ் அவளுக்கு இழைத்து வரும் இம்சைகளை ஒன்று விடாமல் சொல்லி முடித்தாள்."

பெரியவரின் முகம் பாலைவனமாயிற்று.

"அப்படியா... நீ சொல்வதெல்லாம் நிஜமா?"

"சத்தியம், அங்கிள். எனக்கும், உங்கள் மகனுக்கும் ஸ்நானப் பிராப்தி கூடக் கிடையாது. வேண்டுமென்றே அவர் என்னை விடாமல் நச்சுப்படுத்துகிறார், அங்கிள். அவராலே என் நிம்மதி போயிடுச்சு. பாடத்திலே கவனம் குறைஞ்சுடுச்சு. மனசு வெறுத்துப் போயிடுச்சு, அங்கிள். நீங்கள்தான் இந்த ஆபத்திலிருந்து என்னைக் காப்பாற்றணும். மூணு வாரத்துக்கு முன்பு பறிபோன என் நிம்மதியை நீங்கள்தான் மீட்டுத் தரணும். ப்ளீஸ்... உங்கள் காலைத் தொட்டு கும்பிடுறேன். 'என்னைக் காப்பாற்றுங்கள், அங்கிள்.."

அழுது கொண்டே காலில் விழப் போனவளைத் தடுத்து நிறுத்தினார், அவர்.

சற்று முன் அவரது முகத்தில் நிலவிய அமைதி காணாமல் போக, கோபம் குடியேறிக் கொண்டது.

கடைவிழிகளில் கொஞ்சம் போல் ஈரம். மேற்துண்டால் ஒற்றிக் கொண்டார்.

"சௌதாமினி.. என் பையன் செய்த தவறுக்காக முதலில் உன்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்றேன்'மா. ஒரு வயசுப் பெண்ணுக்கு ஏற்படும் இடையூறுகளைப் பற்றி ,எனக்கு நன்றாய்த் தெரியும். ஏன்னா... எனக்கும் உன்னை மாதிரி ஒரு பெண் இருக்கிறாள். ஆனால்... அந்த மாதிரி பிரச்னைக்கெல்லாம் தீர்வு காண இப்படியும் ஒரு வழி இருக்கிறது என்பது உன்னைப் பார்த்துத்தானம்மா நான் புரிந்து கொண்டேன். உன் தைரியத்தையும், சாமர்த்தியத்தையும் பார்க்கிற போது, சந்தோஷமாயிருக்கு."

"தாங்க்யூ, அங்கிள்."

"உன்னை மாதிரி ஊருக்கு நாலு பெண்கள் இருந்தால் என் பிள்ளை போன்ற கழிசடைகளை ரொம்பச் சுலபமாய்த் திருத்தி விடலாம், மகளே. நாளையிலேயிருந்து என் மகன் உன் வழிக்கே வர மாட்டான். அதுக்கு நான் கியாரண்டி. நீ... நீ... தைரியமா போயிட்டு வாம்மா... இப்படி ஒரு பிள்ளையைப் பெற்ற இந்த அங்கிளை மறுபடியும் கேட்கிறேன் மன்னிச்சுடும்மா..." பெரியவரின் குரல் தழுதழுத்தது.

"ஸாரி, அங்கிள்."

சந்தோஷமான வருத்தத்துடன் தெருவில் இறங்கினாள், சௌதாமினி.

வைக்கோல் போருக்குள்ளே வைரமணி!

கோயில்களில் முடி காணிக்கை செலுத்துகிறோம் அல்லவா? அந்த முடி, ஏராளமான அன்னியச் செலாவணியை ஈட்டித்தர இருக்கிறது! தலைமுடியிலிருந்து அமினோ ஆசிட் (amino acid) தயாரிக்க, யூனியன் பிரதர்ஸ் என்ற ஜப்பான் நிறுவனத்துடன் கூட்டாக ஒரு தொழிற்சாலை பாண்டிச்சேரியில் துவங்கப்படுகிறது. இப்பொருள் மருந்துகள், உணவு பதப்படுத்துதல், அழகுச் சாதனங்கள் தயாரித்தல் ஆகியவற்றுக்கு அத்தியாவசியமானது. எட்டு வருட உற்பத்தியை ஜப்பானியக் கம்பெனியே வாங்கிக் கொள்ளும்! இனி கோயில்களுக்கு வெளியே முடி காணிக்கை செலுத்துமிடத்தில் 'பேரம்' அதிகமாகும். திருப்பதியில் ஓர் ஆண்டிற்கு 4000 டன் தலைமுடி (பக்தர்களின் காணிக்கை) கிடைக்கிறது!



நன்றி: பிசினஸ் இண்டியா.

தகவல்: கிருஷ்ணவேணி ரங்கநாதன்.

பொன்னியின் செல்வன்

அத்தியாயம் 53

வானதியின் யோசனை

அருள்மொழிவர்மருக்கும் சிற்றரசர்கள் இருவருக்கும் நடந்த வாக்குவாதத்தைக் கேட்டுக் கொண்டு நின்ற குந்தவை தேவி இப்போது சற்று முன்சென்று, ''தாத்தா! மாமா! வாசலில் நின்றே பேச வேண்டுமா? உள்ளே வாருங்கள்! உங்கள் பேச்சை மீறிப் பொன்னியின் செல்வன் ஒன்றும் செய்து விட மாட்டான்'' என்றாள்.

மலையமானும் வேளாரும் உள்ளே வந்தார்கள். இளைய பிராட்டியைப் பார்த்து, வேளார், ''தாயே! இளவரசர் மட்டும் பட்டத்தை ஏற்றுக் கொள்ளச் சம்மதித்தால் ஒரு தொல்லையும் இல்லை. அவருடைய கட்டளையை நாங்கள் நிறைவேற்ற வேண்டியவர்களாவோம். சக்கரவர்த்தியோ இராஜ்யத்தை எப்போது இறக்கி வைப்போம் என்று இருக்கிறார். காஞ்சியில் கரிகாலர் கட்டியுள்ள பொன் மாளிகைக்குப் போய்த் தம்முடைய கடைசிக் காலத்தை நிம்மதியாகக் கழிக்க விரும்புகிறார்!'' என்றார்.

''மாமா! நீங்கள் இருவரும் வந்த போது நானும் இளவரசரிடம் அதைத்தான் சொல்லிக் கொண்டிருந்தேன். இந்தப் பெண் இடையில் வந்து முறையிட்டாள். அதைக் கேட்டு இளவரசர் மனமிரங்கிச் சிறைக்குப் போய் அவரை விடுதலை செய்ய விரும்பினார்....''

''இந்தப் பெண் யார்? எதற்காக இவள் இப்படி விம்மி அழுகிறாள்?'' என்று வேளார் கேட்டார்.

''தெரிய வில்லையா, மாமா? இவள் தான் சம்புவரையர் மகள் மணிமேகலை...''

''ஓகோ! சம்புவரையர் சிறையில் இருப்பதை எண்ணி அழுகிறாள் ஆக்கும். அழ வேண்டாம், பெண்ணே! உன் தந்தையை விடுதலை செய்து அழைத்து வரும்படி சக்கரவர்த்தி கட்டளை பிறப்பித்து விட்டார். பாதாளச் சிறைக்குப் பார்த்திபேந்திர பல்லவன் போயிருக்கிறான்!'' என்றார் மலையமான்.

''தாத்தா! இவள் தன் தந்தையைப் பற்றி மட்டும் கவலைப்பட வில்லை. வாணர் குலத்து வீரரைப் பற்றிக் கவலைப்படுகிறாள். 'அவரை விடுதலை செய்யுங்கள். இளவரசரை நான்தான் கொன்றேன்' என்று புலம்புகிறாள்!'' என்றாள் இளையபிராட்டி.

''ஓகோ! அப்படி இவள் சொல்லுவதாயிருந்தால் இவளையும் வேண்டுமானால் பாதாளச் சிறையில் கொண்டு போய் அடைத்து விடுவோம். வல்லத்து இளவரசனை விடுவிக்க முடியாது!'' என்றார் பெரிய வேளார்.

மணிமேகலை விம்மிக் கொண்டே குந்தவையைப் பார்த்து, ''அதுதான் நான் கோருவதும், இளவரசி! என்னையும் அவர் இருக்குமிடத்தில் கொண்டுபோய் அடைக்கச் சொல்லுங்கள்!'' என்றாள்.

சேநாதிபதி வேளார் தமது நெற்றியை விரலால் தொட்டுச் சுட்டிக்காட்டி, மெல்லிய குரலில், ''இந்தப் பெண்ணுக்குச் சித்தம் பேதலித்து விட்டதாகக் காண்கிறது!'' என்று கூறினார்.

இதுவரை சும்மா இருந்த வானதி இப்பொழுது பேச்சில் குறுக்கிட்டு ''பெரியப்பா! மணிமேகலையின் சித்தம் சரியாகத்தான் இருக்கிறது. உங்களுக்கும் இருக்கோவலூர்ப் பாட்டனுக்கும் தான் சித்தம் சரியாக

அமரர் கல்கி

இல்லை என்று தோன்றுகிறது. சிறையில் உள்ள வல்லத்திளவரசர் பொன்னியின் செல்வருடைய அருமைத் தோழர். இளைய பிராட்டியிடமிருந்து ஓலை கொண்டு போய் இலங்கையிலிருந்து பொன்னியின் செல்வரை அழைத்து வந்தவர். வீர சொர்க்கம் அடைந்த இளவரசருடைய பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருந்தவர். அவர் மீது குற்றம் சாட்டிச் சிறையில் வைத்திருப்பவர்களுக்குத்தான் சித்தக் கோளாறாக இருக்க வேண்டும்!'' என்றாள்.

''ஆகா! இந்தப் பெண் எப்போது இவ்வளவு வாயாடியானாள்? வானதி! இளைய பிராட்டியிடமிருந்து நீ கற்றுக் கொண்டது இது தானா? பெரியவர்கள் முன்னால் வாயைத் திறக்காமல் சும்மா இருப்பதற்கு நீ இன்னும் பயிலவில்லையா? உன்னை ஏதாவது கேட்டால் பதில் சொல்ல வேண்டும். இல்லா விட்டால் வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டும்!'' என்றார் பெரிய வேளார்.

மலையமான் ''சேனாதிபதி! இந்தக் குழந்தையின் மீது ஏன் கோபித்துக் கொள்கிறீர்கள்? இங்கேயுள்ளவர்களின் மனத்தில் உள்ளதையே இவள் வெளியிட்டாள்!'' என்றார்.

குந்தவை ''ஆம்! மாமா! வானதியை நீங்களும் நானும் இனி மிரட்ட நினைப்பது உசிதமாயிராது. நாளைக்கு அவள் சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினியாகிச் சிம்மாதனத்தில் அமர்வாள். அப்போது அவளுடைய கட்டளையைத் தாங்களும் நானும் நிறைவேற்ற வேண்டியதாகும்!'' என்றாள்.

''அருள் மொழி மட்டும் அதற்கு இசைந்தால் ஒரு தொல்லையும் இல்லையே? மகுடாபிஷேகத்தன்று பாதாளச் சிறையில் உள்ளவர்கள் அத்தனை பேரையும் விடுதலை செய்யும்படி கட்டளையிடலாமே?'' என்றார் மலையமான்.

''தங்களையும் என்னையும் வெளியில் உள்ளவர்கள் அத்தனை பேரையும் பாதாளச் சிறையில் பிடித்துப் போடும்படியும் கட்டளையிடலாம்!'' என்றார் சேநாதிபதி பெரிய வேளார்.

''ஐயா! நீங்கள் இருவரும் பெரியவர்கள். உங்களை மறுத்துப் பேச வேண்டியிருக்கிறதே என்று வருத்தப் படுகிறேன். ஆயினும் அவசரமாகச் செய்ய வேண்டிய காரியத்தை விட்டு விட்டு ஏதேதோ பேசுகிறீர்கள்....'' என்று இளவரசர் கூறுவதற்குள், சேனாதிபதி, ''இளவரசே! சோழ நாட்டின் பட்டத்து உரிமையை நிர்ணயித்துக் குழப்பம் எதுவும் நேரிடாமல் தடுப்பது மிகவும் அவசரமான காரியம் அல்லவா?'' என்றார்.

''சக்கரவர்த்தி ஒருவர் இருக்கிறார் என்பதையே மறந்து விட்டுப் பேசுகிறீர்கள்!'' என்றார் அருள்மொழி.

''நாங்கள் மறக்க வில்லை. சற்று முன் சக்கரவர்த்தியைப் பார்த்து விட்டுத்தான் திரும்பினோம். அவர்தான் இராஜ்யப் பிரச்னையைத் தீர்த்து வைக்க ரொம்பவும் அவசரப் படுகிறார். தீர்த்து வைத்து விட்டுக் காஞ்சியில் கரிகாலர் கட்டிய பொன் மாளிகையில் போய் வசிக்கப் பிரியப் படுகிறார்.''

''இதோ நான் சக்கரவர்த்தியிடம் போகிறேன். வந்தியத் தேவரின் விடுதலைக்குக் கட்டளை வாங்கிக் கொண்டு வருகிறேன். பிறகு, நீங்கள் ஆட்சேபிக்க மாட்டீர்கள் அல்லவா?''

''இளவரசே! சக்கரவர்த்தியிடம் தாங்கள் வந்தியத் தேவனைப் பற்றிப் பிரஸ்தாபிப்பதே உசிதம் அன்று. பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளுடனும் நந்தினி தேவியுடனும் சேர்ந்து சதி செய்து வந்தியத் தேவன்தான் கரிகாலரைக் கொன்றிருக்க வேண்டும் என்று சக்கரவர்த்தி கருதுகிறார்.....''

''ஆகா! அந்த எண்ணத்தை அவர் மனத்தில் உண்டாக்கியது யார்?''

''நாங்கள் அல்ல, இளவரசே! பார்த்திபேந்திரன்தான் அந்த நம்பிக்கையைச் சக்கரவர்த்திக்கு உண்டாக்கியவன்...''

''அப்படியானால் பல்லவரையே நான் போய்ப் பார்க்கிறேன். எந்த ஆதாரத்தைக் கொண்டு அம்மாதிரி குற்றம் சாட்டுகிறார் என்று கேட்கிறேன்.''

''பார்த்திபேந்திர பல்லவனைத் தாங்கள் இப்போது சந்திக்க முடியாது. சக்கரவர்த்தியின் கட்டளையுடன் அவன் சம்புவரையரை விடுதலை செய்து கொண்டு குடந்தைக்குப் போயிருக்கிறான். அங்கே சின்னப் பழுவேட்டரையரையும் மற்றச் சிற்றரசர்களையும் சந்தித்துப் பேசி உடனே அவர்களை அழைத்து வரும்படி சக்கரவர்த்தி சொல்லி அனுப்பியிருக்கிறார். இராஜ்ய உரிமையைப் பற்றிச் சமரசமாகப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று செய்தி அனுப்பியிருக்கிறார். மதுராந்தகருக்கே பட்டம் கட்டச் சம்மதம் என்றும் தெரியப்படுத்தியிருக்கிறார்.''

பொன்னியின் செல்வர் முகமலர்ச்சியுடன் இளைய பிராட்டியையும் வானதியையும் பார்த்துவிட்டு, ''ரொம்ப நல்ல செய்தி சொன்னீர்கள்'' என்றார்.

''கொஞ்சங்கூட நல்ல செய்தி அல்ல. குடிகளின் விருப்பத்துக்கும் போர் வீரர்களின் கருத்துக்கும் மாறாக என்று மதுராந்தகன் சோழ சிங்காதனம் ஏறுகிறானோ,

அன்றைக்கே நூறு ஆண்டுகளாக மேன்மை பெற்று வளர்ந்த சோழ சாம்ராஜ்யத்துக்கு விநாச காலம் ஆரம்பமாகும்'' என்றார் சேநாதிபதி.

''அதில் சந்தேகமே இல்லை. ஈழநாட்டி லிருந்து வடபெண்ணை நதி வரையில் குழப் பமும் கலகமும் தொடங்கும்'' என்றார் மலையமான்.

''அதற்கெல்லாம் நீங்கள் இருவருமே தலைமை வகித்து நடத்துவீர்கள் போலிருக் கிறது. அது உங்கள் இஷ்டம். அதற்குள்ளே நான் சக்கரவர்த்தியிடம் விண்ணப்பம் செய்து வந்தியத் தேவரை விடுதலை செய்யப் பார்க்கிறேன்!'' என்று அருள் மொழி வர்மர் அங்கிருந்து வெளியேறுவதற் காகத் திரும்பினார்.

''இளவரசே! சக்கரவர்த்தியிடம் தாங்கள் இந்தக் கோரிக்கையுடன் போக வேண்டாம். அதனால் "பெரும் விபரீதம் விளையும். தேவி! தங்கள் தம்பியைத் தடுத்து நிறுத் துங்கள்!'' என்றார் சேநாதிபதி பெரிய வேளார்.

''ஆம்; குழந்தாய்! வயது சென்ற இந்த கிழவன் சொல்வதைக் கேள்!'' என்றார் மிலாடுடையார்.

''அதனால் என்ன விபரீதம் நடந்து விடும் என்று கருதுகிறீர்கள்?'' என்று குந் தவை கேட்டாள்.

''யாரோ சில பாதகர்கள் ஒரு பொய் யான வதந்தியைக் கிளப்பி விட்டிருக்கிறார் கள். அதைச் சொல்லவும் வாய் கூசுகிறது. பொன்னியின் செல்வர் தான் இராஜ்யம் ஆளும் ஆசையால் வந்தியத் தேவனை அனுப்பிக் கரிகாலரைக் கொல்லச் செய்த தாக நேற்று நம் சேனா வீரர்களிடம் இரண்டு பேர் வந்து சொன்னார்கள்....''

''தெய்வமே! இது என்ன பயங்கரமான அபவாதம்?'' என்றாள் இளைய பிராட்டி குந்தவை.

''அந்த இருவரையும் நம் வீரர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? வடவாற்று வெள் ளத்தில் அமுக்கி அமுக்கி எடுத்துக் கொண் டிருந்தார்கள். நான் தற்செயலாக அங்கே போய் அவர்களைக் காப்பாற்றினேன்...''

பொன்னியின் செல்வர் குறுக்கிட்டு ''இவ்வளவு கொடூரமான அபவாதத்தைச் சோழ நாட்டில் யாரும் நம்பப் போவதில்லை. நம் வீரர்களின் செய்கையிலிருந்தே தெரிய வில்லையா?'' என்றார்.

''இன்றைக்கு நம்ப மாட்டார்கள், இள வரசே! மக்களுடைய இயல்பு தங்களுக்குத் தெரியாது. சில காலத்துக்குப் பிறகு மறு படியும் இந்த வதந்தி கிளம்பும். தங்களை அறியாதவர்கள் சிலர் நம்பக் கூடும். அன்னிய நாடுகளில் இராஜ்யத்துக்காக உற வினர்கள் ஒருவரையொருவர் கொன்று கொள்வது சர்வ சாதாரணமாயிருக்கிறது. ஈழ நாட்டு இராஜ வம்சத்தின் சரித்திரம் தங்களுக்குத் தெரியுமே?.....''

''சேனாதிபதி! பிற்காலத்தில் ஒரு பொய் வதந்தி பரவும் என்பதற்காக இன்றைக்கு என் பிராண சிநேகிதனைப் பாதாளச் சிறை யில் விட்டு வைத்திருக்கச் சொல்கிறீர்களா?''

''பிற்காலத்தில் அல்ல, இளவரசே! இன்றைக்குத் தாங்கள் வந்தியத் தேவனின் விடுதலையில் ஊக்கம் எடுத்துக் கொண் டால் நாளைக்கே சிலர் அந்த வதந்தியில் நம்பிக்கை கொள்வார்கள். சக்கரவர்த்தியின் காதிலும் அது விழும். அதனால் தங்கள் தந்தையின் மனம் எவ்வளவு புண்படும் என்று யோசியுங்கள்!''

பொன்னியின் செல்வரின் திருமுகம் கருமேகத்தினால் மறைக்கப்பட்டபூரணசந்திரனைப் போல் ஆயிற்று. குந்தவை தேவியைப் பார்த்து, ''அக்கா! தாங்கள் என்ன சொல்கிறீர் கள்?'' என்றார்.

இளைய பிராட்டியின் முகம் மிக்க வேத னையைக் காட்டியது. அவர் பெரிய வேளா ரைப் பார்த்து, ''சேநாதிபதி! இத்தகைய கொடூரமான வதந்தியைப் பரப்ப முயலு வோர் யாராயிருக்கும்?'' என்று கேட்டார்.

''வடவாற்றில் நம் வீரர்கள் முழுக்கி முழுக்கி எடுத்துக் கொண்டிருந்தவர்களை நான் தனியே அழைத்துக் கொண்டு போய் அவர்களை நயத்திலும் பயத்திலும் கேட் டேன். சம்புவரையர் மகன் கந்தமாறன் தான் இவ்விதம் சொல்லி அனுப்பியதாகக் கூறினார்கள்!''

அப்போது மணிமேகலை முன் வந்து, ''என் தமையன் காரியத்துக்காக நான் வெட்கப் படுகிறேன். நல்லவனாயிருந்த என் அண்ணன் பழுவூர் இளைய ராணியின் போதனையினால்தான் இப்படிப் பாதக னாகி விட்டான். உண்மையில் ஆதித்த கரி காலரைக் கொன்றவள் நான். என்னைச் சிறைப் படுத்துங்கள்! வல்லத்திளவரசரை உடனே விடுதலை செய்யுங்கள்!'' என்று ஆத்திரமும் அழுகையும் பொங்கக் கூறி னாள்.

இளைய பிராட்டி அவளுடைய முதுகை அன்புடன் தொட்டு, ''மணிமேகலை! சாந்த மாயிரு! நீ இவ்விதம் சொல்வதை யாரும் நம்ப மாட்டார்கள். மேலும் ஏதேனும் அப வாதத்தைக் கிளப்புவார்கள். இந்தச் சிக் கலைத் தீர்ப்பதற்கு வழி கண்டு பிடிக்கலாம்'' என்றாள்.

பிறகு சேநாதிபதியைப் பார்த்து, "ஐயா! தங்களுடைய புத்திமதியை நானும் என் சகோதரனும் ஒப்புக்கொள்கிறோம். இப்போது வல்லத்திளவரசரை விடுதலை செய்ய முயல்வதால் வீண் வதந்திகள் ஏற்பட இடமுண்டு என்பது உண்மைதான். உண்மையான குற்றவாளியை முதலில் கண்டு பிடிக்க வேண்டும். இதைக் குறித்து முதன் மந்திரி அநிருத்தரிடம் நான் கலந்தாலோசிப்பேன். அவருடைய சீடன் ஆழ்வார்க்கடியான் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளைத் தேடிக் கொண்டு போயிருக்கிறான். அவன் ஏதேனும் தகவல் கொண்டு வருவான். பெரிய பழுவேட்டரையரும் பழுவூர் இளைய ராணியும் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் கண்டு பிடிக்கப் பட்டாலும் உண்மை வெளியாகலாம். அதற்கிடையில் நான் இந்தப் பெண்ணிடம் கடம்பூரில் நடந்ததையெல்லாம் கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்! அதுவரையில் பாதாளச் சிறையில் வல்லத்திளவரசர் சௌகரியமாயிருப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யுங்கள். அவர் இந்தப் பயங்கரமான கொலைக் குற்றத்தைச் செய்யவில்லை என்பது நிச்சயம்!" என்றாள்.

இச்சமயத்தில் "எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது, அக்கா!" என்றாள் கொடும்பாளூர் இளவரசி.

"சொல், வானதி!" என்றாள் குந்தவை.

"முன்னொரு தடவை நாம் இருவரும் பாதாளச் சிறைக்குப் போய்விட்டு வந்தோமே, நினைவிருக்கிறதா? அதுபோல் நாம் எல்லாருமாக இன்றைக்கும் போய்ப் பார்த்து விட்டு வருவோம். கடம்பூர் இளவரசியையும் அழைத்



துப் போவோம்!'' என்றாள் வானதி.

குந்தவை பெரிய வேளாளரைப் பார்த்து, ''சேநாதிபதி! தங்கள் குமாரியின் யோசனையைப் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''என் குமாரியும் புத்திசாலித்தனமாகப் பேசக் கூடும் என்று தெரிகிறது. கரிகாலர் இறந்த அன்றிரவு அதே இடத்தில் அவருடன் இருந்தவன் வல்லத்திளவரசன். அவனிடம் விசாரித்தாலும் உண்மை புலப்படலாம்'' என்றார் சேநாதிபதி பெரிய வேளார்.

உடனேயே எல்லாரும் பாதாளச் சிறைக்குச் சென்றார்கள். சின்னப் பழுவேட்டரையர் கோட்டையைவிட்டுப்போவதற்கு முன்னாலேயே தங்க நாணயங்கள் அச்சிடும் வேலையை நிறுத்தி விட்டார்.



ஆகையால், நாணயத் தொழிற்சாலை வெறுமையாக இருந்தது. காவற்காரர்களும் சிலர்தான் இருந்தார்கள். புலிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்த இடத்தைத் தாண்டிச் சுரங்க வழியில் பிரவேசித்துச் சென்று வல்லத்திளவரசன் வந்தியத் தேவன் அடைக்கப்பட்டிருந்த அறையை அடைந்தார்கள்.

ஆனால் அங்கே வந்தியத் தேவனை அவர்கள் காணவில்லை. அவனுடைய அறையில் சுவரில் மாட்டியிருந்த வளையங்களில் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்த வைத்தியர் மகன் பினாகபாணியைக் கண்டார்கள். அவன் இவர்களைக் கண்டதும், ''ஐயோ! ஐயோ! என்னை விடுதலை செய்யுங்கள்! விடுதலை செய்யுங்கள்!'' என்று பரிதாபமாக அலறினான்.

அத்தியாயம் 54

பினாகபாணியின் வேலை

வைத்தியர் மகன் பினாகபாணி அரசாங்கத்தில் பெரிய பதவிக்கு வருவதென்று தீர்மானம் செய்திருந்தான். வந்தியத் தேவனைச் சந்தித்த நாளிலிருந்து அவனுடைய உள்ளத்தில் இந்த ஆசை தோன்றிக் கொழுந்து விட்டு ஓங்கி வளர்ந்து கொண்டிருந்தது.

இதற்கு முன் அவன் ஈடுபட்ட சில காரியங்களில் அவன் அவ்வளவாக வெற்றி பெறவில்லை. நந்தினி தேவி அவனிடத்தில் சிறிது கருணை காட்டியது போலத் தோன்றியது. பிற்பாடு பழுவூர் ராணி அவனை அடியோடு மறந்து விட்டாள். குந்தவை தேவியைப் பார்க்கப் போன போது, அவர் அவனுடன் சரியாக முகம் கொடுத்துப் பேசவும் இல்லை. பழையாறை அரண்மனை வாசலில் வந்தியத்தேவன் மீது 'ஒற்றன்' என்று குற்றம் சுமத்தியதில் அவனிடம் அடிபட்டதுதான் மிச்சமாயிற்றே தவிர லாபம் ஒன்றும் கிட்டவில்லை.

ஆனால் முதன் மந்திரி அநிருத்தர் அவனைக் கூப்பிட்டு அனுப்பிக் கோடிக்கரைக்குச் சென்று ஊமை ராணியைப் பிடித்துக் கொண்டு வரும்படி அனுப்பிய போது, இனித் தான் பெரிய பதவிக்கு வருவது நிச்சயம் என்று முடிவு செய்து கொண்டான். அந்தக் காரியத்தை எப்படியாவது சரிவர நிறைவேற்றி விட்டால் போதும்; முதன் மந்திரியின் தயவினால் அவன் அடையக் கூடாதது ஒன்றுமில்லை. பிறகு, முதற் காரியமாக வந்தியத் தேவனை ஒரு கை பார்க்க வேண்டும். அப்புறம், அந்தப் பூங்குழலியின் கர்வத்தையும் அடக்கி ஒடுக்கிவிட வேண்டும்.

இந்த மாதிரி ஆகாசக் கோட்டைகள் கட்டிக் கொண்டு பினாகபாணி கோடிக்கரை சென்றான். அங்கே கோடிக்கரையில் ராக்கம்மாளை மெள்ள வசப்படுத்திக் கொண்டான். அவள் அவனிடம் ஏமாந்து போனாள். ஆபத்துதவிக் கூட்டத்தில் சேர்ந்தவன் அவன் என்று எண்ணிக் கொண்டு அவர்களுடைய முயற்சிகளைப் பற்றி அவனிடம் பேசினாள். அவள் உதவியைக் கொண்டு ஊமை ராணியைக் கண்டுபிடித்

துத் தஞ்சைக் கோட்டை வாசல் வரையில் கொண்டு வந்து சேர்த்தான்.

இப் பிரயாணத்தின் போதெல்லாம் பினாகபாணியின் உள்ளம் வேலை செய்து கொண்டே இருந்தது. ஊமை ராணி சம்பந்த மான இரகசியங்களை அறியப் பிரயத்தனம் செய்தது. பாதாளச் சிறையில் அவன் ஒரு நாள் அடைப்பட்டிருந்த போது அங்கிருந்த பைத்தியக்காரன் ஒருவன் கூறிய விவரங்கள் நினைவுக்கு வந்தன. அப்போது அவை பைத்தியக்காரனின் உளறலாக அவனுக்குத் தோன்றியது. இப்போது, அவன் கூறிய வற்றில் உண்மையிருக்கும் என்று எண்ணி னான்.

ஊமை ராணி ஏறி இருந்த பல்லக்கு தஞ்சைக் கோட்டைக்கு அருகில் வந்த சமயம் புயலும் மழையும் அடித்து அவள் மீது மரம் முறிந்து விழுந்ததல்லவா? அதனால் ஏற்பட்ட காயங்கள் ஆறிய பின்னர் அவன் முதன் மந்திரி அநிருத்தரைப் பார்க்கப் போனான். அதற்குள்ளே பல முக்கியமான சம்பவங்கள் நிகழ்ந்து விட்டன. ஊமை ராணி சக்கர வர்த்தியின் உயிரைக் காப்பதற்காக உயிரை விட்டு விட்டாள். கரிகாலர் கொலையுண்டு இறந்து விட்டார். அடுத்த பட்டம் யாருக்கு என்பதைப் பற்றி நாடு நகரமெல்லாம் அல் லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது. தஞ்சைக் கோட்டை கொடும்பாளூர் வேளா ரின் வசத்துக்கு வந்து விட்டது. பழுவேட் டரையர்களும் அவர்களைச் சேர்ந்த சிற்றர சர்களும் படை திரட்டிக் கொண்டிருப்ப தாகச் செய்தி பரவியது. பெரிய உள்நாட்டுப் போர் மூளலாம் என்பதற்கு அறிகுறிகள் தென்பட்டன.

இத்தகைய கொந்தளிப்பான நிலையில் வைத்தியர் மகன் பினாகபாணி முதன் மந்திரி அநிருத்தரைப் போய்ப் பார்த்தான். பெருங் கவலைக் கடலில் ஆழ்ந்திருந்த அன்பில் பிரம்மராயர் பினாகபாணியோடு அதிகமாகப் பேசிக் காலம் போக்க விரும்ப வில்லை. தாம் இட்ட காரியத்தை அவன் நிறைவேற்றிவிட்ட படியால், அவனுக்குப் பரிசு கொடுத்துச் சீக்கிரமாக அனுப்பிவிட விரும்பினார்.

ஆனால் பினாகபாணி பாதாளச் சிறை யில் தான் சந்தித்த பைத்தியக்காரனைப் பற்றிச் சொல்லத் தொடங்கியதும் அவ ருடைய கவனம் அவன் பக்கம் திரும்பியது. பாண்டிய ராஜ்யத்தின் புராதனமான மணி மகுடமும் தேவேந்திரன் அளித்ததாகக் கூறப் படும் இரத்தின ஹாரமும் இலங்கையில் எங்கே இருக்கின்றன என்பது அந்தப் பைத்தியக்காரனுக்குத் தெரியும் என்று கேட் டதும் அநிருத்தர் மிக்க ஆர்வம் கொண் டார். அந்த மணி மகுடத்தையும் இரத்தின ஹாரத்தையும் தேடிக் கண்டுபிடிப்பதற்குப் பராந்தக சக்கரவர்த்தியின் காலத்திலிருந்து முயன்றும் பலன் கிட்ட வில்லை. அவற்றைக் கைப்பற்றும் வரையில் பாண்டிய வம்சத் தைச் சேர்ந்தவன் என்பதாக யாராவது ஒருவன் முளைத்துக் கொண்டுதானிருப் பான். திருப்புறம் பயத்தில் நள்ளிரவில் ஒரு சின்னஞ்சிறு பையனைப் பாண்டிய சிங்கா தனத்தில் ஏற்றி மகுடம் சூட்டிய நாடகத் தைப் பற்றி அநிருத்தர் ஆழ்வார்க்கடி

அருள்வாக்கு



'சம'த்தோடு 'தமம்' என்பதைச் சேர்த்து சமதமாதி என்று சொல்வ துண்டு. 'தமம்' என்பது மனஸை அடக்கு வது. இரண்டு விதமான அடக்கத்தில் ஒன்று. வெறுமே இந்திரியங்களை மட்டும் வெளியில் கெட்ட காரியத்தில் போக விடாமல் தடுப்பது — இதுதான் சமம். அடக்கத்தில் இரண்டாவது நிறு லான தமம் என்பது மனஸையே, உள்ளே எழுகிற எண்ணத்தையே, அடக்கி விடுவது. காரியத்தில் கெடுதல் செய்யா மல் இந்திரியங்களை அடக்கி விடலாம். ஆனாலும் மனஸானது அந்தக் கெட்டது களையே கல்பித்துக் கொண்டு, அதாவது மானஸிகமாக அந்தக் கெடுதல் களைச் செய்து கொண்டு அதிலே ஸந் தோஷப்பட்டால், வெளி அடக்கத்தால் ஒரு ப்ரயோஜனமும் இல்லை. உள்ளடக் கம்தான் 'தமம்' என்பது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

யான் மூலம் அறிந்திருந்தார். இம்மாதிரி யாராவது சிலர் அவ்வப்போது கிளம்பிக் கொண்டுதானிருப்பார்கள். அவர்களுக்கு ஈழத்து அரசர்களும் சேர மன்னர்களும் உதவி செய்வார்கள். பாண்டிய நாடு ஒரு வழியாகச் சோழ சாம்ராஜ்யத்துடன் சேர்ந்துவிட்டதாக ஏற்பட வேண்டுமானால், சோழ சக்கரவர்த்தியே மதுரையிலும் முடி சூட்டிக் கொள்ள வேண்டும். அந்த வைபவத்தின் போது பாண்டிய இரத்தின ஹாரத்தையும் சோழ சக்கரவர்த்தி அணிய வேண்டும்.

இவையெல்லாம் முன்னமே அநிருத்தர் தீர்மானித்திருந்த காரியங்கள். ஆகையினாலேயே ஈழநாட்டுக்குப் படையெடுத்துச் சென்ற ஒவ்வொரு சோழதளபதியிடமும் அநிருத்தர் மேற்கூறிய மணி மகுடத்தையும் இரத்தின ஹாரத்தையும் கண்டு பிடித்துக் கொண்டு வரும்படி சொல்லி அனுப்பி வந்தார். அதுவரையில் ஒருவராவது அக்காரியத்தில் வெற்றி பெறவில்லை.

இப்போது பாதாளச் சிறையில் உள்ள ஒருவனுக்கு அவை இருக்குமிடம் தெரியும் என்று கேள்விப் பட்டதும் அன்பில் அநிருத்தப் பிரம்மராயர் ஆர்வம் கொண்டது இயற்கையே அல்லவா?

வைத்தியர் மகன் இன்னொரு செய்தியும் கூறினான். அது முதன் மந்திரியின் ஆர்வத்தை அதிகமாக்கியதோடு கவலையையும் உண்டாக்கியது. அந்தப் பைத்தியக்காரன் சோழ வம்சத்தைப் பற்றி ஒரு மகத்தான இரகசியம் தனக்குத் தெரியும் என்றும், சோழ சிங்காதனத்துக்கு உரிமை கொண்டாடும் இளவரசன் ஒருவன் உண்மையில் சோழ வம்சத்தைச் சேர்ந்தவனே அல்ல என்றும் கூறியதாகப் பினாகபாணி சொன்னான்.

இதையெல்லாம் கேட்டதும் அநிருத்தர் முதலில் தாமே பாதாளச் சிறைக்குப் போய் அந்தப் பைத்தியக்காரனைப் பார்க்க எண்ணினார். பிறகு அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டார். தாம் அங்கே போனால் எதற்கு என்னத்திற்கு என்ற கேள்விகள் கிளம்பும். மலையமானும் வேளாரும் அநிருத்தரிடம் பூரண நம்பிக்கை கொண்டிருக்க வில்லை. அவர் சக்கரவர்த்தியின் விருப்பத்தின்படி மதுராந்தகன் கட்சியை ஆதரிப்பதாகவே அவர்கள் கருதியிருந்

தார்கள். தாம் பாதாளச் சிறைக்குப் போனால் அதிலிருந்து ஏதேனும் புதிய சந்தேகங்கள் அவர்களுக்கு ஏற்படும். சம்புவரையரைப் பார்க்கப் போவதாகவும் எண்ணிக் கொள்வார்கள். — இந்த அம்சத்தைப் பற்றி நன்கு யோசித்த பிறகு, அநிருத்தர் வைத்தியர் மகனையே உபயோகித்துக் கொள்ள விரும்பினார். தம் முத்திரை மோதிரத்தைக் கொடுத்துப் பாதாளச் சிறைக்குச் சென்று அந்தப் பைத்தியக்காரனைப் பார்த்து வரும்படி கூறினார்.

பினாகபாணி அவ்விதமே அப்பைத்தியக்காரனைப் பார்க்கப் போனான். பக்கத்து அறையில் வந்தியத் தேவன் அடைக்கப்பட்டுக் கிடந்ததைப் பார்த்ததும் அவனுக்குக் குதூகலமே உண்டாகி விட்டது. அந்த அறையின் வாசலில் சிறிது நின்று வந்தியத் தேவனுடன் பேச்சுக் கொடுத்தான். வந்தியத் தேவன் அவனுடன் பேசவில்லை. அதனால் ஆத்திரம் அடைந்து அவனை நன்றாகத் திட்டி விட்டு அடுத்த அறைக்குப் போனான். பைத்தியக்காரன் அவனிடம் சுமுகமாகப் பேசினான். உண்மையில் அவன் பைத்தியக்காரன் அல்ல என்பதைப் பினாகபாணி கண்டு கொண்டான். பிறகு, பாண்டிய நாட்டு மணி மகுடம் — இரத்தின ஹாரம் ஆகியவற்றைக் குறித்துக் கேட்டான். பைத்தியக்காரன் உடனே மௌனமானான். சோழ வம்சத்து இரகசியத்தைப் பற்றியும் சொல்லமறுத்துவிட்டான். ''எனக்குமுதலில் விடுதலை உத்தரவு வாங்கி வா! பிறகுதான் சொல்வேன்!'' என்று கூறி விட்டான்.

திரும்பி வந்து பினாகபாணி முதன் மந்திரியிடம் தன்னுடைய தோல்வியைப் பற்றிக் கூறினான். அவனை விடுவித்துக் கொண்டு வந்தால் நிச்சயம் பலன் கிட்டும் என்றும் தெரிவித்தான். முதன் மந்திரிக்கும் அது உசிதமாகத் தோன்றியது. இம்மாதிரி இராஜ்யஉரிமைபற்றிக்குழப்பம்ஏற்பட்டிருக்கும் நிலைமையில் அபாயகரமான இரகசியங்களைப் பற்றிப் பேசும் பைத்தியக்காரனைச் சிறையில் வைத்திருக்கக் கூடாது என்று கருதினார். அவனைத் தமது அரண்மனைக்கே அழைத்து வந்து உண்மையை அறிய வேண்டும் என்று எண்ணினார்.

அதன்பேரில்கொடும்பாளூர்வேளாரைப் பார்த்து அவரிடம் ஒருவாறு இந்தச் செய்தியைக் கூறினார். சின்னப் பழுவேட்டரையரால் பல வருஷங்களுக்கு முன்னால் சிறையில் அடைக்கப்பட்ட கைதியை முதன் மந்திரியின் விருப்பத்தின் பிரகாரம் விடுதலை செய்வதில் பெரிய வேளாருக்கு ஆட்சேபம் ஒன்றும் தோன்றவில்லை. எனவே, அப்பைத்தியக்காரக் கைதியை விடுதலை செய்யக் கட்டளை எழுதிக் கொடுத்தார்.

அதை வாங்கிக் கொண்டு பினாகபாணி கர்வத்துடன் பாதாளச் சிறைக்குச் சென்றான். முதலில் வந்தியத் தேவன் அறையின் வாசலில் நின்று அவனை விடுதலை செய்ய உத்தரவு கொண்டு வந்திருப்பதாகச் சொன்னான். வந்தியத் தேவன் அதை உண்மை என்று நம்பி நன்றி கூறத் தொடங்கினான். உடனே பினாகபாணி தன் உண்மை சொரூபத்தைக் காட்டலானான். வந்தியத் தேவனை நன்றாகத் திட்டி விட்டு, ''உனக்கு நாற்சந்தி மூலையில் கழு மரத்தின் மேலேதான் விடுதலை'' என்று எகத்தாளம் செய்தான். பின்னர் அடுத்த அறைக்குச் சென்று பைத்தியக்காரனுடன் சுமுகமாகப் பேசினான். அவனைச் சுவரோடு சேர்த்துப் பிணைத்திருந்த சங்கிலிகளை அவிழ்த்து விட்டான். ''இதோ உனக்கு விடுதலை உத்தரவு வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன். இப்போதாவது உனக்குத் தெரிந்த இரகசியங்களைச் சொல்லுவாயா?'' என்று கேட்டான்.


முதன் மந்திரி அநிருத்தரிடம் அழைத்துப் போவதற்கு முன்னால் தானே அந்த இரகசியங்களை அறிந்து கொள்ள வைத்தியர் மகன் விரும்பினான்.

பைத்தியக்காரன் தன்னுடைய விடுதலையில் அவ்வளவு உற்சாகம் கொண்டவனாகக் காணப்படவில்லை. வெளியேறுவதற்கும் அவசரப்பட்டவனாகத் தோன்றவில்லை. பினாகபாணியின் வார்த்தையில் அவ்வளவு நம்பிக்கை கொண்டவனாகவும் தெரியவில்லை. ''என்ன? ஏது? உத்தரவு யார் கொடுத்தது? சிறையிலிருந்து வெளியேறுவது நிச்சயமா? கோட்டையிலிருந்து வெளியே போக விடுவார்களா?'' என்று கேட்டுக் கொண்டிருந்தான்.

திடீரென்று பக்கத்துச் சுவரிலிருந்து சில கற்கள் பெயர்ந்து விழுந்தன. பினாகபாணி என்னவென்று திரும்பிப் பார்த்த போது வந்தியத் தேவன் அவன் பின்னால் நிற்பதைக் கண்டான். பினாகபாணி இடுப்பில் செருகியிருந்த கத்தியை அவசரமாக எடுத்துக் கொண்டான். வந்தியத் தேவன் அவன் மீது பாய்ந்து கழுத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். கையிலிருந்த கத்தியையும் தட்டி விட்டான். இருவரும் சிறிது நேரம் உருண்டு புரண்டு துவந்த யுத்தம் செய்தார்கள். அச்சமயம் பைத்தியக்காரன் சுவரில் மாட்டியிருந்த சங்கிலி ஒன்றைத் தூக்கிப் பினாகபாணியின் கழுத்தில் போட்டு இறுக்கினான்.....

(தொடரும்)

ஒரு போஸ்ட் கார்டு போதும்!...



உங்களுக்கும் உங்களது முன்னற்றத்திற்கும் இடையில் இப்பொழுது உள்ள தூரம் ஒரு போஸ்ட் கார்டு தான் என்று நாங்கள் கூறினால் அது சற்று மிகையாகத் தோன்றும். ஆனால் உண்மை அதுதான்.

நீங்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு ஆங்கில மொழியில் போதிய பயிற்சியின்மை ஒரு தடையாக இருந்திருந்தால்........

மற்றவர்கள் ஆங்கிலத்தில் பேசும் போது அதை ஓரளவு புரிந்து கொண்டும், அதற்கு ஆங்கிலத்திலேயே பதிலளிக்க முடியவில்லையே என்ற குறை உங்களிடம் குடி கொண்டிருந்தால்,

பல புத்தகங்களைப் படித்தும் ஆங்கிலத்தில் பேச முடியவில்லையே என்ற சலிப்பு உங்க்ளுக்கு ஏற்பட்டிருந்தால்,

நீங்கள் எதிர்பார்க்கும் முன்னேற்றத்தை இப்பொழுது அடைய ஒரே ஒரு போஸ்ட்கார்டுபோதும்...ஆமாம்!

ஆங்கிலத்தில் இலக்கணப் பிழையின்றி கடிதங்கள் கட்டுரைகள் எழுத வேண்டும், தயக்க மின்றி சரளமாகப் பேசவேண்டும் என்ற உங்களது விருப்பத்தை ஒரு போஸ்ட் கார்டில் எழுதி தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்று போற்றப்படும் விவேகானந்தா கல்வி நிலையத் திற்கு இன்றே அனுப்புங்கள்.

நீங்கள் மேற்கொள்ள வேண்டிய பயிற்சியைப் பற்றியும் மற்ற தகவல்களையும் உடனே உங்களுக்கு அனுப்பி வைப்பார்கள்.

வீட்டிலிருந்த படியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் இந்த எளிய பயிற்சி முறையை நீங்கள் மேற்கொள்ளலாம்.

"நேர்முகப்பயிற்சியும் உண்டு."


என்ன?.....எங்கே கிளம்பி விட்டீர்கள்? போஸ்ட் கார்டு வாங்கத்தானே?

உங்களது முன்னேற்றத்தின் முதல் முயற்சி துவங்கிவிட்டது.

நீங்கள் கடிதம் எழுத வேண்டிய முகவரி

விவேகானந்தா கல்வி நிலையம்
9, மேட்லி ரோடு,
தி. நகர், சென்னை - 17.

NAGA


ஆம்! டாடா ஓகே பால் வறட்சியைப்போக்கும் ஒரு முழுமையான தீவனம்.
மாட்டுத்தீவனம் வாங்கும் பொழுது டாடாவின் ஓகே தானா என்று பார்த்து வாங்குங்கள். டாடாவின் ஓகே ஒரு முழுமையான கால்நடைத்தீவனம்.
OK?
OK
CATTLE FEED
1st
1
தயாரிப்பவர்கள்:
டாடா
ஆயில் மில்ஸ்
கம்பெனி லிட்.
/T/8

இரண்டாவது சூரியன்

27

"**மா**றலாம்... மாறுவது தப்பில்லை. கோபப்பட்டு மாறுவதோ, ஆத்திரப்பட்டு எதிர்க்கிறதோ பின்னால வேதனையைக் கொடுக்கும். ஐயோ தெரியாமல் செய்துட்டேனேன்னு புலம்பலைத் தரும்... இத்தனை வயசுக்கு மேலே தெரியாம செய்துட்டேனேன்னு சொல்றது அசிங்கம் மச்சர்," பரத் நிதானமாய்ப் பேசினான். பானுமதி அவனை வெறித்துப் பார்த்தாள்.

"புரியலை. உங்களுக்குப் பொம்பளையைப் புரியலை. எத்தனை வயசானாலும் எவ்வளவு அனுபவம் இருந்தாலும் ஆம்பிளை எவனும் பொம்பளையைப் புரிஞ்சுக்கிறதில்லை. புரிஞ்சுக்கிட்டாலும் ஏத்துக்கிறதில்லை..."

"......"

"பொம்பளை சிரிச்சா அலட்டல். அழுதால் சனியன். பேசினால் லவ்வு. கூட வந்தால் அலையுது. அவ்வளவுதானே தெரியும் உங்களுக்கும்..."

"சொல்லுங்க."

"என் கோபம் என்னன்னு தெரியுமா பரத்?"

"பழிக்குப் பழி, ரத்தத்துக்கு ரத்தம், அவமானத்துக்கு அவமானம். என் வீட்டு வாசல்ல கத்தினாயா, உன் வீட்டு வாசல்ல..."

"போலீஸை நிக்க வெக்கறேன் பார். வெச்சேன்! எனக்குத் தெரிஞ்சவங்களை வெச்சு அவமானப்படுத்தினேன். அது போதலை, என் கோபம் அடங்கலை."

"இதுக்குக் காரணம் தலையைச் சுத்தி மூக்கைத் தொட்டதா இருக்கலாம். நேரே நீங்களா பஞ்ச் கொடுக்கலையேன்னு இருக்கலாம்...."

"அந்த ஆள் மடையன், பரத். அதையும் செய்துட்டேன். ஆட்டோர்வில கொண்டு போய் விட்டுடறீங்களான்னு கேட்டுக்க, 'நோ'ன்னு சொல்லிட்டு வந்துட்டேன்."

"சந்தோஷம்தானா?"

"ரொம்பச் சந்தோஷம். ஆனா கோபம் அடங்கலை. அந்தாளைப் பார்த்து 'ஒண்ணு ச ன் யா சி யா போ. இல்லை, இன்னொன்று கட்டி சம்சாரியா இருன்னாங்க. 'வெறும் வெள்ளைச் சட்டையா இருக்காதே'ன்னாங்க."

"ஸோ வாட்?"

"என்னைப் பார்த்து யாரும் சொல்லலையே பரத்!"

"சன்யாசியா போன்னா?"

"அதுகூடச் சொல்லலையே. ரெண்டு குழந்தைங்களுக்குத் தாயா இருன்றாங்களே!"

"உங்களைப் பார்த்து உலகம் கல்யாணம் பண்ணிக்கோன்னு சொல்லணுமா?"

"சொன்னா என்ன தப்புங்க?"

"இப்பத்தான் பண்ணிக்கிறாங்களே. இதுக்குத்தானா கோபம்?"

"நான் செய்துக்கிறேனா இல்லையா என்பது பிரச்னையில்லை பரத்; நான் மறுமணம் செய்துக்கணும்னு சமூகம் எதிர்பார்க்கலையே. அதுதான் என் கோபம். புருஷன் மறுமணம் செய்துக்கணும்னு உடனே சொல்றாங்க. ஆனால் நான் ஒண்ணு அடங்கிப் போகணும், இல்லேன்னா தனிச்சு வாழணும்னு எதிர்பார்க்கிறாங்க..."

"சமுதாயத்தை விடுங்க! உங்க கருத்து என்ன? மறுமணம் செய்துக்கணும்கிறதுதானே! அதைச் செய்து காட்டுங்க. சமூகத்தின் மீது கரியைப் பூசுங்க!"

"நோ. நான் செய்துக்க மாட்டேன்."

"சன்யாசமா?"

"பசங்க சிறகு முளைச்சுப் பறக்கற வரைக்கும் அது முடியாது. கமிட்மெண்ட்."

"பேசலாம் வக்கணையா... ஆனால் சன்னியாசமும் இல்லே, மறுமணமும் இல்லேன்னு வாழறது கஷ்டம்!"

பாலகுமாரன்



●● ஐந்து லட்சம் கண் ஆபரேஷன்களைச் செய்தவர் என்பதால் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறார் டாக்டர் மோடி! இவரை அமெரிக்காவில் உள்ள மியாமி லயன்ஸ்கிளப் பாராட்டிப் பரிசளித்துள்ளது. பரிசுத் தொகை முப்பத்து மூன்று லட்சம் ரூபாய்! பார்வையற்றவர்கள், காது கேளாதவர்கள் ஆகியோரின் நல்வாழ்வுக்காக அந்தத் தொகையை உடனே நன்கொடையாக அறிவித்து விட்டார் மோடி!

— ராஜ்.

''யூ ஆர் ராங். உதவியை அன்புன்னு சொல்லாதீங்க. பண்டமாற்றுச் செய்துட்டுக் காதல்னு பேசாதீங்க. மாத்து கம்மியாச்சுன்னா வியாபாரம் இடிக்கும். அன்பு எதிர்பார்க்காது. தன் சந்தோஷத்துக்குத் தான் செய்யற காரியம்பேர் அன்பு. அது கணக்குப் போடாது. பதிலுக்கு என்ன செய்வாங்கன்னு படியிலே உட்கார்ந்து காத்திருக்காது. லவ்ங்கிற வார்த்தையை நாம நாசம் பண்ணிட்டோம். காதல்ங்கிறதைக் கெடுத்துட்டோம். அன்பு எது செய்தாலும் அதுல எதிர்பார்ப்பு இல்லை.''

''இது தத்துவம். நடைமுறைக்கு வாங்க.''

''வர்றேன். எனக்குக் காதல் இல்லை. என் காதல் எவன் மேலேயும் இல்லை. அன்பு செய்ய ஆள் இல்லையே, என்னை நேசிக்க ஆள் இல்லையேன்னு நான் ஏங்கற தில்லை. ஏங்கவும் முடியாது.''

பரத் ஆழமாய் அவளை வெறித்தான்.

''என்ன பார்க்கிறீங்க?''

''உங்களுக்கும் ஒரு நாள் தேவை ஏற்படும்; ஏக்கம் வரும்னு நான் நினைக்கிறேன்...''

''தப்பாப் பேசறீங்களோன்னு தோணுது.''

''யெஸ்! தப்புத்தான். உலகம் உருண்டைன்னு முதன் முதலில் சொன்னவன் முட்டாள்தான். அப்படித்தான் பெண்ணுக்கு மன உணர்ச்சி மட்டுமில்லை, உடல் உணர்ச்சியும் உண்டு, அதை மதிக்கணும்னு சொன்னவனையும் முட்டாள்னு உலகம் சொல்லிற்று.''

''நான் கல்யாணம் செய்துக்கப் போறதில்லை, பரத்...'' நெடுமூச்சுடன் பேசினாள்.

பரத் சிரித்தான். அதில் கேலியிருந்தது.

''ஏன்னு கேளுங்க?''

''ஏன்?''

''என்னால இனிமே ஆம்பளைக்குக் கீழே அடிமையா இருக்க முடியாது. அவரு தூங்கறாரு, சப்தம் போடாதீங்கன்னு பசங்களை அதட்ட முடியாது. அவருக்குச் சோறு போட்டுட்டு அப்புறம்தான் நான் சாப்பிடுவேன்னு இருக்க முடியாது. குடும்பத் தலைவன்னு ஒரு ஆளைச் சகிச்சுக்க முடியாது. இனிமே மேன் ஆஃப்தி ஹவுஸ் கிடையாது. நான்தான் அங்கே முதல். நான்தான் அங்கே தலைவி. வுமன் ஆஃப் த ஹவுஸ்தான் மொத்தமும்.''

''அல்லி ராஜ்யம்!''

''ஆமாம்! என்ன பேர் வேணா சொல்லுங்க.''

''தின்ன முதல் கடலை சொத்தை. அதுக்காக மொத்தத்தையும் தூக்கிப் போட்டுடறதா?''

''இல்லை. வாயைக் கொப்பளிச்சுட்டு ஒவ்வொண்ணா உடைச்சுப் பார்க்கச் சொல்றீங்களா?''

''அப்படியில்லை!'' பரத் தன் உவமைத் தவறை உணர்ந்தான். சமமா இருக்கலாங்க. விட்டுக் கொடுத்து வாழலாம் — தொண்ணூத்தொன்பது பேர் குடித்தனம் நல்லாத்தான் செய்யறாங்க.''

''வெளிப் பார்வைக்கு பரத்... உள்ளே என்னன்னு யாருக்கும் தெரியலை. சொல்ல விரும்பலை. காட்ட பயம். அவமானம். என் புருஷனை எனக்குப் பிடிக்கலேன்னு சொன்னால் தலைகுனிவு. கேவலம்! கல்லோ, புல்லோ, கட்டையோ, மட்டையோ, காலத்தைத் தள்ளுவோம்னு...!''

''அது இருபது வருஷங்களுக்கு முன்னாடி. இப்ப இல்லை.''

''படிக்க முடியுது. வேலை கிடைச்சு, சம்பாதிக்க முடியுது. என் துணி, என் சோறுக்கு நான் உழைக்க முடியுது. என்னால தனியா என் வாழ்க்கையை அமைச்சுக்க முடியும்னு தோணுது.''

''ஏன்? ஏன்? எதுக்குத் தனியா இருக்கணும்? உங்களை வதைச்சுக்கிட்டு உங்க உடல் உணர்ச்சியைப் பொய், இது மாயை, இது சிற்றின்பம், இது கேவலம்னு பொய் சொல்லணும்? புருஷன் டைவர்ஸ் பண்ணின பிறகும் யாருடி இவன்'னு ஆட்டு வாங்களோன்னு எதுக்குப் பயப்படணும்? அவன் விட்டு வாசல்ல கூச்சல் போட்டதால இனிமே ஆம்பளையை வீட்டிலே சேர்க்க மாட்டேன்னு எதுக்கு உங்களை வருத்திக்கணும்? ஆம்பளையே வேண்டாம்னு எதுக்கு அசந்து போய் உட்காரணும். 'எனக்கு வேணும், சகலமும் வேணும். என்னைப் பயமுறுத்தாத, எனது தலைமயிர் பிடிச்சு இழுக்காத, என்னைத் துச்சமா நடத்தாத ஆள் வேணும்னு நீங்க ஏன் நினைக்கக் கூடாது...? தேடினால் கிடைக்கும்ங்க!''

''தேடிக் கிடைச்ச பிறகு திசை மாறலாம். பீச்சுல உட்கார்ந்து இதமாப் பேசின ஆண், குடித்தனம்பண்றபோது எட்டி உதைக்கலாம். எதுக்கு மறுபடி சோதனை...?''

''கஷ்டப்பட்டு மனசு கசந்து போனதினாலே இப்படிப் பேசறீங்க... திருமணம் முறிஞ்ச பிறகு மறுமணத்தை ஏற்காம இருக்கிறதிலேயும் ஆபத்து இருக்கு...''

''என்ன...?''

''ஆஃபேர், தொடர்பு, காதலர் சினேகிதம்...''

அவள் நிமிர்ந்தாள். கண்களில் அருவருப்பும் பயமும் தெரிந்தன.

''ஏன் ஒதுங்கறீங்க...?'' பரத் விடாப்பிடியாய்க் கேட்டான்.

''கல்யாணம் செய்துக்கிட்டு ஏன் அடிமையா இருக்கணும்...?''

''அடிமையா, ஏன்...? சமமா...''

''முடியாதுங்க...! உங்க மேல் சாவனிசம் அடிமையா நடத்தாத விடாது. 'ஏய், எங்கடி காப்பி' ன்னு நடுக்கூடத்துல நின்னு கத்தும். 'என்ன தூக்கம் ஏழு மணி வரைக்கும்' னு கத்தும்.

''இப்படிப் பேசறது ஃபீமேல் சாவனிசம்!''

''அப்பத்தான் உங்களுக்கு மதிக்கத் தோணும். இது தாண்டி உள்ளே வராதே!



என் வீட்டுக்குள்ளே. என்னை அதிகாரம் பண்ணாதே என்று கோடு போட்டு வச்சாத் தான் மரியாதை வரும்.''

''இதுதான் பெண் சுதந்திரமா?''

''எல்லாச் சுதந்திர வேட்கைக்கும், முதல்ல அத்துமீறல்னுதான் பேரு, பரத்! அடாவடித்தனம்னுதான் பட்டம்!''

''என்ன செய்யப் போறீங்க பானுமதி...?''

''உன்னோட சிநேகமா இருக்கப்போறேன் – உனக்கு விருப்பம் இருந்தா? என் பேச்சு உனக்குப் பிடிச்சிருந்தா? இது ஒரு உணர்வுன்னு உனக்குப் பட்டுதுன்னா என் நட்பு நீ ஏத்துக்கலாம்.''

''ஆனால் புருஷனா மாற முடியாது.''

''அதை இப்போது என்னால் தீர்மானிக்க முடியாது.

''நாளை? எதிர்காலத்தில்?''

''நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. இப்படி நான் பேசுவது அபத்தம்னு பட்டா நீ போகலாம். என்னைப் புரிஞ்சவன் எங்கேயாவது இருப்பான். பரத் நான் வரட்டுமா? பசங்க காத்துக்கிட்டு இருக்கும்.''

எழுந்தாள்.

''நான் கொண்டு போய் விடறேன், பானுமதி.''

''வாணாம்பா. ஐ லைக் டு வாக் அலோன். என்னவோ இப்ப தனியா நடக்கணும் போல இருக்கு.''

''கோபமா?''

''சேச்சே, மனம் விட்டு உன்கூடப் பேச முடியுதே. அதுவே சந்தோஷம் பரத். 'போடி நாயே'ன்னு உதறாமல் கேள்வி கேட்டாயே. புரிஞ்சுக்க முடியா விட்டாலும், புரிஞ்சுக்க முயற்சியாவது செய்தாயே. அதுவே ஆரோக்யம் பரத். இருபது வருடங்களுக்கு முன்னாடி இதைப் பேச முடியுமா?''

பானுமதி சிரித்தாள்.

''வர்றேன்,'' – கையசைத்தாள்.

நடந்தாள்.

எதிரே மாலைச் சூரியன் தகதகத்து இருந்தது. அவள் தலைமுடி மொத்தமும் தங்கமாய்த் தெரிந்தது.

பரத் வியப்போடு அவளைப் பார்த்தான்.

இதுவும் சூரியன் – இந்தப் பெண்ணும் சூரியன்! இரண்டாவது சூரியன்!

சூரியன் உலகத்திற்கு வெளிச்சம். இருள் நீக்க வந்த விளக்கு. ஆனால் தன்னையும் எரித்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு கணமும் பொசுங்கிக் கொண்டேயிருக்கிறது.

பெண் இனி நிலவல்ல. எதிரொளியல்ல. வெறும் மயக்கமல்ல. கனவுகள் அல்ல. கற்பனை ஊற்று அல்ல. அது சூரியன்! இரண்டாவது சூரியன்! சுடர். கதிர். ஆண் நிலவாக வேண்டுமா? இல்லை! பூமி மாறும். ஏதோ ஒரு கிரகத்தில் இரட்டைச் சூரியன் உண்டாமே! அதுபோல் பூமி இரண்டு ஒளியால் வளரும். இரட்டை நிழல் வரும். இரு பக்கமும் சூடு தாக்கும்... பூமி தாங்குமா? பூமி நிறையத் தாங்கியிருக்கிறது. பல கொந்தளிப்புகளை ஏற்றிருக்கிறது. மடு மலையாகவும் மலை மடுவாகவும் மாறுதல் அடைந்திருக்கின்றன.

...பூமி இதையும் தாங்கும்.

''பானுமதி!''

அவள் திரும்பினாள். சிரித்தாள். ''என்ன?'' என்றாள்.

''சாவித்திரியைப் பார்க்க நாளைக்கு வர்றீங்களா?'' மெல்ல அருகே நடந்து வந்தான்.

''எப்போ?''

''உங்க இஷ்டம்.''

''உன் இஷ்டத்தையும் சொல் பரத்.''

பரத் கண்களை மூடிக் கொண்டான்.

(முற்றும்)



''பரீட்சைக்கு எல்லாப் பாடத்தையும் கரைச்சுக் குடிச்சுட்டேன்னு சொன்னான்...''

— காஞ்சி எஸ். ஃபைசுதீன்.



''ஆனாலும் நம்ம ராமசாமி ரொம்ப அல்பம்!''

''ஏன் அப்படிச் சொல்றே?''

''எல்லாக் கல்யாணத்திலும் தேங்காய் இல்லாட்டா ஆரஞ்சுப் பழம்னு பை கொடுப்பாங்க. இவன் என்னடான்னா நெல்லிக்காய் போட்டுக் கொடுத்துட்டான்!''

— கெழு. அ. கதிர்வேல்.

''பரீட்சைக்கு ஹால் டிக்கெட், பேனா, பென்சில் எல்லாம் மறக்காமல் எடுத்துட்டு வந்தவன் ஒண்ணு மட்டும் மறந்திட்டேன்!''


''அடடா, என்ன அது?''

''பிட்!''

— ராதா வாசுதேவன்.



ஐடிபிஐ - முதலீட்டுப் பத்திரங்கள்
முதலீட்டு ஆதாய வரி விலக்குப் பெற ஒரு கவர்ந்திடும் வழி



- ஆண்டு முழுவதும் சமவிலையில் கிடைக்கும்.
- வருமான வரிச் சட்டம், 1961, பிரிவு எண் 54E-ன் கீழ் முதலீட்டு ஆதாய வரி விலக்கு.
- செல்வ வரிச் சட்டம், 1957, பிரிவு எண் 5(1)xvie)-ன் கீழ் செல்வ வரி விலக்கு.
- வருமான வரிச் சட்டம், பிரிவு எண் 80-Lன் கீழ் வருமான வரி குறைப்பு.
- ஆண்டொன்றுக்கு 9% விகிதத்தில் ஆறு மாதத்திற்கொரு முறை வட்டி வழங்கப்படும்.
- முதலீடு செய்தவர் விரும்பினால் 3 ஆண்டுகட்கான மொத்த வட்டியும் தள்ளுபடி முறையில் முன்னதாகவே ஒரே நேரத்தில் வழங்கப்படும்.
- எவ்வித வரியும் வட்டி வழங்கும்பொழுது கழிக்கப்படமாட்டாது.
- வெளியூர்க் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவற்றை மாற்றுவதற்கான செலவை ஐடிபிஐ ஏற்றுக்கொள்ளும்.

Sobhagya-B/89 TAM

மேற்கொண்டு விவரங்களுக்கு அருகாமையிலுள்ள ஐடிபிஐ ஆபிஸை அணுகுங்கள் அல்லது மானேஜருக்கு எழுதுங்கள்:

இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் பாங்க் ஆப் இந்தியா

ஐடிபிஐ டவர், கஃப் பரேட், கொலாபா, பம்பாய்-400 005.


தின மலர்
FOUNDER T.V. RAMASUBBAIYER
அலெ
ராஜி
செய்
ன்று எம்ஜிஆர்
பிறந்த நாள்!
'எத்

No.2

''மிக அதிகமாக விற்பனையாகும் தமிழ் நாளிதழ்களில் இரண்டாவது இடத்தைப் பிடித்து விட்டது தினமலர்'' என ஒட்டு மொத்த கணக்கீட்டுப்படி சான்றிதழ் அளித்துள்ளது ஏபிசி!

(முக்கியமான 9 மாவட்டங்களில் தினமலர் முதலிடமே வகிக்கிறது)

நாளுக்கு நாள் பெருகி வரும் வாசகர்களை தனக்கென உருவாக்கியுள்ளது தினமலர். இதற்கான சான்றிதழை வழங்கி உள்ளது 'ABC' என அழைக்கப்படும், பத்திரிகை விற்பனையை தணிக்கை செய்யும் பம்பாயில் உள்ள 'ஆடிட் பீரோ ஆப் சர்குலேஷன்ஸ்' என்ற அகில இந்திய அமைப்பு!

தினமலர் இதழின் இந்த வியத்தகு வளர்ச்சிக்கு பின்னணி:

★ ஒப்பிட முடியாத செய்தித் தரம்
★ உள்ளூர் செய்திகளுக்கு அளிக்கும் முக்கியத்துவம்
★ அருமையான அரசியல் செய்திகள்
★ பிரமிக்க வைக்கும் புகைப்படங்கள்

இவை அனைத்தும் தரமான வாசகர்களை பெற்றுத் தந்துள்ளது.

தினமலர்

சென்னை, ஈரோடு, திருச்சி, மதுரை, நெல்லை நகரங்களில் அச்சாகிறது

தினமலர்

அளவைக் காட்டிலும் தரமே முக்கியம் என்பதை அறிந்தவர்கள் அன்றாடம் படிக்கும் நாளிதழ்.

அடுத்த இலக்கை நோக்கி பாய்ந்து செல்லும் நாளிதழ்



''உங்களுக்கு ஏற்கெனவே ஒரு தொடர்பு உண்டுங்கிற விஷயத்தை ஏன் கல்யாணத்துக்கு முந்தியே நீங்க சொல்லலை?''

''ஒரு பாவமும் அறியாத உன்னுடைய கல்யாணம் நின்னு போயிடக் கூடாதில்லையா!''

— சீர்காழி ஸ்ரீராம்.

டாக்டர்: நீங்க குறைந்தது ஆறு மாசத்துக்கு முன்னாடியே வந்து 'ட்ரீட்மெண்ட்' எடுத்திருக்கணும்!

நோயாளி: தப்புத்தான் டாக்டர்... அதுக்காக அந்த ஆறு மாசத்துக்கும் சேர்ந்து ஃபீஸ் வாங்கிடாதீங்க...!

— அ. தெய்வசிகாமணி.





எழுத்தாளர்: நான் எழுதி அனுப்பிய சிறு கதையைப் படிச்சுட்டுப் பத்திரிகை ஆசிரியர் ரொம்ப உணர்ச்சிவசப்பட்டுட்டார்னு நினைக்கிறேன்!

நண்பர்: கைப்படக் கடிதம் எழுதிப் பாராட்டியிருக்காரா?

எழுத்தாளர்: இல்லே... கதையைச் சுக்கு நூறாக் கிழிச்சுத் திருப்பி அனுப்பியிருக்கார்!

— கமுதி எஸ். சேதுராமன்.



கணவன்: உன் அம்மாவுக்கு ஊருக்குப் போறதுக்கு எந்த டிரெயின்லேயும் இடம் கிடைக்கலை.

மனைவி: இப்ப என்னங்க பண்றது?

கணவன்: கவலைப்படாதே, 'பார்சல் வேன்'ல இடம் இருந்ததால் 'புக்' பண்ணிட்டு வந்துட்டேன்!

— வி. கி. குமார்.


ஆச்சி கை மணமும் அந்தக்கால அலங்காரமும்



• வரவேற்பு(!) ஐயனார் சிலை.

தேன், பேரிச்சம்பழம், ரோஜா இதழ்கள், குங்குமப்பூ — இவற்றை ஓர் அபூர்வ கலவையாகச் சேர்த்து, காரட் ஹல்வா தயாரித்தால் எப்படியிருக்கும்....? செட்டி நாட்டுப் பாணியில் தயாரான இந்த இனிப்பை 'காரட் ஹல்வா' என்று நம்பவே கஷ்டமாயிருக்கும்! செட்டி நாட்டு இல்லத்து ஆச்சிகளின் கை மணம் கமழும் இதைப் போன்ற பலப்பல உணவு வகைகளை இப்போது சென்னையில் உள்ள பிரத்யேகச் செட்டிநாடு உணவு விடுதிகளில் சுவைத்து மகிழலாம். சிக்கன் காரைக்குடி, கோலா உருண்டை, மீன் வறுவல், சுறாப்புட்டு என்று அமர்க்களமான அசைவ வகைகள்; பக்கோடாக் குழம்பு வெள்ளைப் பணியாரம் என்று சைவ ஸ்பெஷல் ஐட்டங்கள்...

• அந்தக் கால அலங்காரம்.



'காரைக்குடி', 'செட்டிநாட்', 'ஆச்சி' என்ற பெயர்களுடன் சமீப காலமாகச் சென்னையில் செட்டிநாடு உணவு விடுதிகள் ஆரம்பிக்கப்பட்டுப் பிரபலமாகியுள்ளன. திடீரெனச் செட்டிநாடு உணவுக்கு என்ன மவுசு என்கிறீர்களா?. 'எல்லாம் மாறி வரும் மக்கள் ரசனைதான் காரணம்' என்கிறார்கள் இந்த ஹோட்டல்களை நடத்துபவர்கள்.

சரி செட்டி நாட்டு உணவின் தனித்தன்மை என்ன..? இந்த மிக்ஸி யுகத்திலும் அவ்வப்போது கையால் அரைத்துக் கலக்கப்படும் விதவிதமான மசாலாக்கள்தான். சில மசாலாக்களை நேரடியாக உணவில் கலக்காமல் மெல்லிய துணியில் கட்டி, சமைக்கப்படும் உணவில் ஊறவைப்பதும் உண்டு. இதனால் ஓர் அலாதியான ருசி கிடைக்கும். சிலோன் பட்டை, ஜாதிக்காய், வெட்டி வேர், அன்னாசிப்பூ, கடல்பாசி ஆகிய விசேஷப் பொருட்கள் செட்டி நாட்டுச் சமையலுக்குத் தனி மணத்தைக் கூட்டுகின்றன.

முதன் முதலில் சென்னையில் செட்டி நாடுபாணி உணவுகளை மட்டுமே வழங்கும் 'ரெயின் ட்ரீ' என்ற ரெஸ்டாரன்டை கன்னிமரா ஹோட்டலில்தான் திறந்தார்கள். இங்கு, பாரம்பரிய செட்டி நாட்டு உடை அணிந்த வெயிட்டர்கள் செப்பு பாத்திரங்களில் உணவைக் கொண்டு வந்து

பரிமாறினார்கள்.

''குடும்பத்தினருடன் செல்ல, அலுவலக நண்பர்களை அழைத்துச் செல்ல, செலவு அதிகமாகாத 'டீசன்ட்'டான இடத்தைக் கொடுப்பதுதான் எங்கள் முக்கிய நோக்கம்'' என்கிறார் 'காரைக்குடி'யின் மேனேஜர் ரமேஷ். இந்த ஹோட்டல் கட்டப்படுவதற்கு முன் காரைக்குடிக்குச் சென்று பலதரப்பட்ட செட்டி நாட்டு இல்லங்களையும் வீடியோ படம் எடுத்து வந்து, அவற்றின் முக்கிய அம்சங்களை ஒன்று சேர்த்து ஹோட்டலின் உட்புறத்தை வடிவமைத்தார்களாம்.

இப்போதைய வழக்கப்படி 'இன்டீரியர் டெகரேட்டர்களை நாடாமல், பழைய செட்டி நாட்டு வீடுகளிலிருந்து ரங்கூன் வேலைப்பாடுடன் கூடிய மரத் தூண்கள், ஜன்னல்கள், தரையில் பதிக்கும் 'டைல்கள்' என்று சேகரித்து வந்து அலங்காரமாக வைத்துள்ளார்கள். பத்தடி உயர ஐயனார் சிலையையும், மண் குதிரை, யானையையும் சத்தியமங்கலத்தில் ஸ்பெஷலாகத் தயாரிக்கச் செய்து கொண்டு வந்து வாசலில் நிறுத்தியிருக்கிறார்கள். செட்டிநாட்டு இல்லங்களில் 'சென்டிமென்ட்' ஆக வைத்துக் கொள்ளும் தாமரைக் குளமும் உள்ளது. தவிர, பெரிய கங்காளம், கல்யாண சீராகத் தரப்படும் அந்தக் கால வேலைப்பாடுகள் அமைந்த 'செஸ்ட்' பெட்டி, 1902 என்ற தேதி தாங்கி இன்னமும் ஒழுங்காக ஓடிக் கொண்டிருக்கும் கடிகாரம்... என்று ஆங்காங்கே வைத்து, ஒரு பழங்காலச் செட்டிநாட்டு வீட்டுக்குள் இருக்கும் உணர்வை ஏற்படுத்தியுள்ளார்கள்.

காதுகளில் பாம்படம் அணிந்து, ஆச்சி 'சாப்பிட வாவே....' என்று கூப்பிடுவது போல் பிரமை உண்டாகிறது!

— நிர்மலா சக்கரவர்த்தி

படங்கள்: யோகா

• பழைய பாணி பாத்திரங்களில் உணவு பரிமாறுகிறார்கள்.



உண்மை தானையா?

உறக்கத்திற்காக ஊசி போடப் பட்டிருந்ததால், லேசாக வாய் திறந்து, ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள் வந்தனா.

அந்தத் தனியறையில் கட்டில் அருகில் தன் கையையே மடக்கித் தலைக்கு வைத்துக் கொண்டு படுத்திருந்த அவளின் அம்மா புரண்டு படுத்தாள்.

வந்தனாவுக்கு மருத்துவ உதவி செய்து அட்மிட் ஆன பிறகு, வீட்டில் பதறுவார்களே என்று கோபி நர்சை பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு ஆட்டோ பிடித்து வீட்டிற்கு வந்தபோது, அத்தனை பேரும் பதறி நின்றார்கள்.

"வந்தனாவுக்கு ஒரு சின்ன ஆக்ஸிடெண்ட். பெரிசா காயம் எதுவும் இல்லை, மயக்கம்தான். ஆஸ்பத்திரில அட்மிட் பண்ணியிருக்கேன். தூங்கறா. காலைல டிஸ்சார்ஜ் ஆகி வந்துடலாம், நீங்க யாரும் வர வேணாம்" என்று பதற்றமில்லாமல்தான் சொன்னான்.

ஆனாலும் மனம் கேட்காமல் அம்மா மட்டும் கோபியுடன் புறப்பட்டு வந்து விட்டாள். இங்கே வந்து மகளைப் பார்த்ததும் 'என்ன விபத்து?' என்று விவரம் கேட்டு நர்சுகளை நச்சரிக்க ஆரம்பித்து விட்டாள்.

கோபி சற்று அதட்டி, பிறகு அதிக அழுத்தம் கொடுக்காமல், மேம்போக்காக, நடந்தவற்றை சொல்லி முடித்ததும், பிடித்துக் கொண்டாள்.

"காசும், திமிரும் இருக்கிறவனை இவ எதுக்காகப் பகைச்சுக்கறா? தொட்டதுக்கெல்லாம் இவளுக்கு முணுக் முணுக்னு கோபம் வந்துடுது. வேலைக்குன்னு வெளில ஒரு பொம்பளை போறதுன்னா நல்லவனையும்தான் சந்திக்க வேண்டி வரும், அயோக்யனையும்தான சந்திக்க வேண்டி வரும். பொம்பளையை மதிக்கிறவனும்தான் இருப்பான். கிள்ளுக் கீரையா நினைச்சிக் கிண்டல் செய்றவனும்தான் இருப்பான். சகிப்புத் தன்மை வேணும். பொறுமை வேணும். படிச்சிட்டாப் போதுமா? பொது விஷயங்கள் பலதும் தெரிஞ்சிட்டா போதுமா? அனுசரணைங்கிறதே இவகிட்டே கிடையாது. வாசப்படி குள்ளமா இருந்தா கொஞ்சம் குனிஞ்சுதான் போகணும். அந்தப் பெரிய வீட்டுப் பையன், பேட்டி எடுக்கப் போனப்போ ஏற்பட்ட அபிமானத்தில, அவனா ஆள் விட்டு, கௌரவமான வேலை தந்தான். இவ பேசினதில, பழகினதில ஏதோ ஆசைப் பட்டுட்டான். அதை இதமாச் சொல்லி, சம்மதமிருக்கான்னு கேட்ருக்கான். இவளைச் சம்மதம் சொல்லச் சொல்லலை, உடனே கழுத்தை நீட்டச் சொல்லலை. அதெல்லாம் சொந்த விருப்பம், குடும்பச் சூழ்நிலைன்னு ஆயிரம் இருக்கு. வீட்ல மனசுவிட்டு விவரத்தைக் கலந்து பேசி முடிவெடுக்க வேண்டியது தானே? 'அய்யா, எனக்கு இஷ்டமில்லை'ன்னு இதமாச் சொல்லிட வேண்டியது தானே? அதை விட்டுட்டு, 'போடா, உன் வேலையும் வேணாம், எதுவும் வேணாம்'னு தூக்கியெறிஞ்சு பேசிட்டு வந்தா எந்த ஆம்பளைக்குக் கோபம் வராது?

"இப்ப அவன் தன் புத்தியைக் காட்டிட்டான். ஏறுமாறா நடந்துடலைங்கிற வரைக்கும் நாம செஞ்ச புண்ணியம். குடிச்சிருந்தான்னு சொல்றே. அடிச்சதோட இல்லாம வேற ஏதாச்சும் விபரீதமா காரியம் பண்ணியிருந்தா... இவ ரோஷம் வந்து மானத்தைக் காப்பாத்துமா? வாழ்க்கையே நாசமாயிருக்குமே. இதெல்லாம் யோசிக்க வேணாம் இவ! படபடன்னு வார்த்தையைக் கொட்டிட்டா ஆச்சா, பின் விளைவுகளை எவ பார்க்கிறது?"

அம்மாவை அதட்டி, சமாதானப் படுத்தி, படுக்க வைப்பதற்குள் கோபிக்குப் பெரும் பாடாக இருந்தது. அம்மாவை அறைக்குள் படுக்கச் சொல்லிவிட்டு, அவன் அறைக்கு வெளியில் இருந்த நீளமான வெள்ளை பெஞ்சில் கால் நீட்டிப் படுத்தானே யொழிய, உறக்கம் வரவில்லை.

அம்மா சொன்னது போல ஏதாவது விபரீதமாக நடந்திருந்தால்....

நினைக்கவே சிலிர்ப்பாக இருந்தது. ஆத்திரம் கொப்புளிக்கும். கோபம் குமுறும். அவன் வீட்டுக்குச் சென்று பலம் கொண்ட மட்டும் உதைக்கச் சொல்லும். ஆனால்.... விளைவு என்னவாகும்? எத்தனை பெரிய அவமானம்! ஒட்டு மொத்தமாய்க் குடும்பத்திற்கும்! வந்தனா எப்படி ரியாக்ட் செய்வாள்? ஆர்ப்பரித்தாலும், பொங்கினாலும் சரி செய்யவே முடியாத களங்கமாகுமே.... ச்சே! வேண்டாம். இப்படி நினைக்காதே!

பட்டுக்கோட்டை பிரபாகர்

அப்படியெல்லாம் நல்ல வேளையாக, எதுவும் நடந்து விடவில்லை. ஒரு பெரிய இடி விலகிச் சென்று விழுந்துவிட்டது. சரியான நேரத்தில் சென்று விட்டேன்.

ஒரு வகையில் இதுவே ஒரு களங்கம் தான் என்றாலும்... வீட்டில் சொன்னதைப் போல இதை அப்படியே ஒரு விபத்தாகவே நினைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

யார் கேட்டாலும் விபத்துத்தான். வெளியே சொல்லிக் கொள்கிற விஷயமா, இது! ஒன்றுமில்லாததற்கே மூன்று மணி நேரம் பேசும் உலகம் இது.

வந்தனா—திருமணமாகவேண்டியபெண். காலையில் அவள் உடல்நிலை தேறி, சகஜநிலைக்கு வந்ததும் வீட்டிற்கு அழைத்துச் சென்று நிறையப் புத்திமதிகள் சொல்ல வேண்டும். தனக்கு நேர்ந்த சம்பவங்களுக்காகக் கொந்தளிப்பாள். சமாதானப்படுத்த வேண்டும்.

பெண்ணைப் பொறுத்தவரை, கண்ணாடியில் கல் மோதினாலும், கல்லில் கண்ணாடி மோதினாலும் கண்ணாடிக்குத்தான் சேதம் என்பதை உணர வைத்துச் சாந்தப் படுத்த வேண்டும்.

இமைகளை மூடி, ஆனால் உறங்காமல், பல்வேறு யோசனைகளில் இருந்த கோபி, தன் தோளின் மேல் யாரோ கைவைப்பதை உணர்ந்து, விழித்துப் பார்த்து வியந்தான்.

அரவிந்தும், கிருஷ்ணனும் நின்று கொண்டிருந்தார்கள். சடக்கென்று எழுந்து அமர்ந்தான்.

''உங்க தங்கை எப்படி இருக்காங்க?'' என்றான் அரவிந்த்.

''செத்துடலை, உயிர் இருக்கு. அதையும் போக்கிடலாம்னுதான் வந்தியா?'' என்றான் கோபி காட்டமாக.

''இல்லை, அவங்க கிட்டேயும், உங்க கிட்டேயும் மன்னிப்பு கேக்கறதுக்கும், மனம் விட்டுப் பேசறதுக்கும் வந்தேன்.''

கோபி புரியாமல் குழப்பமாகப் பார்க்க, இவர்களின் பேச்சு சப்தத்தில் விழித்து விட்ட அம்மா எழுந்து வந்து கதவைத் திறந்து எட்டிப் பார்க்க....

'வணக்கம்மா. நீங்கதான் வந்தனாவோட அம்மாவா? தயவு செஞ்சு கோபப் படாதீங்கம்மா. நான்தான் அரவிந்த். உங்க பொண்ணு ஆஸ்பத்திரில சேர்றதுக்கு என் பொறுப்பில்லாத்தனம்தான் காரணம். குடி போதைல என்ன செய்றோம்னே தெரியாம.... எப்படி இருக்காங்க அவங்க?''

அரவிந்த் அவனாக உள்ளே நடந்து கட்டில் அருகே சென்று, கைகட்டி நின்று, உறங்கும் வந்தனாவை மௌனமாகப் பார்த்தான்.

'ஸாரி வந்தனா. ஐ ம் டெரிபெளி ஸாரி. எத்தனை பெரிய மனிதர்களும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் முட்டாள்தனமாக நடந்து கொண்டு விடுவார்களாம். வாழ்க்கையில் எனக்கென்று சில நெறிமுறைகளையும், கொள்கைகளையும் கடைப்பிடித்து எல்லோரிடமும் எப்போதும் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்கிற நோக்கத்துடனேயே ஒவ்வொரு செயலையும் யோசித்து செயல் படுத்தும் நான்..... உன் மேல் வைத்துள்ள அதீத அன்பின் காரணமாக, நீ என்னை உதறி விட்டு, என்னைப் புரிந்து கொள்ளாமல் போய் விட்ட ஆதங்கம் தந்த வெறுப்பில், ஒரு மட்டரகமான யோசனைக்குத் தலையசைத்து விட்டதன் விளைவாக... எவ்வளவு மோசமான நிகழ்ச்சிகள்! அவை கூட நான் என் சுய உணர்வில் இல்லாத போது நிகழ்ந்தவை. உன் மேல் எனக்கு மோசமான இச்சை கிடையாது. உன் உள்ளமே என் இலக்கு. நான் நேசிப்பதும், யாசிப்பதும் அதைத்தான். என்னை மன்னிப்பாயா? என் மேல் மேன்மேலும் உனக்கு வெறுப்பு அதிகரிக்கும் படியாக மிகக் கீழ்த்தரமாக நடந்து கொண்ட எனக்கு நீ என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்கத் தயார்.'

உதடுகளுக்குள் வாக்கியங்கள் முட்டி மோதின. கண்களில் இருந்து கண்ணீர் திமிறிக் கொண்டு வெளியேறியது.

அவனை ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டிருந்த கோபியும், அம்மாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.


அரவிந்த் அவர்கள் பக்கம் திரும்பினான், ''உங்ககிட்டே கொஞ்சம் பேசணும். இங்கே வேணாம். இவங்க தூக்கத்துக்கு இடைஞ்சலாய்டும். ஆஸ்பத்திரிக்கு வெளிலே ஒரு வெய்ட்டிங் ஹால் இருக்கு. அங்கே இப்போ யாரும் இல்லை. வாங்க,'' என்றான், நடந்தான்.

கிருஷ்ணன் அவனைத் தொடர்ந்தான். கோபியும், அம்மாவும் சற்றுத் தயங்கி விட்டுப் பிறகு நடந்தார்கள்.

விடிய இருந்த அந்த அதிகாலையில் அந்த ஹாலில் இருட்டை விலக்க, விளக்கு எரிய வேண்டியிருந்தது. வசதியான நாற்காலிகள் பத்துப் பதினைந்து இருந்தன. அனைவரும் அமர்ந்தனர்.

அரவிந்த் சற்று மௌனமாய் இருந்து விட்டுச் சொன்னான், ''மிஸ்டர் கோபி, என்மேல இப்போ உங்களுக்கு ஆத்திரம் துடிச்சிக்கிட்டிருக்கும். இது நியாயமான, அதே சமயம் பொறுமையான கோபம். இதே விஷயம் ஒரு கிராமத்தில நடந்திருந்தா இந்த நேரம் என்னை வெட்டிப் போட்டிருப்பாங்க. நான் என் செயலுக்காக ரொம்ப வெட்கப் படறேன். எந்த சப்பைக்கட்டும் சொல்லத் தயாரா இல்லை. நான் செஞ்சது மகா மகா அயோக்யத்தனம். கீழ்த்தரமான காரியம். வந்தனாவை நான் ரொம்ப ரொம்ப லவ் பண்றேன் சார். அவளோட குணாதிசயங்கள் எனக்குப் பிடிச்சிருக்கு. அவளோட ரோஷம் என் காதலை அதிகமாக்குது. அவ என்னை வெறுக்கறான்னு தெரிஞ்சதும் எனக்கு என் மேலதான் கோபம் வந்தது. ஒரு பொண்ணோட அன்பைச் சம்பாதிக்கற மாதிரி நடந்துக்க எனக்கு யோக்யதையில்லையேன்னு ஒரு காம்ப்

இளமையில் புத்தகங்களை விரும்பாதவன், பின்னால் அவற்றைப் படித்துப் புரிந்து கொள்வது கடினம்.
— லொரண்டன்.



ளெக்ஸ்தான் வந்தது. நேத்து உங்க தங்கையை வரவழைத்தது தப்பான நோக்கத்தோட இல்லை. என் காதலை இன்னும் புரியும்படியா விவரமா எடுத்துச் சொல்லத் தான். ஆனா மது என் மனநிலையில் கோளாறு ஏற்படுத்திடுச்சி. கொஞ்சம் ரவுடித்தனம் எல்லாம் செய்ய வச்சிடுச்சி. ரொம்ப ரொம்ப மன்னிப்பு கேட்டுக்கறேன். அப்படி நான் நடந்துக்கிட்டிருக்கக் கூடாது. ஷேம்! ஷேம்!''

அரவிந்த் திடீரென்று தன் முகத்தில் தானே இரண்டு கைகளாலும் அறைந்து கொள்ள, அவன் கைகளைப் பிடித்துத் தடுத்தான் கிருஷ்ணன்.

''விடுடா! கையை விடுடா ராஸ்கல்! நீ பெரிய ஞானின்னு உன்கிட்டே யோசனை கேட்டேன் பாரு.... எந்திரிடா! போ! என்னை விட்டுப் போ! கெட் லாஸ்ட் ஐ ஸே.''

ஆவேசமாகக் கிருஷ்ணனின் சட்டையைப் பிடித்துத் தள்ளினான். கிருஷ்ணன் அமைதியாகப் பார்த்து விட்டு, ''இப்ப நான் எது சொன்னாலும் ஏறாது. நான் போறேன். மீட் யூ லேட்டர்'' என்று நடந்தான்.

''வேணாம். என்னைச் சந்திக்கவே வேணாம், யு டர்ட்டி ஸ்கவுண்ட்ரல்!'' என்று கத்தினான். திரும்பி, ''சார், உங்க தங்கையை இன்னமும், இப்பவும் நான் நேசிக்கறேன். அவளைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப் படறேன். என்கிட்டே பணம் நிறைய இருக்கிறது ஒரு தப்புன்னா, அதைத் தவிர வேற எந்த தப்பும் என்கிட்டே இல்லை. வந்தனா விழிச்சதும் நான் மன்னிப்பு கேட்டதாச் சொல்லுங்க. என் விருப்பத்தைச் சொல்லுங்க. அப்படியும் அவளுக்கு இஷ்டமில்லைன்னா.... அதுக்கப்புறம் சத்தியமா அவ வாழ்க்கையில நான் தலையிட மாட்டேன். வர்றேங்க,'' என்றான், எழுந்தான்.

இவன் போட்ட சப்தத்தில் அந்த ஹாலின் வாசலில் கூடி விட்ட ஒன்றிரண்டு ஆஸ்பத்திரி சிப்பந்திகளைப் பொருட்படுத்தாமல் நடந்த அரவிந்த் திரும்ப வந்து, ''இந்த டாக்டர் எனக்குத் தெரிஞ்சவங்க தான். பில்லை எனக்கு அனுப்பச் சொல் விட்டேன். நீங்க எதுவும் கட்ட வேண்டிய தில்லை,'' என்று விட்டுச் சென்றான்.

திகைப்புடன் நின்று கொண்டிருந்த அம்மாவும், கோபியும் அமைதியாக நடந்து வந்தனா இருந்த தனி வார்டுக்குத் திரும்பிய போது.....

படுக்கையில் எழுந்து அமர்ந்திருந்தாள் வந்தனா:

''வந்தனா, எந்திரிச்சிட்டியா? எப்படிம்மா இருக்கே?'' என்றாள் அம்மா.

''உடம்பெல்லாம் வலிக்குது. வேற எதுவுமில்லை. நான் எப்படி எப்படி இங்கே...''

கோபி தான் அரவிந்த் பங்களாவிற்கு வந்ததும், கண்டதும் சொல்லி அதன் பிறகு அவளுக்கு மருத்துவ உதவியளிக்கப் பட்டது வரை சொல்லி முடித்தபோது... அவள் முகம் இறுகிப் போயிருந்தது.

''தப்புப் பண்ணிட்டேண்ணா, கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிலதான் நீ சேர்த்திருக்கணும். பரவால்லை, இப்பவும் ஒண்ணும் மோசமில்லை. முதல் காரியமா, போலீசைக் கூப்புடு'' என்றாள் வந்தனா.

(தொடரும்)

ஆளுனர்கள் ராஜினாமா–

* எஸ். இராஜசேகரன், திருத்துறைப் பூண்டி.

? 'எல்லோரும் அ. தி. மு. க.வை விட்டு விலகிச் சென்றாலும் ஜெயலலிதா மட்டும் இருந்தாலே போதும், மக்கள் அவருக்கு வோட்டுப் போட்டு ஜெயிக்க வைப்பார்கள்' என்கிறேன்! நீங்கள்...?

! 'எல்லோரும் அ. தி. மு. க.வில் இருந்தாலும் ஜெயலலிதா மட்டும் வெளியேறினால் போதும், அ. தி மு. க.வுக்கு யாரும் வோட்டுப் போட மாட்டார்கள்' என்கிறேன்!

* ரகுவீர தயாள், திருப்புல்லாணி.

? சென்னை தொலைக்காட்சியில் தினசரி தமிழக முதல்வர் படம் காட்டப்படுவது அச்சத்தின் காரணமா? அல்லது ஜால்ராவா?

! முன்னர் நடந்த இருட்டடிப்புக்குப் பரிகாரமாகவும் இருக்கலாம்! நிற்க, தலைவர்கள் மேடையேறிப் பேசுவதும், சிலை, கட்டடங்கள் திறப்பதும்தானா நியூஸ்? டீ.வி.யில் 'நியூஸ் ஹண்டிங்' ரொம்ப கம்மி. டீ.வி.க்காரர்கள் தேடி அலைந்து செய்தி வேட்டையாட வேண்டும்!

* என். இரமேஷ்குமார், பட்டுக்கோட்டை.

? 'அமிர்தலிங்கத்தையும் யோகேஸ்வரனையும் நாங்கள்தான் கொன்றோம்' என்ற புலிகளின் பகிரங்க அறிவிப்பு பற்றி...?

! ஏற்கெனவே தெரிந்த விஷயத்துக்குக் கிடைத்த ஒப்புதல் வாக்குமூலம். வஞ்சனை, நிராயுதபாணிகளையும் . கொல்லும் கோழைத்தனம், ஜனநாயக உணர்வுகளையும் மாற்றுக் கருத்துக்களையும் நசுக்கும் சர்வாதிகாரப் போக்கு, முதலிய அனைத்தையும் உள்ளடக்கிய கொலை நிகழ்ச்சி, விடுதலைப் புலிகளின் செயல்முறைச் சித்தாந்தங்களை வெளிச்சம் போட்டுக் காட்டும் சம்பவம்.

* டி. சந்திரன், ஈரோடு.

? போஃபர்ஸ் விவகாரத்தில் ஸ்விடன் அரசின் நிலை மாறி விட்டதே?

! இங்கேயும்தான் அரசு மாறி, உண்மைகளை மூடி மழுப்பும் நிலை மாறி விட்டதே! 'போஃபர்ஸ் நிறுவனம் பணத்தைத் திருப்பித் தந்தால் போதாது; யார் யாருக்கு லஞ்சம் தரப்பட்டது என்ற முழு விவரங்களையும் வெளியிட வேண்டும்' என்று இந்திய அரசு நிர்பந்திக்கிறது. சில நபர்கள், சில நிறுவனங்கள் மீது வழக்கும் பதிவு செய்துள்ளது. என்றாலும் திரை மறைவில் ஒளிந்திருக்கும் பெயர்களைக் கண்டுபிடிப்பது கஷ்டமாகவே இருக்கும். அதற்கு முன் இந்த ஆட்சியைக் கவிழ்த்து விட தீவிர முயற்சிகள் நடக்கும்! பார்ப்போம், சூதா, தர்மமா எது வெல்கிறது என்று!

* ஜி. குசேலன், சங்கராபுரம்.

? எம். ஜி. ஆர். சிலையை ஜெயலலிதா திறந்து வைத்துப் பேசுவதும் எம்.ஜி.ஆர். தபால் தலையைப் பெற்றுக் கொண்டு கலைஞர் பேசுவதும் எதைக் காட்டுகிறது?

! எம். ஜி. ஆர். இருதரப்பினருக்கும் உபயோகமாக இருப்பதைத்தான்!

* வி. ஏ. ராஜு, நீலங்கரை *

? உயிருக்கு உலை வைக்கும் ஜல்லிகட்டு விளையாட்டுக்குத் தடை விதித்தால் என்ன?

! ஆபத்து என்பது எல்லாவித வீர சாகச விளையாட்டிலும் உண்டு. மலை ஏறுவதில் இல்லையா? பழங்கால சிறு விமானத்தில் உலகைச் சுற்றி வருவதில் இல்லையா? பாய்மரப் படகில் மாகடலைக் கடப்பதில் இல்லையா? ஜல்லிக்கட்டு விளையாட்டுக்குச் சரியான பயிற்சி தரப்படுகிறதா, போதிய அளவு தற்காப்பு மேற்கொள்ளப்படுகிறதா



* இருதரப்புக்கும் உதவி!



* புலிகளால் படுகொலை!



* ஒருவரே மிஞ்சினாலும்.

உங்கள் கருத்து என்ன?

*** ரூ. 20 பரிசு பெறுபவர்:**

வி. ஏ. ராஜு,
242, கபாலீசுவரர் நகர்,
நீலங்கரை,
சென்னை — 41.

என்று பார்த்து, அதற்கான சட்டபூர்வமான விதிமுறைகளை வகுப்பதுதான் நல்லது. தடை செய்வது அல்ல.

* **எஸ். ஷைபகுதீன், காஞ்சிபுரம்.**

? **இலக்கியக் கூட்டங்களுக்குச் செல்வதுண்டா?**

! இலக்கியக் கூட்டங்களே குறைந்து விட்டன. நடக்கின்ற சிலவும், அடுத்தவன் முதுகைச் சொறிகிற கேஸாக இருக்கின்றன. அல்லது, தலைகுனிவை ஏற்படுத்துகிற அபத்தமான பட்டிமன்றங்களாக விளங்குகின்றன. இலக்கிய நயங்களைச் சுவைபட, இனிமையாக எடுத்துரைத்துத் தரமான ரசிகர்களை உருவாக்குகிற சொற்பொழிவாளர்கள் அதிகம் பேர் இல்லை.

* **டி. வி. எஸ். மணியன், தஞ்சாவூர்.**

? **மத்திய அரசு கட்டடங்களுக்குத் தலைவர்களின் பெயர்களைச் சூட்டுவதென்று எடுக்கப்பட்டுள்ள முடிவு பற்றி?**

! உன்னி கிருஷ்ணன் வரவேற்கும் புதிய தலைவலிகள்!

* **புனிதவல்லி இளங்கோ, கடலூர்.**

? **ஒவ்வொரு முறையும் கர்நாடக அரசிடம் ''தண்ணீர், தண்ணீர்'' எனக் கெஞ்சுவதை மாற்ற ஏதாவது வழி தோன்றுகிறதா?**


! ஏன் இல்லாமல்? நீர் நிர்வாகம் இன்று வளர்ந்து விட்ட விஞ்ஞானம். பாலைவனத்தில் பசுமைப் புரட்சி செய்யும் காலம் இது! தமிழக திட்டக் கமிஷனில் அத்தகைய ஒரு விஞ்ஞானியை சேர்த்துக் கொண்டு, யோசனைகளைக் கேட்டறிந்து அமுல்படுத்தலாம்.

* **எல். மாறன், மேல்பட்டி.**

? **மனத்தின் ஊமைக் காயங்களுக்கு மருந்து என்ன?**

! வேறு நல்ல விஷயங்களில் தீவிரமாகக் கவனத்தைச் செலுத்தினால் மனத்தில் ஏற்பட்ட ரணம் மறந்து போகும்; பின்னர் மறைந்தும் போகும்.

* **வரவேற்கும் தலைவலி!**



* **தினசரி டி.வி.யில்...**



* **சு. சரவணகுமார், தூத்துக்குடி.**

? **மத்தியில் புதிய ஆட்சி ஏற்பட்டதும் மாநிலங்களில் கவர்னர்கள் ராஜினாமா செய்வது பற்றி உங்கள் கருத்து?**

! ஒரு கட்சி ஆட்சிக்கு வந்ததும், அந்தக் கட்சிக் கண்ணோட்டத்தில் பல ஆளுனர்கள், அயல்நாட்டு தூதர்கள், அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் வேறு கட்சி ஆட்சிக்கு வந்ததும் தாமாகவே ராஜினாமா செய்வதுதான் நல்லது. அப்படி ராஜினாமா செய்யாத போது ராஜினாமாவைக் கோரிப் பெறுவது, அல்லது அதிகாரிகளை மாற்றம் செய்வது அவசியமாகிறது. இதற்கெல்லாம் இடம் தராமல் இருக்க வேண்டுமானால், நியமனங்கள் தகுதி — தரம் அடிப்படையில் இருக்க வேண்டும், கட்சி நலனை உத்தேசித்து இருக்கக் கூடாது. அப்படியானால் ஆட்சி மாறும் போது புழுதி கிளம்பாது. இன்னொரு அம்சமும் உண்டு. ஆட்சி மாறும் போது அடிப்படைக் கொள்கைகள் மாறுகின்றன. முன்பிருந்த ஆட்சியின் சில கொள்கைகளை நிறைவேற்ற நியமனமானவர்கள், இன்று தேவைப்படாதவர்களாகி விடக் கூடும். அவர்களும் தாமாகவே ராஜினாமா செய்து விட்டால் பிரச்னையில்லை. இப்போது ராஜினாமா செய்திருக்க வேண்டிய சில ஆளுனர்கள் செய்யாததால்தான், எல்லாரிடமும் ராஜினாமா கோரிப் பெற வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. எல்லாமே ஏற்கப்படும் என்று தோன்றவில்லை.

நீங்கள் கேட்டவை

— தராசு

கோணல் எழுத்து நாலு...

"ராசாத்திக்கு இடுப்பு வலி கண்டுடுச்சாம்!''

அந்தக் காலை நேரத்தில் சிறகு கட்டிக் கொண்டு தெருத் தெருவாய்ப் பறந்தது செய்தி.

கிராமம், சகஜ நிலையிலிருந்து திரும்பி, ராசாத்தியின் மேல் பார்வையை நங்கூரமிட்டது. மௌனப் பரபரப்போடு ஒரு ஓட்டம் போல நடந்து போகிற பெண்கள், எதிர்ப்படுகிறவர்களிடம் அவசரமாய்ச் செய்தியைப் பரிமாறிக் கொண்டனர்.

''நம்ம ராசாத்திக்கு இடுப்பு வலி எடுத்துருச்சாமே!''

''யாரு....? அண்ணாமலை மாமா பேத்தியா?''

''அவளுக்குத்தா!''

''அடடே, தலைப்பிரசவமாச்சே!''

''சிக்கல் இல்லாம புள்ளை வவுத்தை வுட்டுக் கழிஞ்சிட்டா... அது கடவுள் புண்ணியம். 'ஆயிரங்கண்ணு மாரியாத்தா என்ன நெனைச்சிருக்காளோ...''

அந்தக் கூரை வீட்டை நோக்கி பல திசைகளிலிருந்து வேகம் வேகமாக வருகிற பெண்கள். மண்ணில் நீளம் நீளமாய் நிழல்கள் விரைகின்றன. கொஞ்ச நேரத்தில் —

அண்ணாமலை வீடு அல்லோல கல்லோலப்பட்டது. பரிதவிப்பும் அங்கலாய்ப்புமாய்ச் செயல்படுகிற பெண்கள். முதுமையைப் பொருட்படுத்தாமல் ஓடிச் சாடி உதவிகள் செய்கிற கிழவிகள்.

யாரையும் எதிர்பார்க்காமல் வேலைகள். சூறாவளியாக — புயலாக —

பிரசவம் என்றால் கிராமமே அரண்டு விடும். 'என்ன ஆகுமோ, ஏது நேருமோ' என்கிற திகில் பற்றிக் கொள்ளும். நடுக்காடு. ஒரு சிக்கல் வந்து விட்டால், ஆத்திர அவசரத்துக்கு அருகில் ஆஸ்பத்திரி கிடையாது. டாக்டரும் இல்லை. ஆஸ்பத்திரி இருக்கிற டவுனுக்குக் கொண்டு போவதென்றாலும்.. நல்ல ரோடு வசதியும் கிடையாது.

விதியேயென்று சாமி கும்பிடுவதைத் தவிர வேறு கதியேயில்லை. சுகப்பிரசவமாகி விட்டால்... அப்பாடா என்றிருக்கும். ஆத்தா புண்ணியம்' என்று கும்பிடும். வேறு 'ஏதாகிலும்' நேரிட்டு விட்டால்... துக்கப்படுவதைத் தவிர வேறு வழி? 'நாம குடுத்து வைச்சது அம்புட்டுத்தான்' என்று விதியை நொந்து கொண்டு சுய ஆறுதல் பெற வேண்டியதுதான்.

ராமாயம்மாள் வந்து விட்டாள். கண்டெலி மாதிரி சின்ன உருவம். சுறுசுறுப்புக்காரி. பயமில்லாமல் தயக்கமில்லாமல் விறுவிறுவெனச் செயல்படுவாள். பிரசவம் பார்க்கிற இந்தத் தொழிலில் ஒரு பாந்தத்துடன் — பெருமிதத்துடன் — வேலை செய்வாள்.

அவள் வீட்டுக்கு வெளியே தலைகாட்டிய போதெல்லாம் அண்ணாமலை பயத்தோடு விசாரித்தார்.

''இப்ப எப்படி இருக்கு?''

''நாம கைப் பக்குவம்தான் செய்யலாம். அதுக்கு மேலே நம்ம கையிலே என்ன இருக்கு? அந்த 'ஆத்தா' தயவுதான் வேணும்.''

பாதி நரையாகவும், மீதி செம்பட்டையாகவும் உள்ள சின்னத் தலையைக் கவலையோடு ஆட்டிக் கொண்டார் அண்ணாமலை.

வெளியே இருந்த மனிதர்களிடம் ஒரு பீதி பரவியது. பரஸ்பரம் துக்கப் பார்வைகளைக் கனத்துடன் பரிமாறிக் கொண்டனர். மனசுக்குள் முண்டுகிற உணர்வுகளை வார்த்தைப்படுத்த அஞ்சினர். எச்சிலோடு பேச்சையும் உள்ளே விழுங்கிக் கொண்டு தவித்தனர்.

கனத்த மௌனம் அந்தத் தெருவின் கழுத்தையே நெரித்தது.

வீட்டுக்குள்ளிருந்து வருகிற சிறு சிறு சப்தங்களைக் கூட திகிலுடன் கவனித்தனர்.

எல்லாம் சில நிமிடங்கள்தான்.

பூமிக்குப் புதிதாக ஒரு மழலையின் வீரிட்ட அழுகைச் சப்தம் தென்றலாய்...

வேர்வையைத் துடைத்துக் கொண்டு வெளிப்பட்ட ராமாயம்மாளிடம் வெற்றிப் பெருமிதம். ''ஆம்பளைப் புள்ளே'' என்ற சப்தமான அறிவிப்பில் வெளிப்படையாக முகம் காட்டிய மகிழ்ச்சி.

சட்டென்று இறுக்கம் விலக, மனசுக்குள்

மேலாண்மை பொன்னுச்சாமி

அடக்கப்பட்டுக் கிடந்த உணர்வுகள் பீறிட... உள்ளேயும் வெளியேயும் கலகலப்பான பேச்சுச் சப்தம். 'ஆத்தாடி. இப்பத்தான் நிம்மதி' என்ற தொனியில் ஆசுவாசப் பேச்சுக்கள்.

அந்தச் சப்தத்தை அமுக்கிக் கொண்டு, உள்ளிருந்து பலமாக ஒலித்தது ஆனந்தக் குரவைச் சப்தம்:

கூரை நிழலில் கனத்து நின்ற பெரியவர்கள், ஒரு சுமை இறங்கிய நிம்மதியுடன் டீக் கடைக்கும் தோட்டத்துக்குமாய்க் கலைந்தனர்.

வருஷக் கணக்காகப் பிரசவம் பார்க்கிற ராமாயம்மாளே... திகைத்துப்



போனாள். மறுநாள் காலையில், ராசாத்தி கிடந்த கிடப்பில் அப்படியே அரண்டு போனாள். கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. கண்ணைக் கட்டி முள்ளுக் காட்டில் விட்ட மாதிரி இருந்தது.

ராசாத்தியின் உடம்பு குணம் கெட்டு விட்டது. கையும் காலும் வெவ்வேறு திசையில் திருகிக் கொண்டும் விறைத்துக் கொண்டும்... உதடுகள் விரிய, பல்லை இளித்துக் கொண்டு...

சிரிப்பது போல வாய் விரிகிறது. இது மனிதச் சிரிப்பல்ல. அமானுஷ்யமான இளிப்பு. சவச் சிரிப்பு. சப்தமில்லாத உணர்ச்சியில்லாத சிரிப்பு. இமை தட்டாத கண்களில் பறவையாடுகிற விழிகள்.

ராமாயம்மாள் உள்ளுக்குள் இருண்டு போனாள். பதற்றத்தில் மனசு கிடந்து மருண்டது.

''இதென்ன கூத்து? பேய் பிடிச்சுடுச்சா?''

அவளுள் பீறிட்ட பயம் வெளிப்பட,

அந்தக் காலை நேர சகஜ வாழ்க்கையை மிதித்து நசுக்கிக் கொண்டு காட்டுத் தீயாகச் செய்தி பரவியது.

ராசாத்தியின் விநோதமான அசைவையும், கிடக்கிற அலங்கோலத்தையும் பார்த்த பெண்கள் எல்லோரும் ஒப்புக் கொண்டனர்.

''இது பேய்க் குணம்தான்.''

ராசாத்தி வாழ்க்கைப்பட்ட ஊரில் ஓடைக்கு அருகில் ஆலமரம் ஒன்று இருக்கிறதாம். அதில் கர்ப்பிணிப் பெண் ஒருத்தி எப்போதோ தூக்குப் போட்டுச் செத்துப் போனாளாம்.

அந்த வழியாகத்தான் தினசரி ராசாத்தி புஞ்சைக்குப் போய் வருவாளாம். ராத்திரியில் கூட ஒத்தையில் பயமில்லாமல் அலையக்கூடிய ராசாத்தியைக் கர்ப்பத்தோடு தவித்து மடிந்த அந்த ஆவிதான் பிடித்துக் கொண்டதாம்!

ஒவ்வொரு கிழவியும் ஒவ்வொரு அவலக் கதையாகச் சொல்லிச் சொல்லியழுது சோகத்துடன் பெருமூச்சு விட்டனர்.

பூவம்மா கிழவிதான் அதுகளைச் சப்தமிட்டுக் கண்டித்தாள்.

''எதுக்கடி அழுகுறீக? முச்சாமிபுரத்துலே ஒரு சாமியாடி இருக்காரு. துடியான சாமியாடி. சக்கம்மா அவரு மேலே எறங்கி அருள் பாடுவா. எப்பேற்பட்ட பேயாயிருந்தாலும் இழுத்துட்டுப் போய் ஆலமரத்துலே ரோமத்தோட ஆணியடிச்சு அறைஞ்சிருவாரு. அவரைக் கூட்டிட்டு வந்தாத்தான் ராசாத்தியை உசுரோட பாக்கலாம்.''

பூவம்மா கிழவியின் சொல்லுக்கு மறு அப்பீலே கிடையாது. ''ஐயய்யோ... யாராச்சும் போய் அந்தச் சாமியாடியைக் கூட்டிட்டு வாங்களேன்'' என்று சகல பெண்களும் நச்சரிக்க ஆரம்பித்தனர்.

பேத்தியின் புருஷனுக்குத் தகவல் சொல்லி அழைத்து வரப் போன அண்ணாமலை இன்னும் வரவில்லை.

சில பெண்கள் ராசாத்தியின் உள்ளங்கால்களில் சூரு தைலத்தைச் சூடு பறக்கத் தேய்த்தனர். ஜன்னல், வாசல் கதவுகளைச் சாத்தினர். ஓர் அகலச் சட்டியில் நெல் உமியை நிரப்பி, தீக்கங்குகளை அதில் போட்டு, ஊதி விட்டு... உரித்து வந்திருந்த வேப்பமரப் பட்டைகளைப் போட்டு, புகையை உண்டு பண்ணினர்.

அந்தச் சின்ன அறைக்குள் பயமும் திகிலும்... இருட்டும் புகையுமாய் மூச்சுத் திணறியது.

சாமியாடியைக் கூப்பிட ஒருவனை சைக்கிளில் விரட்டினர்.

கூட்டத்திலிருந்த ஆனந்தி முகச் சுளிப்போடு பார்த்தாள். பத்து வரைக்கும் படித்தவள். பயத்தையும் தயக்கத்தையும் மென்று விழுங்கி விட்டு மெல்ல ராமாயம்மாளிடம் கிசுகிசுத்தாள். ''ஏதாச்சும் டாக்டரைக் கூட்டியாந்து பாக்கக் கூடாதா?''

பூவம்மா கிழவிதான் சினத்துடன் குறுக்கிட்டாள்.

''ஏண்டி... நீ படிச்ச படிப்பு மவுசை இங்க அவுத்துக் காட்ட வந்தியாக்கும்?''

''இல்லே ஆச்சி... டாக்டர் வந்து ஊசி போட்டார்ன்னா...''

''சரிதான், நிறுத்துடி. சதைக்குத்தானடி அவரு ஊசி போடுவாரு. மனசைப் பிடிச்ச பேய்க்கு ஊசி போடுறதுக்கு, எந்தக் கொம்பன் பொறந்துருக்கான்டி? படிச்சவன் பாட்டைக் கெடுத்தானாம், எழுதுனவன் ஏட்டைக் கெடுத்தானாம்...! நீ எல்லாத்தையும் கெடுத்துச் சீரழிச்சிருவே போலிருக்கே....''

பூவம்மா கிழவியின் ஆங்காரமான சீற்றத்தில்... ஆனந்தி அப்படியே அடங்கிப் போனாள்.

எல்லோரும் சாமியாடியை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். பொறுமையில்லாமல் பூவம்மாதான் கேட்டாள்.

''சாமியாடியைக் கூப்பிட யாரு போயிருக்கிறது?''

''நம்ம சின்னச்சாமி...''

''யாரு? அந்தச் செல்லையா மவனா?''

''அவன்தான்.''

''அவனும் படிச்ச பயலாச்சே! கோண எழுத்து நாலு எழுத்தைப் படிச்சிட்டாத்தான்... கூறு கெட்டுப் போவானே! அவனும் சாமியாடியை ஒழுங்கா கூட்டிட்டு வரப் போறானோ... இல்லியோ...''

நேரம் நிம்மதியற்ற மனச் சுமையோடு ஊர்ந்தது. இளமதியத்துக்கு மேலாகி விட்டது. இன்னும் ராசாத்தி அப்படியேதான் கிடந்தாள்.

சுற்றி உட்கார்ந்திருந்த பெண்களைத் திடுக்கிட வைக்கிற தடதடக்கிற சப்தத்தில் மோட்டார் பைக்! தூசியைக் கிளப்பிக் கொண்டு வந்து நின்ற வண்டியிலிருந்து இறங்கினான் சின்னச்சாமி... கூடவே டாக்டர்.

பூவம்மா கிழவி திகைத்தாள். சின்னச்சாமியை எரித்து விடுவதைப் போலப் பார்த்தாள். ஒன்றும் பேச முடியவில்லை.■

நேரத்தை வீணாக்கும் போது ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அதுவும் உங்களை வீணாக்கிக் கொண்டுதான் இருக்கிறது!

— அரிஸ்டாட்டில்.

அமுதசுரபி

'90 பிப்ரவரி
இதழில்
ஆரம்பம்.

விக்கிரமன்

எழுதும்

கங்காபுரிக் காவலன்

சரித்திரத் தொடர்கதை



சிறுகதைப் போட்டி ரூ. 5 ஆயிரம் பரிசு

மற்றும்

- **டாக்டர் சி. வேங்கட சுப்பிரமணியம்** (புதுவைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்)
- **வி. ராமமூர்த்தி**, ஐ.ஏ.எஸ்.
- **புஷ்பாதங்கதுரை**

மாதம் ஓர்
நவமணிக் கதை
பிரபல எழுத்தாளர்
வழங்கும் சிறந்த சிறுகதை.

ஸ்ரீராம் டிரஸ்டில் ரூ. 500/- முதலீடு செய்யுங்கள். ஒவ்வொரு மாதமும் அமுதசுரபி மாத இதழ் இலவசம். ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி மலர் பதிவுத் தபாலில் இல்லம் வந்தடையும்.

அமுதசுரபி

SHRIRAM GROUP COMPANIES
MADRAS

விலை ரூ. 4/-

145, லிங்கிச் செட்டி தெரு,
சென்னை-600 001.
போன் : 528545

ADWAVE/ST/3976

உள்ளே நுழைந்த டாக்டர்... அங்கிருந்த சூழலைப் பார்த்து விட்டு எரிச்சல்பட்டான்.

"ஏன் இப்படி இருட்டு? முதல்லெ வெளிச்சத்தை விடுங்க. ஜன்னலைத் திறங்க!"

மண்டி போட்டு உட்கார்ந்தார். ராசாத்தியைப் பார்த்தார். நாடி பார்த்தார். விறைத்துக் கொண்டு போகிற கை விரல்களை நிமிர்த்தி, திருப்பிப் பார்த்தார்.

"என்னம்மா செய்யுது?"

"நேத்துதான் குழந்தை பொறந்துச்சு. அதுக்குப் பொறகு ராத்திரியெல்லாம் நல்லாத்தான் இருந்தா. விடிஞ்ச பிறகு தான்... இப்படி... காத்து கருப்பு அடிச்சிருக்கும்னு...."

எல்லோரும் மௌனமாக இருந்தனர். ராமாயம்மாள்தான் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். டாக்டர் மெல்லிசாகச் சிரித்தார்.

"காத்துக்கு கலரெல்லாம் கிடையாது. கருப்புக் காத்துமில்லே. பச்சைக் காத்துமில்லே. சரி... கொஞ்சம் வெந்நீர் கொண்டாங்க."

என்ற டாக்டர்... பூவம்மா கிழவியைப் பார்த்தார்.

"இந்த உமிச் சட்டியையெல்லாம் காலி பண்ணுங்க. கதவைத் திறங்க. காத்து வரட்டும்.."

"இல்லேய்யா... பச்சை ஒடம்புக்குக் குளுந்த காத்து ஒத்துக்காது..."

"எனக்குத் தெரியும்மா... மொதல்லெ நான் சொல்றதைச் செய்யுங்க. தம்பி... ஒரு டேபிள் ஃபேன் வாங்கிக் கொண்ணாந்து வைங்க."

வெந்நீர் வந்ததும் ஊசியைப் பிச்சினார். கால்ஷியம் இன்ஜெக்ஷனை சிரிஞ்சில் ஏற்றினார். ராசாத்தியின் கையில் நரம்பைத் தேடிக் கண்டுபிடித்து ஊசி போட்டார். இரண்டு ஊசி.

"பேய் பூதத்துக்கெல்லாம் சுடுகாடுதான் பிடிக்கும். நம்மளைப் பிடிக்காதும்மா. ஏற்கெனவே சுண்ணாம்புச் சத்து கொறைவான ஒடம்பு. பிரசவத்துலே ரொம்ப ரத்தம் போயிருக்கும். அதனாலேதா இந்த வலிப்பு. ஊசி போட்டிருக்கேன்... இனிமே பேயெல்லாம் ஓடிப் போயிடும்..."

டாக்டரின் அமைதியான விண்டல்... எல்லோருக்கும் ஆறுதலாக இருந்தது. இனி பயப்பட ஒன்றுமில்லை.

எங்கிருந்தோ கொண்டு வரப்பட்ட டேபிள் ஃபேனை ராசாத்தியின் அருகில் வைத்து, பிளக்கைத் தேடிச் சொருகினார், டாக்டர். 'விர்ர்'ரென்ற இசையுடன் கிளம்பிய காற்று, ராசாத்தியின் கூந்தலைப் பரத்தியது.

கொஞ்ச நேரம்தான்.

இருகல், விறைப்பு எல்லாம் நின்று போய் ராசாத்தியின் கை கால்கள் துவண்டன. கண்கள் மூடிக் கொண்டன. முகத்தில் மெல்ல மெல்ல திரும்பி வந்தது உயிர்க்களை.

டாக்டர் சின்னசாமியைத் தேடினார். மாத்திரைகள் கொடுத்தார். உணவுப் பக்குவம் சொன்னார். முப்பது ரூபாயைப் பெற்றுக் கொண்டு புறப்பட்டு விட்டார்.

பெண்களுக்கு ஆச்சர்யமும் நிம்மதியும். சின்னச்சாமியை மகிழ்ச்சியோடு சூழ்ந்து கொண்டனர். ஒரு பெரியவர் கேட்டார்.

"சாமியாடியைக் கூட்டி வரத்தானே போனே? பெறகு எப்புடி டாக்டரைக் கூட்டிட்டு வந்தே?"

சுற்றிலும் பார்த்து விட்டுச் சொன்னான்.

"உங்க கூடச் சேர்ந்து... ராசாத்தியைச் சாக விடுறதுக்கு எனக்குச் சம்மதமில்லே. அதான்... டாக்டர்கிட்டே போனேன். அவரும் வர மாட்டேன்னுதான் சொன்னாரு. அப்புறம்... சாமியாடி விவரத்தையெல்லாம் சொல்லி கெஞ்சிக் கூத்தாடுன பெறகுதா அவரு புறப்பட்டாரு."

எல்லோரும் அவனைச் சந்தோஷமாய்ப் பார்த்தனர்.

"என்ன இருந்தாலும் நாலு எழுத்து படிச்சிருந்தா... அதுக்கு ஒரு புத்தி வேலை செய்யத்தான் செய்யுது. நாம பட்டிக்காட்டுக் கழுதைக. படிக்காம கண் அவிஞ்சு கெடக்கோம். நமக்கு என்ன எழவு தெரியுது?"

என்று அங்கலாய்த்த பூவம்மா கிழவியை அர்த்தத்துடன் பார்த்தான் ஆனந்தி.



— ஜெ. இ. குமார்.


ஏழாவது இரவு
15
கதை:
அபர்ணா நாயுடு
சித்திரம்:
மறுநாள் பகல் யோசனையிலேயே கழிந்தது.
கடந்த இரு நாட்களில் எதிர்ப்பட்ட குறுக்கீடுகள் எந்தப் பக்கமும் நகர முடியாமல் சிறைப்பட்டுவிட்ட உணர்வைக் கொண்டு வந்திருந்தன. பின்னணியில் மறைந்திருந்து யாரோ ஒருவன் எடுத்த அந்த நடவடிக்கைகள் அவர்களுடைய சந்தேகத்தை உறுதிப்படுத்துவதாகவே இருந்தன.
அடுத்த நபர் அந்தப் போலீஸ் அதிகாரி. உணர்ச்சி வசப்பட்டு, வசுமதியின் மரணம் பற்றித்தான் கொண்டிருந்த கருத்தை முரட்டுத்தனமாக ரஞ்சனா வெளியிட்ட போதுகூட அவர் தம்முடிவை மாற்றிக் கொள்ளவில்லை. அவர்களைத் தொடர்ந்து செல்ல விடாமல் தடுத்துத்திருப்பியனுப்புவதில் உறுதியாக நின்றார். அவர் இவ்வாறு நடந்து கொண்டது இது முதல் முறையல்ல. 'இந்த விவகாரத்தில் அவர் எங்கேயோ, எப்படியோ சம்பந்தப்பட்டிருக்கிறார். அது நிச்சயம்' என்று தோன்றியது.
ஆக, இலக்கு சரியானது. பாதையை மாற்ற வேண்டும் என்று முடிவு செய்தார்கள்.
ரஞ்சனா சொன்னாள்.
ஆண் துணை யில்லாம இந்த விவகாரத்துல இறங்க முடியா துன்னு தோணுது.
ஆனா. அவசரப் பட்டு அந்த முடிவுக்கு வந்துடாதே. அது கூடாது. காரணம்...
..வசுமதி ஒரு சிலரோட தான் பழகினா அந்தச் சில பேரைத்தான் எனக்கும் பழக்கம். அவங்க இட்ட உதவி கேட்க எனக்கு இஷ்டமில்லை.
ஏன் அப்படி?
அவங்களில தான் ஒருத்தர் அந்தக் கொலைக்குக் காரணமா இருக்க முடியும்னு நினைக்கிறேன் அதனாலதான்..
...அத்தோட, அந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டரையும் நம்புறதுக்கு இல்லை. ஸோ, அந்தப் பாதையும் நமக்கு அடைச்சு போச்சு.
அப்போ?









பதில் சொல்லாமல் எழுந்து சென்று டெலிபோனில் பேசினாள் மாலினி.

பத்தாவது நிமிடம் அந்த வீட்டு வாசலில் ஒரு கார் வந்து நின்றது. இரண்டு பெண்கள் இறங்கி உள்ளே வந்தார்கள்.


மாலினி அவர்களை வரவேற்றாள். காப்பி கொடுத்து உபசரித்தாள். வீடியோவில் ஒரு காஸெட்டைச் செருகி ஓடவிட்டாள். வந்த இருவரும் அந்த ஆங்கிலப் படத்தைச் சாய்ந்து உட்கார்ந்து சின்னத் திரையில் பார்த்து ரசிக்கத் தொடங்க, ரஞ்சனாவை அழைத்துக் கொண்டு வாசலுக்கு வந்தாள்.

விருட்டென்று இருவரும் உள்ளே அமர, கார் ஓடத் தொடங்கியது. ஏதோ சொல்லத் தொடங்கிய ரஞ்சனாவை, சைகை செய்து அடக்கினாள் மாலினி. பத்து நிமிட நேர மௌனப் பயணத்துக்குப்பின் அந்த நட்சத்திர ஓட்டலின் போர்ட்டிகோவை அடைந்து அந்தக் கார் நின்றது.

இறங்கி உள்ளே சென்றார்கள்.

கார் நகர்ந்த இரண்டாவது நிமிடம் அந்த மோட்டார் சைக்கிள் அங்கே வந்து நின்றது. அதை அறியாமலே அவர்கள் உள்ளே மாடிப் படிகளில் ஏறிக் கொண்டிருந்தார்கள்.

— தொடரும்



டார்டாய்ஸ்
கொசு வர்த்திச் சுருள்

தயாரிப்பாளர் : பாம்பே கெமிக்கல்ஸ் லிமிடெட்
ஃபோர்ட், பம்பாய்-400 023. ஃபோன் : 273831.



தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரிக்கு விநியோகஸ்தர்கள்: சாந்திலால் பிரதர்ஸ், 7, காசிச் செட்டி சந்து, 2வது மாடி, சென்னை — 600 079. ஃபோன்: 569986, 560414, 569826.

அதிகாலை ஆகியும், கண்களில் தூக்கம் பிடிக்காமல், கலங்கிய மனத்துடன் மலங்க மலங்க விழித்துக் கொண்டு, பலவித யோசனைகளில் மூழ்கியிருந்தார் அரவிந்தன் — பன்னிரண்டாயிரம் தொழிலாளர்களை உள்ளடக்கிய ஒரு பொதுத் துறை நிறுவனத்தின் ஏரியா மானேஜர் அவர்.

பழகுவதற்கு இனிமையானவர். தமக்குக் கீழே பணியாற்றுகின்ற தொழிலாளர்களின் உள்ளத்துணர்வுகளைப் புரிந்து கொண்டு பிரச்னைகளை அணுகும் பெருந்தன்மையாளர் என்று பெயரெடுத்தவர்.


பதினைந்து வருட சர்வீஸில் ஒரு முறை கூட எந்தவொரு பிரச்னையிலும் மாட்டிக் கொள்ளாத அரவிந்தனுக்குப் போன வாரம் சூபர்வைசர் சுகுமாரன் ரூபத்தில் தலைவலி ஆரம்பித்தது.

அரவிந்தன் கட்டுப்பாட்டில் வேலை செய்யும் சுகுமாரனுக்கும் ஒரு தொழிலாளிக்கும் ஓ.டி. கொடுப்பது தொடர்பான சின்னப் பிரச்னை.

ஆரம்பத்தில் வெறுமனே வாய்ப் பேச்சில் தொடங்கி, பின் சொந்த விவகாரங்களைத் தொட்டு இழுத்துப் பேசும் அளவுக்குத் தனி நபர் கௌரவப் பிரச்னையாக உருவெடுத்தது. 'ஒரு சூபர்வைசர் தமக்குக் கீழே வேலை செய்யும் தொழிலாளியை எப்படி இப்படியெல்லாம் திட்டலாம் என்ற பேச்சு காட்டுத் தீயாக அரை மணி நேரத்திற்குள் அந்த ஏரியா முழுவதும் பரவி விட்டது. மறுநாள் 'டே ஷிப்ட்' டிலும் 'டூல் டவுன்' பண்ணுகிற வரை பூதாகர பிரச்னையாக விசுவரூபம் எடுத்தது.

''சார்... வர்ற வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்குள்ள சுகுமாரன் ஷாப்

கலங்கிய மனிதம்





அடுத்த இதழில்

அசத்துவாரா அஸருத்தீன்?

—கவர்ஸ்டோரி

[redacted]

...ஃப்ளோர்லயே எல்லா தொழிலாளர்கள் முன்னிலையிலும் தண்டபாணிகிட்ட நிபந்தனையற்ற, பகிரங்க மன்னிப்பு கேட்கணும்... இல்லை, அடுத்த நாளே காலவரையரையற்ற 'ஸ்ட்ரைக் நோட்டீஸ் 'உங்க டேபிளுக்கு வரும்...!'' — எந்தவொரு பிரச்னையிலும் தன்னிடம் இவ்வளவு கட் அண்ட் ரைட்டாகப் பேசாத தொழிற் சங்கத் தலைவர், இப்படிச் சொன்னதில் ஓரளவுக்கு நியாயம் இருப்பதையும் உணர்ந்தார் அரவிந்தன்.

''சார்... என் உயிரே போனாலும் எனக்குக் கீழே வேலை செய்யுற கண்ட கழுதைகள்ட்ட மன்னிப்பு கேட்கணுங்கற அவசியமில்லை எனக்கு. வேணும்ன்னா இந்த வேலையையே ராஜினாமா பண்ணுவனே தவிர மன்னிப்பு மட்டும் கேட்கவே மாட்டேன்...!''

சுகுமாரனின் பிடிவாதமான பதில் அவர் எந்தச் சூழ்நிலையிலும் மன்னிப்பு கேட்க மாட்டார் என்பதைத் தெளிவாக உணர்த்தியது.

இருபது வருட சர்வீஸ் முடிந்த ஒரு சூபர்வைசரை இழக்க மனமில்லை அரவிந்தனுக்கு. அதே சமயம் தனபால் கொடுத்த கெடு தேதி நேற்றுடன் முடிந்து இன்று காலை வேலை நிறுத்த நோட்டீஸ் டேபிளுக்கு வந்து விடுமே... அடுத்த மாதம் கிடைக்கவிருக்கின்ற தம்முடைய சீனியர் மானேஜர் பி ர மோ ஷ னை இந்த நிலைமை வெகுவாகப் பாதிக்குமே! என்று அரவிந்தனின் மனம் ஆடிக் காற்றுக் காகிதமாய் ஒரு நிலையின்றி அலைந்தது.

விடிய விடிய உள்மனக் காட்சியில் பல தரப்பட்ட எண்ணத் திரைப் படங்கள் ஓடி மறைந்தன. ஆனால் பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஒரு வழியும் புலப்படவில்லை.

முகம் கப்பிய சோகத்துடன், காலை டிபனைக் கூடச் சரிவரச் சாப்பிடாது, வேலை நிறுத்த நோட்டீஸை எதிர்பார்த்துத் தம் அலுவலக அறைக்குள் நுழைந்தார் அரவிந்தன்.

எதிர்பார்த்தது போலவே அலுவலகம் தொடங்கி அரை மணி நேரம் கழித்து தனபால் வந்திருப்பதாகப் பியூன் சொன்னான்.

உள்ளே வரச் சொன்னார்.

டிஸ்டம்பர் கலரில் கையில் ஒரு கவருடன் உள்ளே நுழைந்தார் தனபால்.

உட்காரச் சொன்னார்.

'தேங்க்ஸ்' என்றபடி உட்கார்ந்தார்.

வாடிய புன்னகையை வரவழைத்துக் கொண்டு ''சொல்லுங்க தனபால்!'' என்றார் அரவிந்தன்.

தனபால் எதுவும் சொல்லாமல் கையில் இருந்த கவரை மட்டும் அரவிந்தனிடம் நீட்டினார்.

உள்மனம் உதறல் எடுக்க, கவரை வாங்கி — காதைக் கிழித்து — ஊதி, உள்ளிருந்த பேப்பரை உருவி வெளியில் எடுத்தார்.

அரவிந்தனின் கண்கள் அவசர அவசரமாகக் கடிதத்தில் ஊர்ந்த போது ஆரம்பத்தில் இறுகியிருந்த அவரின் முகம், மெல்ல மெல்ல இளகி, இறுதியில் சந்தோஷத்தால் பளிச்சிட்டது.

தனபால் நீட்டிய கடிதத்தில் இருந்தது இதுதான்:

''நாங்கள் தொடங்கலாம் என்றிருந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை அடுத்த மாதம் தங்களுக்குக் கிடைக்கவிருக்கின்ற பதவி உயர்வைக் கருத்தில் கொண்டு, தற்காலிகமாக ஒத்தி வைத்திருக்கின்றோம். பிரச்னை சுமுகமாக முடியா விட்டால் போராட்டம் என்றைக்கு இருந்தாலும் நடந்தே தீரும்...''

கடிதத்தைப் படித்து முடித்து நிமிர்ந்த போது அரவிந்தனுடைய கண்களின் ஓரங்களில் நீர்த் திவலைகள் தொக்கி நின்றன.

''சார்... என்னைப் பொறுத்தவரைக்கும் ஒரு பொது பிரச்னையினால தனிநபர் ஒருவர் பாதிக்கப்படக் கூடாது... அது எங்க தொழிலாளியா இருந்தாலும் சரி... நீங்களா இருந்தாலும் சரி...'' என்றார் தனபால்.

எதிரே உட்கார்ந்திருந்த தனபாலை நன்றி ததும்பப் பார்த்துக் கும்பிட்டார் அரவிந்தன்.

கும்பிட்ட கைகளைச் சட்டென்று எழுந்து கோத்துப் பிடித்தார் தனபால்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.




கல்பனுவின் மேனியழகு எழிலோவியமாச்சு! ஒளிசுடர வைத்தது ஃபேர் அண்ட் லவ்லி.

"ஆச்சா!" கிறுகிறுக்கிறாள் கல்பனா. பொற்சிலைதான் பேசுதோ என மலைக்கிறான் அருண், வண்ண மலரில் பதிந்த வண்டுக் கண்கள் கொட்டாமலே. செப்பிடு வித்தை இது ஃபேர் அண்ட் லவ்லியின் ஒப்பில்லாக் கைவண்ணம். இரண்டே மாதங்களில் இதமாகப் பூத்தது இயல்பான சிகப்பழகு. நங்கையின் மேனியிலே நல்லொளி சுடர. பெற்ற நிறப் பொலிவை இவ் வண்ணமே பேணிக் காக்க— கல்பனா என்றும் வேளைதவறாமல் இட்டு வருகிறாள் ஃபேர் அண்ட் லவ்லி. இனி, இயற்கைக் காட்சிகள் அல்ல, எழிலரசி கல்பனா தான் ஓவியன் அருணுக்கு வண்ணக் கற்பனை உலகமே.


கல்பனாவைப் போலவே நீங்களும் கவனிக்கத்தக்க சிகப்பழகை அடைந்திடலாம்— ஃபேர் அண்ட் லவ்லி துணையோடு.

ஒரு முக்கிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பு...


ஃபேர் அண்ட் லவ்லி. இயல்பாக உங்களை சிகப்பழகியாக்க இதிலுள்ள ஒப்பற்ற ஃபார்முலா— இரு முக்கிய வழிகளில் வேலை செய்கிறது.



ஒன்று: சருமத்தின் அடியாழத்தில் செயல்பட்டு, உடல் கறுக்கும் உள்வினையைத் தடுக்கிறது—வேறெந்த க்ரீமுக்கும் இது இயலாத சாதனை. மற்றொன்று: இதிலுள்ள இரட்டை ஸன்ஸ்க்ரீன் ஆற்றல், உடல்கறுக்க வைக்கும் சூரிய ஒளியை உட்புகாதபடி தடுத்து நிறம் காத்திடுகிறது. ஆகவே 6 முதல் 8 வாரங்களில் புதிதாக மேலெழும்பும் கொழுந்துச் சருமப் படலங்களில் செவ்வையான சாயல் மிளிரும். அன்றாடம் இருமுறை ஃபேர் அண்ட் லவ்லி— நாள் தவறாமல் உபயோகித்து வந்தால், மென்மை கொஞ்சும் இயல்பான சிகப்பழகு உறுதியாக உமதாகி விடும்.



ஃபேர் அண்ட் லவ்லி துவங்குமுன்



ஃபேர் அண்ட் லவ்லி உபயோகிக்கும் நாட்களில்

உபயோக முறை:

கழுவிக் கொண்ட முகம், கழுத்து, கரங்கள் மீது ஃபேர் அண்ட் லவ்லி க்ரீமை பொட்டுப் பொட்டாக இட்ட பின், மேல் நோக்கித் தேய்க்க வேண்டும் மெதுவாக. ஃபேர் அண்ட் லவ்லி, செயல்படத் துவங்கும் போது சற்றே கூசும் உணர்வு ஏற்படுமானால் கவலை வேண்டாம், விரைவில் அது மறைந்துவிடும்.

எளிதில் உள் உறிஞ்சப்படும் குறைவு குணமோங்கி முன்னிலும் மென்மையாக வருகிறது ஃபேர் அண்ட் லவ்லி, ஒரே சீராகப் பரவுகிறது சருமத்தில் மேலும் எளிதில் உறிஞ்சப் படுகிறது. உடகார உணருவீர் இம் மாறுதலை...பிறரு காண்பீர் கண்ணார.

ஃபேர் அண்ட் லவ்லி பற்றி மேலும் கேட்டறிய விரும்பினீரானால் எழுதுங்கள் இம் முகவரிக்கு:
திருமதி கவிதா குமார், ஃபேர் அண்ட் லவ்லி அட்வைஸ், பி.ஓ. பாக்ஸ் 758,
பம்பாய்-400 021.

ஃபேர் அண்ட் லவ்லி

சிகப்பழகு க்ரீம்



கண்காணும் சிகப்பழகை உமதாக்கும்...இயற்கைக்கே உரிய இதமான வழியில்

TAS FAL 67 2517 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

REGISTERED NO. M. 4392

Registered as Newspaper in Srilanka